
மங்கையர் மலர்
Mangayar Mal
ஏப்ரல் 84 ரூ. 2


இந்தியாவில் உள்ள ஒரு மின்விசிறி. அதிக பரப்பிற்கு அதிக
அளவு காற்றை வீசுவதற்காக, 127 எம்.எம். அகல முனைகளை
உடைய பிளேடுகள் கொண்டதாய் உள்ளது.
அதன் பெயர் கேதான்
கேதான்* மின்விசிறியில் உள்ள சின்னச் சின்ன அம்சங்கள் அதை விசேஷமானதாக ஆக்குகின்றன. இதன் பிளேடு முனைகள் அகலமானவை. ஆகவே பிளேடுகளின் செயல் திறன் உயர்வு. ப்ரி-லோடிங் முறையில் கிரீஸ் நிரம்பிய பால்-பேரிங்குகள் தேய்மானத்தைக் குறைக்கின்றன. ஆயுளை நீடிக்கச் செய்கின்றன; மற்றவைகளில் 14 அல்லது 16 போல்கள் இருக்க, கேதான் மோட்டாரில் 18 போல்கள் உள்ளன. ஆகவே செயல திறனில் மேம்பாடு.
இவை மட்டுமா? சென்ட்ரிஃபுகல் முறையில் டை-காஸ்ட் செய்யப்பட்ட ரோட்டார், மெஷின் மூலம் தாமிரக் கம்பி சுற்றப்பட்ட ஸ்டேடர், 32% அதிக செயலாற்றல், ISI நிர்ணயித்துள்ளதைவிட 10% அதிக அளவு காற்று, மின் செலவில் 30% மிச்சம் ஆகியவற்றிற்கு இவை வழி வகுக்குகின்றன.
வடிவமைப்பிலும் வர்ணச் சேர்க்கையிலும் இணையான ரெகுலேட்டரிலும் இதற்கு இணை எதுவுமில்லை. ISI முத்திரை கொண்ட இதற்கு 5 வருட உத்திரவாதம் உண்டு. சந்தேகமில்லாமல் ஒரு ஒப்பற்ற மின்விசிற் கேதான.
* புள்ளி விவரங்கள் கேதான் பிரியம் 1200 எம்.எம். (48") வீச்சுள்ள மின்விசிறிகளவை
கேதான் உண்மையிலேயே முதன்மையான மின்விசிறி
HTC-SDL-5384

ஹிந்தி பேசிப் பழகுங்கள்



Big Size

Pages : 266

Price : Rs. 20/-

Postage Free

தமிழ்-ஹிந்தி லர்னிங் கோர்ஸ்

இதோ, அதற்கான வழி—

- தமிழ் வழி நொடிப்பொழுதில் ஹிந்தி கற்க அற்புதமான உத்திகள்.
- அன்றாடத் தேவைகளை ஹிந்தியிலேயே பேசி நிறைவேற்ற அவசியமான ஹிந்தி மொழியறிவு தரும் 2,500 'தமிழ்-ஹிந்தி' வாக்கியங்கள்.
- ஹிந்தி வாக்கியங்கள்/சொற்றொடர்களின் உச்சரிப்பைத் 'தமிழி'ல் கொடுத்துள்ளது.
- ஹிந்தி மொழி வழங்கும் மாநிலத்துக்கு இடமாற்றம் பெறும் நிலையிலுள்ள அலுவலர்க்கும், ஹிந்தி பேசும் நகரங்களில் வர்த்தக நிறுவனங்கள் நடத்துவோர்க்கும் அத்தியாவசியமானது. விற்பனையாளருக்கோ உற்றதுணையானது.

போலிப் பெயர்களைக் கண்டு ஏமாறாதீர்கள். "ரேபிடெக்ஸ் கோர்ஸ்" என்றே கேட்டு வாங்குங்கள்.

வகுப்புகளில் சேராமலேயே, ஆசிரியர் உதவியை நாடாமலேயே, ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் நீங்கள் தடையின்றிப் பேசலாம், கடிதங்கள் வரையலாம்.

'ரேபிடெக்ஸ்' என்பது தில்லி புஸ்தக் மஹாலால் பதிவுசெய்யப்பட்ட "டிரேட் மார்க்" ஆகும்.

திருப்தி இன்றேல் பணம் திருப்பித் தரப்படும்

AVAILABLE AT: Leading bookshops, Railway Book Stalls Higginbotham's or ask by V. P. P. from

PUSTAK MAHAL
Khari Baoli, Delhi-110006
10-B, Netaji Subhash Marg, New Delhi-110002



சில பிரச்னைகள்...

சில வார்த்தைகள்...

மஞ்சுளா ரமேஷ்

மருத்துவ ஆலோசனைக்காக ஒரு டாக்டரின் கிளினிக்கில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் சென்றிருந்த இரண்டு பெண்களில் ஒருத்தி ரொம்பவும் ஸ்ட்ராங்காக டாக்டரிடம் பேசிக் கொண்டிருந்தாள்—

''இல்லே டாக்டர், நீங்க என்ன சொன்னாலும் இந்த டெஸ்ட்டைச் செஞ்சே ஆகணும். எனக்குள்ளே இருக்கிற அந்த ஜீவன் ஆணா, பெண்ணான்னு தெரிஞ்சுகண்டே ஆகணும்...''

அப்படியென்ன அவசியம் அவளுக்கு? அவளைப் பார்த்தால் நிறைய குழந்தைகளைப் பெற்றவள் போலவும் இல்லே. கருவிலிருக்கும் சிசு என்ன குழந்தை என்று தெரிந்து கொள்ளும் டெஸ்ட். இவளுக்கு எதுக்கு? அதையே தான் டாக்டரும் கேட்டுக் கொண்டிருந்தார்.

ரொம்ப உறுதியாக மறுத்தாள் அந்தப் பெண்.

''ஏம்மா, வரிசையாப் பொண்ணுங்களாப் பெத்துண்ட மாதிரி பேசறே? இதுதான் உனக்கு முதல் குழந்தை. பெண்ணா இருந்தாத்தான் என்ன...?''

''நோ டாக்டர். எனக்குப் பெண் பிறக்கக் கூடாது. இந்த உலகத்தில பெண்களாய்ப் பிறந்து படற கஷ்டங்கள் போதும். என்னால இன்னொரு பாவப்பட்ட ஜென்மம் இந்தப்பூமிக்கு வர வேண்டாம்...''

''என்னம்மா சொல்றே நீ...?''

''ஆமாம் டாக்டர். உங்களுக்குத் தெரியாததில்லே. நா கல்யாணத்துக்கு முன்னாடி டான்ஸ் ப்ரோக்ராம் எத்தனை பண்ணினேன்? பாட்மின்டன்ல காலேஜ் சாம்பியன் நான்தான். 'லலிதா, உனக்கு மட்டும் எப்படி எந்த டிரெஸ் போட்டாலும் இவ்வளவு மேட்ச்சா பொருந்தறது?'ன்னு சண்டைக்கு வந்த ப்ரெண்ட்ஸ் எத்தனை பேர்? இப்போ எப்படி இருக்கேன் பார்த்தீங்களா?''

''அதுக்கும் இதுக்கும் என்னம்மா சம்பந்தம்?''

''சம்பந்தம் இல்லாம என்ன? காலையில நாலுக்கு அலாரம் வச்சு எழுந்தா மாமியார் தூங்கற மாதிரி பாவ்லா பண்ணிண்டே நான் எப்படிக் காபி போடறேன்னு நோட் பண்ணுவா. சமையல் எட்டுக்கு முடிச்சு, இவர், ரெண்டு மச்சினர், நாத்தனார்



எல்லோரையும் . ஆபீசுக்கும், ஸ்கூலுக்கும் அனுப்பிச்சிட்டு எனக்கு நிக்க நேரம் இருக்கிறதில்ல. ஒன்பதரைக்கு நான் லேடீஸ் ஸ்பெஷலைப் பிடிச்சாகணுமே. இல்லேன்னு மானேஜர் சிடுமூஞ்சிய யார் சமாளிப்பா. சாயங்காலம் ப்ளாஸ்க்ல வச்ச காபியக் குடிச்சுட்டு உக்கார்ந்திருக்கிற மாமியாருக்கு நான் போனவுடனே புது காபி வேணும். அப்புறம் டிபன், ராத்திரி சாப்பாடு... நாலு மணிக்குத் திரும்பி... எனக்கு எங்கே விடுதலை டாக்டர்....?''

அந்தப் பெண்ணின் குரல் தழுதழுத்தது. டாக்டர் மென்மையாக அவளைத் தேற்றினார்.

''லலிதா, எனக்கு உன் மனக் கஷ்டம் புரியுது. நீ மட்டுமில்லே. இன்னிக்கு உன்ன மாதிரி இயந்திரமா உலவற பெண்கள் லட்சக்கணக்கில இருக்காங்க. எத்தனை பெண்களோட கதைங்களைப் பொழுது விடிஞ்சாக் கேட்டுகிட்டு இருக்கேன்...?''



''கேட்டுக்கிட்டு இருக்கீங்க இல்ல. அப்படி இருக்கிறப்ப இன்னொரு பெண் இந்த உலகத்துக்கு அவசியமா டாக்டர்? கல்யாணத்துக்கு முன்னாடி எனக்குன்னு ஒரு சுயசிந்தனை, லட்சியம், இப்படியெல்லாம் இருக்கணும்கற கனவுகள். எப்படி எப்படியெல்லாமோ இருந்தேன். என் தலை குனியா வ குனியாது. பெரிய பாரதி கண்ட புதுமைப் பெண்ணுன்னு நினைப்பு... இப்ப? ''இன்னிக்கு நீங்க கட்டிக் குடுத்த தேங்காய் சாதம் ஊசியேப் போச்சு. என் ஃப்ரெண்ட்ஸெல்லாம் கேலி பண்றா. உங்களுக்குச் செய்ய இஷ்டமில்லேன்னா சொல்லிடுங்க?''ன்னு வேணும்னுட்டுத் தன் அண்ணா எதிர பேசற நாத்தனார் முன்னாடி தலையக் குனிஞ்சுக்கிட்டு இருக்கணும். ஏன்னா அவ டிரைவ்–இன்–னுக்குப் போகப் பணம் கேட்டு நெஜமாவே எங்கிட்ட இல்லாததாலே கொடுக்கலேங்கறதுக்குப் பழிவாங்கல். பணம் எப்படி இருக்கும் எங்கிட்ட? சம்பளத்தைக் கொடுத்துட்டுப் பஸ்ஸுக்குக் காசு வாங்கிட்டுப் போறேனே...''

அந்தப் பெண் பேசி முடித்து விட்டு வெளியே வர ஒரு மணி நேரமாயிற்று. எனக்கு அவள் பிரச்னை வருத்தம் எல்லாம் புரிந்தது.

பெண் குழந்தைகளை —

இந்தக் காலத்துப் பெண் குழந்தைகளை ரொம்ப அருமையாக, செல்லமாக வளர்க்கிறார்கள். விதவிதமான டிரெஸ், கான்வென்ட் படிப்பு, கல்லூரிப் படிப்பு... சமையல் கட்டுப் பக்கம் போக வேண்டிய அவசியமே இல்லை. புத்தகங்கள், அது கற்பிக்கும் லட்சியங்கள், வெளியுலகம், அந்த உலகத்திலுள்ள சினிமாக்களும், பத்திரிகைக் கதைகளும் தரும் கற்பனைகளும் —

ஆனால்...

எல்லாம் தாலி கழுத்தில் ஏறியவுடன் ஆகாயத்திலிருந்து கீழேகொடூரமாக இழுத்தெறியப்படுகிறார்கள். 'எங்கே தன் மகனை இந்தப் புது மலர் இழுத்துக் கொண்டு போய் விடுமோ' என்று மாமியாரின் பயம். 'இவளும் சம்பாதிக்கிறாள். நம்மை மதிக்காமல் போய் விடுவாளோ? என்ற கணவன்தன் ஈகோவைக் காப்பாற்றிக் கொள்ளக் காட்டும் உதாசீனம். நாத்தனார் மைத்துனர்களின் சந்தேகக் கண்கள்...



கரும்பாகத் தன் வாழ்க்கை இனிக்கும் என்று வந்தவள் சக்கையாகித் தொங்குகிருள். சம்சார அவசரங்களில் பட்டு, விழுந்து, எழுந்து திரும்பிப் பார்ப்பதற்குள் வருடங்கள் ஓடிவிடுகின்றன.

அன்பும், அடக்கமும் புன்சிரிப்புமாக கணவனின் கையே அடைக்கலமாக உள்ளே நுழைந்தவள், சிடுசிடுப்பும் கடுசொல்லும் அலங்கோல அவதாரமாக மாறிவிடுகிருள். இதிலே இவளுடைய பழைய லட்சியங்களைப் பற்றிச் சிந்தனைகளைப் பற்றி நினைக்கத் தான் நேரமேது...

ஏன் பெண்களுக்கு இந்த அவல நிலை?

நிழலிலே இளைப்பாறி நிஜத்துக்கு வரும்போது அதன் சின்னத்தனங்களை தாங்க முடியாமல் வெம்பி, வெதும்பி தோல் சுருங்கி, நீங்காத வடுக்களுடன்.

''ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் ஒரு பெரிய சோகக் கதையே இருக்கிறது. அதிலே அவள் பட்ட அவமானங்கள், துடைத்துப் போட்ட ஆசைகள், எரித்துக் கொண்ட இச்சைகள்... ஒவ்வொருத்தியுமே ஒரு காவியத் தலைவிதான் மேடம்...''

என்ருர் ஒரு பிரபல எழுத்தாளர் ஒருமுறை.

இதெல்லாம் சரிதான். ஆனல் இந்தச் சோகங்களுக்கு முடிவு அந்தப் பெண் எடுக்கும் முடிவுதானு? இதை ஒரு நிமிஷம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''இனி பெண் குழந்தைகளையே நாங்கள் பிறக்கவிட மாட்டோம்...'' என்று உறுதி எடுத்துக் கொள்வது தான் முடிவா?

இது பிரச்னையைத் தீர்க்கும் வழியல்ல. பிரச்னையிலிருந்து நாம் ஓடப் பார்க்கும் வழி. இப்படித் தப்பித்துக் கொண்டு விட்டால் பிரச்னைகள் தீர்ந்து போய் விடாது.

இப்பொழுது படித்த பெண்களின் சமுதாயம் உருவாகி வருகிறது. அவர்களாவது தங்கள் குழந்தைகளைவெறும் கனவுகளில் வாழும் குழந்தைகளாக வளர்க்க வேண்டாம். 'இந்த உலகம் என்பது கனவு காண்பவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல. உழைப்பாளிகளுக்கு: உலகை அனுசரித்துப் போகிறவர்களுக்கு: வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ருல் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் நடந்தே ஆக வேண்டும் என்று நடப்பவர்களுக்காக, ஏற்படுத்தப்பட்டது என்பதை உணரச் செய்யவேண்டும்.

வாழ்க்கை என்பது அலங்காரம் செய்து கொள்வதிலும், பள்ளிகளின் பொழுது போக்குகளைக் கொண்டாடுவதிலும், சினிமாக் கதாநாயகிகளை இமிடேட் செய்வதிலும் இல்லை என்பதை அவர்களை உணரச் செய்வது மட்டுமில்லை. நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு வாழ்ந்து காட்டவும் வேண்டும்.

முடிந்தால் உங்களுடைய விவரம் தெரிந்த பெண்களுக்கு உங்கள் வாழ்க்கை பற்றிச் சொல்லுங்கள். நீங்கள் கண்ட கனவுகள், அதில் நேர்ந்த சறுக்கல்கள், செய்ததவறுகள் எல்லாவற்றையும் சொல்லலாம்.

சின்னச் சின்ன விஷயங்களுக்காக, சிறிய சிறிய பொருட்களுக்காக வாழ்க்கையை இழந்து விடுவதில் அர்த்தமில்லை. வாழ்க்கையில் பெரிய விஷயங்களுக்காக வாழ வேண்டும் என அறிவுரை சொல்லலாம்.

நீங்கள் படித்த படிப்பிற்கும், புரிந்து கொண்ட வாழ்க்கை முறைகளுக்கும், பலன் வெற்றிகரமாக வாழ்வதில் தான் இருக்கிறது. இனிப் பெண் சமுதாயம் வாழ்ந்து பார்க்க வேண்டுமே தவிர, நொந்து மடியக் கூடாது. சுய பச்சாதாபத்தாலோ, சுய இரக்கத்தாலோ எந்தப் பலனும் இல்லை. அழுது வடிந்த கண்கள் உலகத்தில் எதையும் சாதிப்பதில்லை. அதற்கு மாருக சிரித்த முகம் உலகத்தில் வெல்லுவதற்கு எதையும் மிச்சம் வைப்பதில்லை. இந்த 'மேஜிக்'கிற்கு முக்கியத் தேவை—

— தெளிவான உறுதியான மனம்!

— நாம் சிறப்போடு வாழ்ந்தே ஆக வேண்டும் என்ற பிடிவாதம்!

— நம்மை மீறி எதுவும் நடந்துவிடாது என்ற மனேதைரியம்....

(அடுத்தமாதம் வேருெரு பிரச்னை)

அட்டை வண்ணப்படம்:

ஹரீஷ்

ஆஹா!
இதோ லியோ வழங்கும் பல புதிய விளையாட்டு பொம்மைகள்... பெருகிவரும் என் பொம்மைகளின் பொக்கிஷம்!



ஆம், நீங்களும் கண்டு களியுங்கள், களிப்பூட்டும் லியோ அணி வரிசையின் புத்தம் புதிய பொம்மைகளை. சாவி முடுக்கினால் ஓடும் அற்புத பொம்மைகள்... பெரிய பெரிய உண்மையான உருவங்களின் சின்ன சின்ன அசல்கள், தோற்றத்திலே, ஓட்டத்திலே. புல்பேக் ஜாபீடு கார்கள்—கொஞ்சம் பின்னால் இழுத்து விட்டு விடுங்கள், பாருங்கள் அதன் வேகத்தை. என்ன ஆச்சரியம்! புதிய அசல் கார்களின் நுணுக்கங்களைக் கொண்டவை, சிறப்புகளை உடையவை. இதோ தத்தித் தவழும் கண்மணிகளுக்கு இன்னிசை எழுப்பி கிளுகிளுப்பூட்டும் பொம்மைகள். இந்தியாவிலேயே மற்றவர்களைவிட லியோ முதல் தடவையாக அறிமுகப்படுத்தும் லே-அன்-எக். பாட்டரியினால் இயங்கும் அற்புதமான விளையாட்டுகள். குடும்பத்தினர் எல்லோரையும் மகிழ்ச்சியில் திளைக்க வைக்கும் அபூர்வமான பொக்கிஷம்.

இவை யாவற்றையும் தவிர லியோ முன்பே வழங்கியுள்ள துப்பாக்கிகள், மோட்டார் கார்கள், ட்ரக்குகள் மற்றும் விளையாட்டுகள்.

இதுதான் உங்கள் அன்புக் குழந்தைகளின் குதூகலமான உலகம். ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் அடைவதோ குறையாத ஆர்வம், குன்றாத மகிழ்ச்சி. இந்தப் புதிய விளையாட்டுகளிலே புத்தம்புதிய விஷயங்களையும் அவர்கள் கற்கின்றனர்.

எல்லா வயதுக் குழந்தைகளுக்கும் எத்தனையோ வித பொம்மைகள், லியோ படைத்திடும் அற்புதம். கற்பனை கனிந்த லியோ பொம்மைகள் உங்கள் அன்புக் குழந்தைகளின் கற்பனையைப் பெருக்கும்.

லியோ பொம்மைகள் அழகானவை, உறுதியானவை, பத்திரமானவை. நீங்கள் இதுவரை பார்த்திராத பொம்மைகள்.

ப்ளோ ப்ளாஸ்ட் லிட்.,
ஏஜென்ஸி & ப்ளாஸ்டிக்
ப்ராடக்ட்ஸ் டிவிஷன்,
வி.ஐ.பி. ஹவுஸ், பிரபாதேவி,
பம்பாய் 400 025.

LEO TOYS

லியோ
விளையாட்டுப் பொம்மைகள்—
உங்கள் அன்பின்
அடையாளச் சின்னம்.

Contour Ads-BP-584 H/83 Tam

"கோந்தே (குழந்தை என்பதை மிகச் செல்லமாகக் குறிப்பிடும் வார்த்தை) ஜாடியிலிருந்து ஊறுகாய் எடு" என்று அம்மா கட்டளையிடுகிறார்கள். அந்தக் கோந்தே ஜாடியைத் திறந்துவிட்டு "அம்மா ஜாடியில் ஊறுகாயே இல்லே, என்னமோ, கறுப்புத் துணி மாதிரி இருக்கிறது" என்று சொல்ல, அம்மா "போடி, கறுப்பும் இல்லே, துணியும் இல்லே. கொஞ்ச நாளாய் ஊறுகாய் ஜாடியைத் திறக்கலே. அதுதான். நன்றாகக் கலக்கி விட்டுப்பார். ஊறுகாய் இருக்கும். எடுத்துண்டு வா, நாழியாக்காதே" என்று தன் பெண்ணை அவசரப்படுத்துகிறாள். இதுபல வீடுகளில் நடக்கிறது.



தேங்காய் மூடியில் பச்சையாகப் பாசி படர்ந்து விடுகிறது. இந்த மேல் பகுதியை அப்படியே துருவி எறிந்து விட்டு, அடிப்பகுதியைப் பயன்படுத்துவதும் தவறு. ஊறுகாய்கள், தேங்காய் மூடி மாத்திரமல்ல, வேறு பல உணவுப்பதார்த்தங்களும் இந்த முறையில் கெடுகின்றன. கறுப்பாக, ஏடுபோல் படரும் இதைச் சாதாரணமாக பூஞ்சக் காளான் என்று வீடுகளில் குறிப்பிடுவதுண்டு. பூசணை பிடித்துவிட்டது என்று கிராமங்களில் சொல்வார்கள். வெகுநாட்கள் கைபடாதிருக்கும், பருப்பு, தானிய வகைகள், காய்கறிகள், பழங்கள், எண்ணெய் வித்துக்கள், பிரட், பிஸ்கட், தயிர் போன்றவைகளிலும் இந்தப் பூஞ்சக் காளான் வருகிறது.

உணவில் விஷம் உஷார்!

இந்தப் பூஞ்சக் காளான் உண்டாகும்போது, உணவு நச்சுத் தன்மையுடையதாகி விடுகிறது. இந்த நச்சுத் தன்மை மைக்கோடாக்சின் என்று ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. இந்த மைக்கோடாக்சின், மனித இனம், கால்நடை, கோழி இனம் ஆகிய எல்லாவற்றிற்கும் மிகக் கெடுதி விளைவிப்பதாகும். மைக்கோடாக்சின் கலந்த பண்டங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தப் பல நாடுகளில் சட்டம் இயற்றியிருக்கிறார்கள். மைக்கோடாக்சின் கலந்த பண்டங்களை அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளில் விற்பனை செய்யத் தடை இருக்கிறது. மைக்கோடாக்சின், மிகக் குறைந்த அளவு நம் உடலுக்குள் சென்றாலும், கல்லீரல், சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது. பாரிசவாயு என்னும் பக்கவாத நோயையும் ஏற்படுத்தும்.

மைக்கோடாக்சினிலுள்ள அஃப்லேடாக்சின்—பி (Aflataxin-B) புற்றுநோயை உண்டாக்கக்கூடியது. பருப்பு வகைகள், வேர்க்கடலை, மற்றும் எண்ணெய், பால், பாலிலிருந்து தயாரிக்கப்படும் பண்டங்கள் ஆகியவைகளில் இந்த அஃப்லேடாக்சின்—பி என்ற நச்சு கலப்பது மிகச் சாதாரணம். பூஞ்சக்காளான் பிடித்துவிட்ட பாக்கை சேர்த்து புகையிலே மெல்லுவது, புகையிலையை மெல்லுவதை விட ஆபத்து நிறைந்தது என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏனென்

மூல், புகையிலைக்கு புற்றுநோயை உண்டாக்கக் கூடிய தன்மை உண்டு. இந்தப் புகையிலையோடு, பூஞ்சக் காளான் பிடித்த பாக்கைச் சேர்த்துச் சாப்பிடும்போது, புற்று நோய் ஏற்படுவது மிக எளிதாகி விடுகிறது.

ஆகவே, உணவுப் பண்டங்களை இந்த நச்சுத்தன்மை கலக்காதவாறு நல்லமுறையில் பாதுகாக்க வேண்டியது மிக அவசியம். தானிய,பருப்பு வகைகளை நன்றாக உலர வைத்துப் பிறகு, கொஞ்சம் ஆமணக்கெண்ணெயை விரல்களில் தொட்டுக் கொண்டு தானியத்தில் அல்லது பருப்பில் நன்றாகப் படும்படி, விரல்களை அவைகளின் ஊடே விட்டுக் கலக்க வேண்டும்.

தேங்காய்க் குடுமிப் பகுதி பின்புறம் இருக்குமாறு நிமிர்த்தி வைக்க வேண்டும். தேங்காய் மூடியில், மீதி தேங்காய் இருந்தால், மூடியை நீரில் அமுக்கி வைத்தால், கெடாமல் இருக்கும். ஆனால் தினமும் நீரை மாற்ற வேண்டும். முடிந்தால், தேங்காயைத் துருவி லேசாக சூடு பண்ணி டப்பியில் வைத்தாலும் கெடாமல் இருக்கும்.

ஊறுகாய் வகைகளை அவ்வப்போது கிளறி விட வேண்டும். எண்ணெய் கலந்த ஊறுகாய்களை நன்றாகக் கிளறி, ஊறுகாய் எண்ணெய்க்குள் நன்றாக அமிழ்ந்திருக்குமாறு செய்து மூட வேண்டும். பெரிய ஜாடிகளிலிருந்து நேராக அடிக்கடி ஊறுகாய்களை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். காலையில் குளித்தவுடன், பெரிய ஜாடியிலிருந்து ஊறுகாயை சிறு கிண்ணங்களில் அன்றாடம் தேவைக்கு எடுத்து வைக்க வேண்டும். தினந்தோறும் எடுக்க முடியாவிட்டால், மூன்று தினங்களுக்கு ஒரு முறையாவது எடுத்து வைப்பது நல்லது.

வடுமாங்காய், நீர் நெல்லிக்காய் ஊறுகாய் வகைகள் நீர் கலந்தவை. ஆகவே இந்த ஊறுகாய்கள் உள்ள ஜாடிக்குள், ஊறுகாய்க்கு மேல், நல்லெண்ணெயில் நனைத்த புதுத்துணியைப் போட்டுப் பிறகு ஜாடியை மூடிவிட்டு, ஜாடியின் மேல்புறம் நல்ல வெள்ளைத் துணியைப் (இதை எண்ணெயில் நனைக்க வேண்டாம்.)போட்டு இறுக்கமாகக் கட்ட வேண்டும். இப்படிச் செய்யும்போது , ஊறுகாய்க்கு மேல், பூஞ்சைக் காளான் வருவது அரிது. அப்படியே வந்தாலும், எண்ணெயில் நனைத்த துணியின் மேல் பகுதியிலேயே நின்றுவிடும். துணியில் எண்ணெய் இருப்பதால், துணியைத் துளைத்துக் கொண்டு காளான் ஊடுருவிச் செல்லாது.

உணவுப் பண்டங்களை, இந்தக் காளான் பாதிக்காவண்ணம் பாதுகாப்பது அவசியம்.

—ராஜி.

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : கோதுமை

முடிவு தேதி : 15-4-84

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

வழிகாட்டும் பெண்மணிகள்–6

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

ஸ்ரீ வேணுகோபாலன்

"இவர்தான் சுப்பிரமணிய பாரதி! 'கவிஞர்' 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியர்" என்று அந்த இளம்பெண்ணுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார், அந்நாளில் பிரசித்தி பெற்ற டாக்டராக இருந்த நஞ்சுண்டராவ்!

திருவல்லிக்கேணியில் டாக்டர் நஞ்சுண்டராவின் அரண்மனை போன்ற வீட்டில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

இளம்பெண்ணின் பெயர் முத்துலெட்சுமி!

பாரதி ஒரு புரட்சிக்காரர் என்றால் அந்தப் பெண்ணும் ஒரு புரட்சிக்காரிதான்! அமைதியான புரட்சிக்காரி.

அவள் புரட்சி அதிக ஆர்ப்பாட்டமில்லாமல் சமூக வாழ்வில் நடந்து கொண்டிருந்தது.

கோட்டும் தலைப்பாகையும் தரித்திருந்த பாரதி அந்தப் பெண்ணைக் கனிவோடு பார்த்தார்.

புகழ் பெற்ற டாக்டர் அறிமுகப்படுத்தினால் நிச்சயம் இந்தப் பெண் ஒரு அறிவு மேதையாக இருக்க வேண்டும் என்று பாரதிக்குத் தெரியும்.

நஞ்சுண்டராவினால் வரிசையாக அறிமுகமாகி வரும் பிரபலஸ்தர்கள் எல்லோரும் அவள் மனத்தில் பெரிய மாற்றத்தை உண்டாக்கினார்கள்.

அப்போது இருபது வயதே நிரம்பிய முத்துலட்சுமி ஏற்கெனவே பல புரட்சிகளை வீட்டுக்குள்ளேயே நிகழ்த்தியவள்.

1886–ஆம் ஆண்டு பிறந்து திண்ணைப் பள்ளியில் பனை ஓலையில் ஆனா, ஆவன்னா எழுத ஆரம்பித்தவள்.

"பால் கணக்கு, வாண்டிரி கணக்கு எழுதத் தெரியணும். அந்தப் படிப்பு படிச்சால் போதும்" என்று தந்தை நாராயணசாமி கூறியிருந்தார். அவர் அந்த நாளில் ஒரு பட்டதாரி! புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் முதல்வராக இருந்தார்.

சோதனையான காலம் அது! முத்துலட்சுமிக்குப் பதினோராவது வயது! அந்நாளைய வழக்கப்படி முழுப்புடவை கட்டியிருப்பாள். தாயார் அவளது படிப்பைநிறுத்தி விட்டார்.


ஆனால் பள்ளிக்கூட உபாத்தியாயர் பாலையா என்பவர் முத்துலட்சுமியின் தாயாரான சந்திரம்மாவைச் சந்தித்து, "உங்கள் பெண்ணுக்குப் பிரமாதமாகப் படிப்பு வருகிறது. பிற்காலத்தில் புகழ் பெற்று விளங்குவாள். அதனால் படிக்க அனுமதியுங்கள்!" என்று கூறினார்.



பலன் இருந்தது. முத்துலட்சுமி படிப்ப தற்கு அனுமதிக்கப்பட்டார். லோயர் செகண்டரி பொதுப் பரீட்சையில் தேர்வு பெற்ருள். அப்போது வயது பதின்மூன்று! அவள் பெரியவளாகி விடவும் படிப்பு நிறுத்தப்பட்டது. மேற்கொண்டு வீட்டிலேயே படித்தாள்.

1902—ல் முத்துலட்சுமி மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதினுள். அந்த நாளில் அந்தப் பரீட்சை மிகவும் கடினமானது. மொத்தம் நூறு பேர் அந்தத் தேர்வு எழுதினுர்கள். அவர்களில் பத்தே பத்து பேர்தான் பாஸ் செய்தார்கள். அவர்களில் முத்துலட்சுமி ஒருத்தி.

புதுக்கோட்டை ஜனங்களுக்கு முத்துலட்சுமி பாஸ் செய்தது அதிசயமாக இருந்தது. அந்த நாளில் பெண்கள் ஆங்கிலப் படிப்பு படித்ததேயில்லை. தந்தை நாராயணசாமி மகிழ்ச்சி அடைந்தார். பல அதிகாரிகள் அவருக்கு மகிழ்ச்சிச் செய்திகள்



அனுப்பினார்கள். பள்ளி ஆசிரியர் பதவிக்கான அழைப்பு கூட ஒன்று வந்து விட்டது.

நாராயணசாமிக்கு அப்போது சென்னையிலிருந்து ஒரு பத்திரிகை வந்தது. அதில் கிறிஸ்துவர்களாக மாறிய இரண்டு பிராமணப் பெண்கள் பட்டப் படிப்பில் தேறி, கவுன் போட்டு நிற்பதைப் படம் பிடித்துப் போட்டிருந்தார்கள்.


அதைப் பார்த்ததும் முத்துலட்சுமிக்குத் தானும் பட்டம் பெற வேண்டும் என்று ஆசை வந்தது! வீட்டில் தாய், தந்தையரைத் தூண்ட ஆரம்பித்தாள். தந்தையிடம் பிடிவாதம் பிடித்தாள்.

தந்தைக்கு முற்போக்கு மனம் இருந்தது.

உடனே புதுக்கோட்டை மன்னருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

மன்னர் மேனாட்டுப் பழக்கவழக்கமுள்ளவர். அவரும் உடனே உத்தரவு பிறப்பித்

21-5 வரிசை to 3 நேர்ப்புள்ளிகள்



திருமதி. ஜோதிகுமார்

தார். மெட்ரிகுலேஷன் பாஸ் செய்த பெண்ணைத் தமது கல்லூரியில் சேர்த்துக் கொள்ளலாம் என்று! ஆனால் மூன்றுமாதம் அதன் சாதக, பாதகங்களை அறிய வேண்டும். பின்னர்தான் ஒரு பெண் அந்தப் படிப்புத் தொடர்வதை அனுமதிக்க வேண்டும் என்று உத்தரவு வழங்கி இருந்தார்.

முத்துலட்சுமி கல்லூரிக்குப் போனாள். மூன்றே மாதத்தில் அவள் எல்லா சக மாணவர்களையும் விடப் படிப்பில் கெட்டிக்காரி என்பதை நிரூபித்து விட்டாள்.

லோயர் செகண்டரி படிக்கும் போதே, மாணவர்களும், இதரர்களும் அவளைப் பார்க்க பரிகசிக்க, நாற்சந்திகளில் காத்திருப்பார்கள். இதற்காக முத்துலட்சுமி சந்து, பொந்துகளில் நுழைந்து சுற்றுவழியாகப் பள்ளிக்கூடம் போவாள்.

இப்போது கல்லூரியில் சேர்ந்ததும் கேட்க வேண்டியதில்லை. வேறு வழியில்லாததால் முத்துலட்சுமியை திரைபோட்டு மூடுவண்டியில் கல்லூரிக்கு அனுப்பினார்கள்.

முத்துலட்சுமி சிறப்பாக இண்டர்மீடியட் பாஸ் பண்ணினாள்.

அம்மா அவளது கல்யாணத்தைப் பற்றிச் சதா புலம்ப ஆரம்பித்தார். பதின்மூன்று வயதாகியும் பெண்ணை வீட்டில் வைத்திருப்பது ஒரு அதிசயம்!

பக்கத்து வீட்டுப் பெரிய அம்மாள்கள் தாயாரிடம் வந்து பேச ஆரம்பித்தார்கள். 'இப்படி வயசுக்கு வந்த பெண்ணைக் கல்யாணம் கட்டாம வச்சிருக்கலாமா? குடும்பத்துக்கே அபகீர்த்தி ஆயிற்றே!' என்றார்கள்.

தாயார் மனம் விண்டு போவார். அவர்கள் போனதும் விம்மிக் கொண்டு அழுவார். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தந்தையிடம் சண்டை பிடிப்பார். தினமும் 'என் பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டுமே' என்று சூரிய நமஸ்காரம் செய்வார்.

இந்தச் சமயம் தந்தையிடம் படித்து டாக்டராகி இருந்த ஒருவர், அவரைக் காண வந்தார். 'மருத்துவத்தில் பெண்களே சேருவதில்லை. முத்துலட்சுமியை அதில் சேர்க்கலாம்' என்று கூறினார்.

தந்தை அவளை அழைத்துக் கேட்டார். அவளும் சம்மதித்தாள்.

தாயாருக்கு அப்போது டைபாய்ட் வந்தது. ஒருநாள் இரவு மோசமாகியது. டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள். தந்தையும் மற்றவர்களும் அழுதார்கள். முத்துலட்சுமியால் தாயாரின் மரணத்தைஎண்ணி பார்க்கக் கூட முடியவில்லை. இரவு முழுவதும் அம்மாவின் அருகில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்தாள்.

காலையில் பார்த்தால் அம்மாவிடம் ஒரு தெளிவு வந்திருந்தது. ஆஸ்பத்திரிகளைப் பார்வையிட வந்திருந்த ஒரு அமெரிக்க டாக்டரை வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். அம்மாவின் நாக்கை நீட்டச் சொல்ல, அம்மா நீட்டினாள். எல்லோருக்கும் அதிசயமாக இருந்தது... தாயாரின் நினைவு திரும்பி விட்டது. அந்த டாக்டர் மருந்து கொடுத்து விட்டுப் போக அதில் வெகு விரைவில் அம்மா குணமானார்.

இந்தச் சம்பவமும் முத்துலட்சுமிக்கு மருத்துவம் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை அதிகமாக்கியது.

தந்தை அரசாங்கத்துக்கு எழுதி, முத்துலட்சுமிக்குச் சம்பளச் சலுகை வாங்கினார். சென்னை மருத்துவக் கல்லூரியில் அவளைச் சேர்த்தார். (1907).

தந்தையும், மகளும் சென்னைக்கு வந்தார்கள். அந்நாளில் பெண்களுக்குத் தனி ஹாஸ்டல் கிடையாது. புரசைவாக்கத்தில் வீடு எடுத்துத் தங்கினார்கள். சீக்கிரம் தாயாரும், சகோதர சகோதரிகளும் வந்து சேர்ந்தார்கள்.

முக்தியடைய விரும்பும் ஸ்திரிகளுக்கு சுலபமான வழி

"நீ உன் புருஷனை வழிபடு, நான் அவனிடமிருந்து அதை ஏற்றுக் கொள்கிறேன்" என்று பகவான் கூறியுள்ளார்.

புருஷனை மகிழ்விக்க எங்கள் சுவையான இனிப்புக்களை வாங்கிக் கொடுங்கள்.

திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய், சீர்முறுக்கு, அதிரசம், திரட்டுப்பால் ஆகியவற்றை தயாரித்துக் கொடுக்கிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை-600 020

போன் : 412557

காமதேனு சூப்பர் மார்க்கெட், தேனாம்பேட்டை, சென்னை

பேனிருல் தலைமுடி உதிரும்

நறுமணம் கமழும் கென்ஸ் தைலத்தை உபயோகித்து ஈறையும், பேனையும் அறவே ஒழியுங்கள், தலை முடியை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.



கென்ஸ்

'சிறந்த பேன் நாசினி'

ஈறுகளையும் கொல்லும் பென்சொகெயின் கலந்தது.

தீங்கற்றது



PHARM PRODUCTS

பார்ம் ப்ராடக்ட்ஸ்

தஞ்சாவூர்-613 007 தமிழ்நாடு

விற்பனை விவரங்களுக்கு எழுதவும்.

Chhaya/PP/203

மருத்துவம் படிக்கும் போது தான் டாக்டர் நஞ்சுண்டராவுடன் அறிமுகம் ஏற்பட்டது. அவர் ரசாயனப் பரிசோதக ராக இருந்தார். புகழ் வாய்ந்தவர். நிறைய சொந்த வாடிக்கை இருந்தது. பணம் நிறைய சம்பாதித்தார். தியாக மனப் பான்மை உண்டு.

முத்துலட்சுமியிடமும் அவள் குடும்பத் திடமும் அவர் பிரியம் அதிகம் வைத்தார். தமது வைத்தியப் பிரயாணங்களின் போது முத்துலட்சுமி வீட்டுக்கு அவசியம் வந்து போவார். சனி, ஞாயிறுகளில் முத்துலட்சுமி யைத் தமது வீட்டுக்கு வரச் சொல்வார்.

தேசியவாதி நஞ்சுண்டராவ் தமது வீட் டில் கைத்தறியை அமைத்து அதில் தமது பெண்கள் நெய்யும்படி சொல்லிக் கொடுத் தார்.

முத்துலட்சுமிக்கு அவரது மூலமாகத்தான் பெரிய பெரிய அறிஞர்களையும், கலைஞர்களை யும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அந்தச் சந்திப்புக்கள் தான் முத்துலட்சுமி மனத்தில் மக்கள் சேவைக்கான விதையைத் தூவி விட்டது.

எண்பது வருடங்களுக்கு முன் மருத்துவக் கல்லூரி பூராவிலும் ஆங்கிலேயர் ஆதிக்கம் தான் இருந்தது.

ஆங்கிலேய முதல்வருக்கு மெலிந்த முத்து லட்சுமியைப் பார்த்ததும் அதிருப்திதான் ஏற்பட்டது. "இவளால் டிகிரி படிப்பு படிக்க முடியாது. எனவே எல். எம். அண்ட் எஸ்ஸில் சேருங்கள்" என்றார்.

மருத்துவ டிகிரி பி. எம். அண்ட் எம். எஸ்.ஸாக இருந்தது.

"இல்லை, 'ஒரு வருடம் படிக்கட்டும்! என் பெண்ணால் படிக்க முடியவில்லையென் றால் அவளை எல். எம். அண்ட் எஸ்ஸில் சேர்க்கலாம்" என்றார் தந்தை.

ஆறு மாதத்திற்குள் அந்த ஆங்கிலேய பேராசிரியர்களின் முழு மதிப்பையும் பெற்றாள். எல்லாப் பாடங்களிலும் அவள் முதன்மையாக வந்தாள். ஆரம்பத்தில் மாணவர்கள் கூட அவளது மதிப்பைக் குறை வாகக் கணித்து விட்டார்கள். பெண்கள் அதுவும் இந்தியப் பெண்கள் மருத்துவத் திற்கு லாயக்கல்ல என்று நினைத்த சில வெள்ளைக்காரப் பேராசிரியர்கள் கூட முத்து லட்சுமியின் ஆற்றலைக் கண்டு தங்கள் கருத்தை மாற்றினார்கள்.

வகுப்பில் மாணவர்களில் பெரும்பாலான வர்கள் ஆங்கிலேயர்களும், ஆங்கிலோ இந்தி யர்களும்! பெண்களில் பலரும் ஆங் கிலோ இந்தியர்கள்! அல்லது இந்திய கிறிஸ்துவர்கள். அபூர்வமாக ஒன்று இரண்டு ஹிந்துப் பெண்கள்.

ஒருநாள் சில கிறிஸ்துவப் பெண்கள் தங்கள் அறைக்கு அழைத்துப் போய், "நீ ஏன் இப்படி கட்டுப்பெட்டியாக வாழ் கிறாய்? கிறிஸ்துவ மதத்தில் சேர்! உனக்கு எல்லா வசதிகளும் கிடைக்கும்!" என் றார்கள்.

"எனக்கு என் தாயும், தந்தையும் தான் தெய்வங்கள்! என் வாழ்க்கை எனக்குப் பிடிக்கிறது" என்று கூறினாள்.


மேலைநாட்டு ஃபாஷன் விரும்பிய பலரும் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தார்கள்.

இது அந்தக் கால இந்துப் பெற்றோர் களுக்குக் கவலையாக இருந்தது. தங்கள் குழந்தைகளை கிறிஸ்துவர்கள் வீடுகளுக்கு அனுப்பவே பயந்தார்கள்.

எல்லா ஆண்டுப் படிப்பிலும் முத்து லட்சுமி பல முதன்மைகள் பெற்று வந்தாள்.

கடினமான 'ஸர்ஜரி'யில் கூட நூற்றுக்கு நூறு முத்துலட்சுமி வாங்கி இருப்பதாக ஆங்கிலேயப் பேராசிரியர் கூறிய போது வகுப்பு பூராவும் அதைக் கைகொட்டி வர வேற்றது.

21-3 வரிசை to 3 நேர்ப்புள்ளிகள்



திருமதி. ஜோத்குமார்

பரிசுகளும், பதக்கங்களும், சான்றிதழ் களும் முத்துலட்சுமிக்குக் கிடைத்தன.

மருத்துவப் பட்டப்படிப்பில் பல முதன் மைகளைப் பெற்று ஊரே ஆச்சரியப்படும்படி பாஸ் செய்தார் முத்துலட்சுமி.

வாழ்த்துச் செய்திகள் குவிந்தன. உத்தி யோக உத்தரவுகள் இந்தியாவின் பலபாகங் களிலிருந்து வந்தன.

ஆனால் டிகிரி பெற்ற டாக்டர் முத்து லட்சுமிக்கு வீட்டில் நிம்மதி இருந்ததா?

இல்லை. அவளது இருபத்தாறு வயதுகளைப் பார்த்துத் தாயார் பொருமினாள். இனி மேல் எங்கே இவளுக்குக் கல்யாணம் ஆகப்போகிறது? யார் பண்ணிக் கொள்ளப் போகிறார்கள்?

(அடுத்த இதழில் முடியும்)

இதற்கு என்ன செய்வது



தொகுப்பு - டி.ஆர்.ரமேஷ்

சுரேஷ், அயன்புரம்.

கேள்வி

எனக்கு அடிக்கடி வாய்ப்புண் வருகிறது. அதைக் குணப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

பதில்

சாதாரண வீட்டு வைத்தியமாக கசகசாவையும், கொப்பரையையும் அரைத்து, வாயில் மென்று விழுங்கினால் சரியாகிவிடும். வயிற்றில் அல்சர் இருந்தாலும் இதுபோல வருவதுண்டு. எதற்கும் மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

கா. தூண்டி, சுந்தரபுரி.

கேள்வி

என்னுடைய பெயரை மற்றவரிடம் கூறும் போதும், என் நண்பர்களாலும் கேலி செய்யப்படுகிறேன். சட்டப்பூர்வமாக பெயரை மாற்ற என்ன செய்யவேண்டும்?

பதில்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள கெசட் புத்தக வெளியீட்டாருக்கு, உங்கள் பெயரை மாற்றி வெளியிடவேண்டி ஒரு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். அதற்கு ஒரு சிறு தொகையும் கட்டவேண்டி வரும். உங்கள் பெயர் மாற்ற அறிவிப்பு வந்த 'கெசட்' புத்தகத்தைக் கொண்டு, எஸ். எஸ். எல். சி. புக் போன்றவற்றில் மாற்றிக் கொள்ளலாம்.

தி. பாரதி அம்பத்தூர்

கேள்வி

நான் கடந்த 4 வருடமாகக் கண்ணாடி அணிந்து வருகிறேன். இதுபோல் கண்களுக்கு வெளியே கண்ணாடி அணிவதைவிட கண்களுக்கு உள்ளே காண்டாக்ட் லென்ஸ் போட்டுக் கொண்டால் சௌகரியமாக இருக்கும் என நினைக்கிறேன். இந்த லென்ஸ் போட்டுக் கொள்வதைப் பற்றி எனக்கு நிறைய சந்தேகங்கள் உள்ளன.

1. காண்டாக்ட் லென்ஸ் போட்டவர்களைக் கண்ணைப் பார்த்துக் கண்டு பிடித்து விட முடியுமா? கண்களில் ஏதேனும் மாற்றம் தெரியுமா?
2. இந்த லென்ஸ் போடுவதால் எதிர் காலத்தில் ஏதாவது தொந்தரவு ஏற்படுமா?
3. இந்த லென்ஸ்களை ஒருமுறை போட்டுவிட்டால் பின்பு மாற்ற வேண்டிய அவசியம் இருக்குமா? அல்லது இறப்பு வரை இது ஒன்றே போதுமா?

பதில்

காண்டாக்ட் லென்ஸ் போட்டுக்கொண்டவர்களின் கண்களில் பெரிய மாறுதல்கள் இல்லாவிட்டாலும் உற்றுப் பார்த்துக் கண்டு பிடித்து விடலாம். அதனால் எந்தவிதத் தொந்தரவும் இல்லை. எனினும் ஆறுமாதம், ஒரு வருடத்திற்கு ஒருமுறை கண் மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

பிரேம், திருச்சி.

கேள்வி

என் காதில் (இடது காது மட்டும்) தோடு அணியும் துவாரத்தில் புண்ணாகி விடுகிறது. மருந்து போட்டால் ஆறி, பின் தோடு அணிந்தால் மீண்டும் புண்ணாகி விடுகிறது. இம்முறை செவி மடலிலும் புண் பரவி இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?

பதில்

விபூதிப் பச்சை இலை என்று ஒன்று உள்ளது. அது உங்கள் பக்கம் கிடைக்குமானால் அரைத்துப் பூசிக் கொள்ளுங்கள்.

இரண்டு வேளைகளில் குணம் தெரியுமாம். ஒரு நாட்டு வைத்தியர் சொன்ன குறிப்பு இது.

.... பம்பாய்

கேள்வி

பி. காம் படித்த 20 வயதான எங்கள் பெண்ணை மதுரையில் வேலை பார்க்கும் வரனுக்கு அவர்களே வலிய வந்து கேட்டதால் கல்யாணம் பண்ணிக் கொடுத்தோம். அதன் பிறகு பெண்ணும் மாப்பிள்ளையும் இங்கு வரும்படி எவ்வளவோ எழுதியும், மாமியார் அனுப்பவில்லை. ஆறு மாதங்கள் கழித்துப் பெண்ணை மட்டும் ரயிலேற்றி விட்டு, வைரத்தோடு, பத்தாயிரம் ரொக்கப் பணம் கொண்டு வர வேண்டும் என்று அனுப்பினார்கள். என் பெண்ணும் அவர்கள் தன்னை மிகவும் துன்புறுத்தியதாகவும், தான் அவர்கள் வீட்டில் மருமகளாக இல்லாமல் வேலைக்காரியாய் இருந்ததாயும் சொன்னாள். இப்போது அவள் வந்து இரண்டு வருடங்களாகப் போகிறது. கல்யாணத்திற்குப் பிறகு மாப்பிள்ளை இங்கு வரவே இல்லை. பெண்டாட்டி போட்ட லெட்டரையெல்லாம் பிரித்துக் கூடப் பார்க்காமல் அம்மாவிடம் கொடுத்து விடுவார். பதிலும் போட மாட்டார். இப்போது இவளை ''செபரேஷன்'' வாங்கிக்கொள்ளும்படி சொல்கிறார்.

இந்த விஷயத்தில் உங்கள் ஆலோசனை என்ன? இனி நாங்கள் என்ன செய்தால் எங்கள் பெண்ணின் எதிர்காலம் நன்றாக இருக்கும்?

பதில்

திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். நீதிமன்றங்களில் கூட, இதுபோன்ற வழக்குகளில் கூடிய வரை தம்பதியரைச் சேர்த்து வைக்கவே முயலுவார்கள். எனவே உங்களுடைய, அவர்களுடைய உறவினர்கள் என ஒரு பத்துப் பேரை வைத்து மத்தியஸ்தம் செய்து சமாதான வழியில் செல்லுங்கள். கூட்டுக் குடும்பமாக வாழ முடியவில்லையென்றால் கணவன் – மனைவி இருவரும் தனியாக வாழலாம். எதற்கும் அவர்கள் ஒத்து வரவில்லையென்றால் உங்கள் பெண்ணின் உடைமைகளைத் திரும்பப் பெற அவளுக்குப் பூரண உரிமையுண்டு.



ஒரு சகோதரி, மதுரை.

கேள்வி

ஆஸ்துமா, ஈஸினோபீலியா, பிரான்கைடீஸ் நோய் உள்ளவர்கள் கல்யாணம் செய்து கொள்ளலாமா? அவர்கள் எந்த மாதிரி வேலைக்குப் போகலாம்?

பதில்

இன்றைய நவீன யுகத்தில் இதுபோன்ற வியாதிகள் பூரண குணமடைய மருந்துகள் வந்திருக்கின்றன. எனவே மணவாழ்க்கைக்கும், இதுபோன்ற நோய்களுக்கும் சம்பந்தமில்லை. தாராளமாகத் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் பிறக்கும் குழந்தைகளுக்கு இவை தொற்றி விடாமல் இருக்க முதலிலிருந்தே மருத்துவரின் ஆலோசனையுடன் ஜாக்கிரதையாக வளர்க்கலாம். தூசுகள் நிறைந்த அச்சகம் போன்ற இடங்களிலோ, ஏர்கண்டிஷன் உள்ள இடங்களிலோ அல்லாத மற்ற வேலைகளுக்குத் தாராளமாகச் செல்லலாம்.

கமலா, தஞ்சாவூர்.

கேள்வி

எனக்கு 18 வயது ஆகிறது. நான் பருவம் அடைந்த ஒரு மாதம் கழித்து எனக்கு வெள்ளைப்படலாயிற்று. இது தினமும் இருக்கிறது. எப்பொழுதும் வந்து கொண்டிருக்கிறது. அதிகமாய்ப் படும் பொழுது அடிவயிற்றில் சிறிது வலி உள்ளது. இவ்வாறு இருந்து கொண்டிருந்தது மட்டுமின்றி, இப்பொழுது ஒரு மாதமாக வெள்ளைப் படும் இடத்தில் அரிப்பு இனம்பி உள்ளது. இதற்கு என்ன செய்வது?

பதில்

நீங்கள் உபயோகிக்கும் துணி போன்ற ஏதோ ஒன்றின் காரணமாக அலர்ஜி ஏற்பட்டிருக்கலாம். இதுதான் வெள்ளைப்படுதலுக்கும், அரிப்புக்கும், காரணமாக இருக்கலாம். பரிசோதனை செய்து மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. உடல் பலவீனமாக இருந்தாலும் வெள்ளைப்படலாம். பெண் மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ளவும்.

வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.







HTB-GLL/8808

நைஸில் உபயோகியுங்கள் வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.

நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம் பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவ தனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது. 3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது. 4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

உடல் நலத்தின் உறைவிடம்

க்ளாக்ஸோ

6

"ஆல் தி பெஸ்ட் யார்!'' என்றான் மாலு.

''தாங்க் யூ'' என்று புன்னகைக்கையில் பாலுவுக்கு லேசாகக் கூச்சம் ஏற்பட்டது.

நான்கே நாட்களில் அவனது அந்தஸ்து அந்த வீட்டில் ஏகமாய் ஏறியிருந்தது. அம்மாவின் பேச்சில், இப்பொழுது அதிக வாஞ்சை தெரிந்தது. அப்பாவின் முகத்தில் கடுமை குறைந்திருந்தது. அவருடைய 'உம்'மில் ஒரு திருப்தி தொனித்தது.

அவனுக்கு இன்னும் நம்ப முடியவில்லை. அவனுக்குத் திருப்தியே அளிக்காத இண்டர்வ்யூ. அந்த போர்டில் யாரைத் திருப்தி செய்திருக்கும்? 'போர்டில் யாராவது முட்டாள் இருப்பான் உன்னை ஸெலக்ட் செய்ய.........

யார் அந்த முட்டாள்?

அவனுக்கு லெட்டர் வந்த அன்று மாலு சின்னக் குழந்தையைப் போல் ஆர்ப்பரித்தான்:

''நா என்ன சொன்னேன் பார்! யாராவது ஒரு முட்டாள் இருப்பான் உன்னைப் பொறுக்கன்னு சொன்னேனாயில்லையா?''

மாலுவின் பேச்சை அம்மா ரொம்ப ஸீரியஸ்ஸாக எடுத்துக் கொண்டு சன்னிடைக்கு* வந்தாள்.

'அழகாயிருக்குடி உன் பரிகாசம்' அவனுக்குத் தகுதியில்லாம அவா ஸெலக்ட் பண்ணிடுவாளா? இத்தனை நாள் ஏதோ போறாத காலம் கிடைக்கல்லே!''

''அதெல்லாம் இல்லே. நீ மனு போட்டது இந்தத் தடவைதான் வெங்கடாசலபதிக்குப் போய்ச் சேர்ந்திருக்கு. இதுக்கு முந்தி நீ அனுப்பிச்சதெல்லாம் போஸ்டிலே தவறியிருக்கு.''

''அசடு வழியாதேடி மாலு!'' அந்த இண்டர்வ்யூவைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் அவனுக்கு அசடு வழிந்தது. அவன் தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு ஃப்ளூக் என்றுதான் உள் மனத்தில் தோன்றிக் கொண்டிருந்தது. இல்லை, மாலு சொன்ன மாதிரி வெங்கடாசலபதிக்கே அம்மாவின் வேண்டுதல் போரடித்து அவனை மேலே இழுத்து விட்டாரா?

கடிதம் வந்து இரண்டு நாள் கழித்து அவன் ரமேஷைத் தேடிக் கொண்டு போனான்.

ரமேஷ் பையைத் தூக்கி கொண்டு எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தான்:

''மார்க்கெட்டுக்குக் கிளம்பிண்டிருக்கேன் வரியா?'' என்றான்.

''வரேன்.''



எல்லைகள்

வாஸந்தி

அன்றைக்கு இண்டர்வ்யூவில் சந்தித்த பிறகு இவனைப் பார்க்கவேயில்லை என்று பாலுவிற்கு நினைவு வந்தது.

''அன்றைக்கு இண்டர்வ்யூ எப்படிப் பண்ணினே ரமேஷ்?''

''மகாமோசம். ரிக்ரெட் கார்டு கூட வந்தாச்சு. வேணும்னே ஏடாகூடமா ஏதாவது கேள்வி கேக்கறாங்கள். அயோக்கியராஸ்



விளிம்பில்..

கல்ஸ்! பொரிக தேவையில்லேன்னு சொல்லிண்டே தங்களுக்கு வேணும்ங்கிற ஆளைத் தான் பொறுக்கறாங்கன்னு நினைக்கிறேன். ஸ்கௌன்ட்ரல்ஸ்! உனக்கும் ரிக்ரெட் கார்டு வந்தாச்சா?''

பாலுவுக்குச் சங்கடமாக இருந்தது. உனக்குக் கிடைக்காதது எனக்குக் கிடைத்திருக்கிறது என்று சொல்லக் கூச்சமாக இருந்தது. அவன் தெருவில் நடக்கும் ஜனங்களைப் பார்க்கிற மாதிரி பார்வையைத் திருப்பிக் கொண்டு,

''இல்லே ரமேஷ். எனக்கு வேலைக்கு ஆர்டர் வந்திருக்கு'' என்றான்.

ரமேஷ் சட்டென்று நின்று அவனைப் பார்த்தான்.

நாம் லட்டு செய்யும்பொழுது பதம் தவறி விட்டாலோ அல்லது மீதி ஆகி விட்டாலோ கவலை வேண்டாம். லட்டுடன் கொஞ்சம் பாலைச் சேர்த்து மிக்ஸியில் அரைத்து, அடி கனமான பாத்திரத்தில் கொஞ்சம் நெய் விட்டு அடுப்பில் வைத்துச் சூடானவுடன் லட்டு விழுதைப் போட்டுக் கிளறி கைக்கு ஒட்டாமல், அல்வா பதத்தில் இறக்கி தட்டில் நெய் தடவி கொட்டிப் பரப்பி ஆறியவுடன் துண்டுகள் போடவும். லட்டை விட இது ருசி அதிகமாக இருக்கும். ஒரு மாதம் வரை கெடாது.

—வெ. சரோஜா.

அந்தப் பார்வையில் திரையிட்ட பாவங்களைப் பார்க்கத் தெம்பில்லாமல் பாலு தலையைக் குனிந்தபடி நடையைத் தொடர்ந்தான்.

''ரியலி!'' என்றான் ரமேஷ் தன்னைச் சமாளித்துக் கொண்டு. ''கங்கிராஜுலேஷன்ஸ் ஏன் முதலிலேயே சொல்லலே?''

''உனக்கும் கிடைச்சிருந்தா சந்தோஷமா இருந்திருக்கும் ரமேஷ்!''

''அதுக்கென்ன செய்ய முடியும்? இதில் லேன்னு இன்னொரு இடம் இருக்கவே யிருக்கு! அப்ப அவங்கள் சொன்னது உண்மைதான் போலிருக்கு. பொரிக இல்லாமே உனக்கு வேலை கெடைச்சுடுத்து என்கிற விஷயம் மனசுக்குக் கொஞ்சம் தெம்பா இருக்கு. இல்லே, உனக்கு வேறயாவது தெரியுமா அங்கே?''

''யாரையும் தெரியாது. எனக்கு ஆர்டர் வந்திருக்கிறதைப் பார்த்து எனக்கே நம்ப முடியல்லே. இண்டர்வ்யூ எனக்குத் திருப்தியளிக்கல்லே.''

''சில சமயங்களிலே அதிர்ஷ்டமும் வேணும்னு நினைக்கிறேன்!''

''தட் ஈஸ் இட்!''

அதற்குப் பிறகு ரமேஷ் கலகலப்பாகப் பேசவில்லை. அவனுடைய வருத்தமும் ஏமாற்றமும் ரொம்ப நியாயமானது என்று பாலு நினைத்துக் கொண்டான். ரமேஷின் வருத்தம் தன் மனத்தில் பாரமாய் அமர்ந்து போன மாதிரி பிரமையேற்பட்டது.

''வருத்தப்படாதே ரமேஷ்!'' என்றான் வீட்டுக்குக் கிளம்புகிற சமயத்தில். ''உனக்கு இதைவிட நல்ல வேலை கிடைக்கும்...!''

ரமேஷ் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான். பக்கவாட்டில் தெரிந்த அவன் விழியோரம் ஈரப்பசையுடன் பளபளத்தது.

பாலு அவன் தோளில் கையை ஆதரவுடன் வைத்தான்.

''சியர் அப் ரமேஷ்! உன்னுடைய மனக்கஷ்டம் எனக்கு நன்றாகப் புரியறது. இரண்டு நாள் முந்தி வரை நான் உன்னை மாதிரி தான் இருந்தேன். நான் நினைக்கவே நினைக்காத சமயத்திலே எனக்கு வேலை கிடைச்ச மாதிரி உனக்கும் கிடைக்கும் பார்!''

ரமேஷ் முகத்தைத் திருப்பாமலே வேறு பக்கம் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். வெகு பிரயாசைப்பட்டுக் கண்ணீரை அடக்கப் பார்க்கிறான் என்று புரிந்தது.

''நீ எதுக்கு வருத்தப்படணும் பாலு! உனக்காவது கிடைச்சதேன்னு சந்தோஷப் படறேன். ஸாரி, சில சமயம் நம்மை மீறி சுய பச்சாதாபம் வந்துடறது. எனக்கு வேலை கிடைச்சோண்ணே உனக்குத்தான் முதல்லே வந்து சொல்வேன்.''

வீட்டிற்குத் திரும்பிச் செல்கையில் ரமேஷின் ஈரம் பளத்த விழிகளும் கடைசியில் அவன் சொன்ன வார்த்தைகளும் மனசில் சுழன்று சுழன்று வந்தன. வெகு விரைவில் நமது இளைய சமுதாயம் ஒரு 'ந்யூரோட்டிக்' சமூகமாகப் போய்விடப் போகிறது என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இன்றைய கோபம் நாளைய வெறுப்பாக மாறிவிடப் போகிறது. இன்றைக்கு அடிக்கப் படும் ஜோக் நாளைக்குப் பைத்தியக்காரப் புலம்பலாகப் போகிறது!

அன்றைக்கும், அதற்கடுத்த நாளும் அவனால் யாருடனும் கலகலப்பாகப் பேச முடியவில்லை. ரமேஷை எப்பொழுது பார்க்க நேரிட்டாலும் அவனுடைய டிப்ரெஷன் தன்னையும் வந்து ஒட்டிக் கொண்டு விடுவது ஏதனால் என்று புரியவில்லை. ரமேஷுடன் பழக ஆரம்பித்ததிலிருந்து அவனிடம் ஏற்



"எனது ஆறு வயதுச் செல்வி பரத நாட்டியம் நன்கு ஆடுகிறாள். நாளைய உலகமே அவளது மேடையாம்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள் தேசத்தோடு நினைந்து மகிழும் ஒருநாள்!
வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்டட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்?
போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் வெளிப்படையாகவே கூறுகிறார்கள். "என்னுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்தது அல்ல.!"
குழந்தைகளைக் கேளுங்கள்
பெற்றோர்களைக் கேளுங்கள்
உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்
அதில்... உற்சாகம் தந்திடும் சுவை மட்டுமல்ல, காட்பரியின் பிரபல பெயர் மட்டுமல்ல... அவற்றைவிட அதிகமோ அதிகம்!
அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி.
Cadbury's Bournvita
SAVE Rs 1.50
The Tastier Food Drink
Cadbury's Bournvita
The Tastier Food Drink

நீங்கள்...

தரமான பொருளைப் பெற அதிகமாக செலவு செய்கிறீர்களா? அல்லது மட்டமான பொருளே போதும் என்று இருந்து விடுறீர்களா?

பிஜ் கொண்டு அதை மதிப்பிடுங்கள்


செயல்திறனிலே

எவர்ஸில்வர் பாத்திரங்கள், கண்ணாடிப் பாண்டங்கள், வாஷ் பேஸின்கள், எவற்றிலிருந்தும் ஸூப்பர் பிஜ், கறைகள், கசடு, பிசுக்கு இவற்றை தீவிரச் செயல் புரிந்து நீக்கி விடுகிறது. விரைவில் நுரைவளம் பெருகும் திறனால் நாசுக்கான பாகங்களையும் சொரசொரப்பான பாகங்களையும் மேன்மையாகவும், எளிதாகவும் சுத்தம் செய்கிறது. பல-வித உபயோக பிஜ் இருக்கையிலே வெவ்வேறு துலக்கும் தேவைகளுக்கு விலை அதிகம் கொடுத்து வெவ்வேறு பவுடர்கள் வாங்குவானேன்? உயர்ந்த சேமிப்பு மற்றும் உயர்ந்த செயல்திறன்— இவை சரியான அளவில் இணைந்த பிஜ் வாங்குவீர்.

விலையிலே

பிஜ், சிறந்த முறையில் சிக்கனம் மற்றும் தரம் இரண்டையும் பிணைக்கிறது. உண்மையில், பிஜ் அளிக்கும் சிக்கனம் இருதரப்பட்டது. இதோ கண்டுகொள்வீர்—இதர நன்கறிந்த துலக்கும் பவுடர்களைவிட பிஜ் 25% குறைந்த விலை கொண்டது. அத்துடன், மட்டமான துலக்கும் பவுடர்களைவிடக் குறைந்த அளவே பிஜ் போதும் மாசற்ற பளபளப்பு வீசுவதற்கு.





விலையோ குறைவு, தரமோ உயர்வு

பட்டிருக்கும் அனுதாபம் தான் காரணமாக இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. ரமேஷுக்கு அடுத்து ஆறு குழந்தைகள். அப்பா ஒரு செக்ஷன் ஆபீஸர். அம்மாவுக்கு எப்பொழுதும் ஏதானும் வியாதி. குளிர் வந்து விட்டால் ருமேட்டிக் ஆர்த்திரைட்டிஸ் ஆஸ்துமா என்று படுத்து விடுவாள். வெய்யில் காலம் என்றால் ப்ளட் ப்ரஷர். தலைசுற்றல் என்று படுக்கை. பாதி நாள் ரமேஷ் சமையல் வேலையைப் பார்ப்பான். பெண் குழந்தை போல் எல்லா வேலைகளையும் முடித்து விட்டுப் பாலுவுடன் மாலை வேளையில் நடக்கப் போகையில், அடக்கி வைத்திருந்த கசப்பையெல்லாம் உமிழ்கிற மாதிரி சொல்வான்.

''எங்கம்மாவுக்கு உடம்பிலே ஒண்ணும் வியாதியில்லே. மனசிலேதான். ஏழு குழந்தைகளைப் பெத்துட்டமேன்னு கில்ட்டி காம்ப்ளெக்ஸ். ஒரு வேடிக்கை பாலு. அம்பது வருஷத்துக்கு முந்தி இந்த சாமி, விதிங்கற வார்த்தைகள்ளாம் ஜனங்களுக்கு ரொம்ப சௌகர்யமா இருந்தது. எது நடந்தாலும் பொறுப்பை அந்த வார்த்தைகள்ளே அடக்கம் பண்ணிட முடியும். இப்ப முடியாததாலே தான் இந்த ஆர்த்திரைட்டிஸ்கும் ப்ளட்ப்ரஷரும்...''

அவனுடைய வார்த்தைகளில் காருண்யமே இல்லாத மாதிரி பாலுவிற்குத் தோன்றும். ''ஏன் அப்படியெல்லாம் சொல்றே ரமேஷ்!'' என்றால் ரமேஷ் தோளைக் குலுக்கியபடி சிரிப்பான். ''இதெல்லாம் உனக்குப் புரியாது. தினம் தினம் இதையெல்லாம் அனுபவிக்கறவனுக்குத் தான் புரியும். சாப்பாட்டுக்குப் போறாமே, பசியிலே சிடுசிடுத்துண்டிருக்கிற தம்பி தங்கைகள், கையாலாகாத்தனத்தோடு உட்கார்ந்திருக்கிற அம்மாவும் அப்பாவும், இதுக்கு நடுவிலே நான். இந்த மாதிரி ஒரு சூழல். அந்தச் சூழல்லே இருக்கிற ஒவ்வொரு ப்ரக்ருதியையும் எப்படியெல்லாம் ஆட்டி வைக்கும், வேஷம் போட வைக்கும்னு அதிலேயே இருக்கிறவனுக்குத் தான் புரியும்...''

என்னை விட இந்த ரமேஷுக்குத் தான் உடனடியாக வேலை தேவை என்கிற குற்ற உணர்வு ஒரே ஒரு கேள்வியை விடாமல் கேட்டது...

எப்பொழுது கிடைக்கும்? எப்பொழுது இவனுடைய டிப்ரெஷன் விலகும்?

...இப்பொழுது அப்பாவுடைய, மாலுவுடைய 'ஆல் தி பெஸ்ட்டை' ஆரோகணித்துக் கொண்டு 'பகவான் அனுக்கிரகம் பரிபூரணமா இருக்கட்டும்' என்கிற அம்மாவின் அசரீரி வார்த்தைகளை ஏந்திக் கொண்டு புதிய வேலையில் சேர பஸ் ஏறும்போது திடீரென்று ரமேஷின் ஞாபகம் வந்து சற்றுத் தடுமாற வைத்தது.

அவனுக்கு வேலை கிடைக்கிற வரை தனக்குள் ஒரு நமைச்சல் இருக்கும் என்று நினைத்தபடி அவன் தனது புதிய அலுவலகத்துக்குள் நுழைந்தான்.

அன்று மாலை வேலை முடிந்த சமயத்தில் அவனை ஜெனரல் மானேஜர் கூப்பிட்டனுப்பினார்.

அவன் போன போது அவரும் இன்னொருவரும் டீ அருந்திக் கொண்டிருந்தார்கள். அன்றைக்கு அவர் இண்டர்வ்யூ போர்டில் இருந்தவர் என்று அவனுக்கு ஞாபகம் வந்தது.

''வாருங்கள் மிஸ்டர் பாலசந்தர். இவரைத் தெரிகிறதா? மிஸ்டர் நாகநாதன்! அரசாங்கத் தரப்பில் நமக்கு அட்வைஸர். ஸீனியர் ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களில் ஒருவர்!''

நாகநாதன் எழுந்து.

''ஹௌ டு யூ டு?'' என்று கையைக் குலுக்கினார். சற்று நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு நாகநாதன் எழுந்தார்.

''உங்கள் வீடு எந்தப் பக்கம் மிஸ்டர் பாலசந்தர்?'' என்றார்.

''லஜ்பத் நகர்.''

''வாருங்கள். நான் அந்தப் பக்கம் தான் போகிறேன். உங்களை ட்ராப் செய்கிறேன்.''

பஸ்ஸில் ஒன்றரை மணி நேரம் பிரயாணம் மிச்சம் என்கிற சின்ன சந்தோஷத்துடன் அவன்.

''தாங்க் யூ ஸர்'' என்று அவரைத் தொடர்ந்தான். வழிநெடுகிலும் நாகநாதன் அவனிடம் மிகச் சரளமாகப் பேசிக்கொண்டு வந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனை ஸீனியர் ஆபீஸர் இன்றைக்கு வேலையில் சேர்ந்திருக்கும் பொடியனிடம் இவ்வளவு சிநேகிதம் காண்பிக்க வேண்டுமானால் இவர் ஒரு வித்தியாசமான மனிதராக இருக்க வேண்டும் என்ற மதிப்பு ஏற்பட்டது.

சாணக்கியபுரி திருப்பத்தில் அவர் இடது பக்கமாக ஒடித்தபோது அவன்,

''நேராப் போகலாமே லஜ்பத் நகருக்கு!'' என்றான் மெள்ள.

''தெரியும். உங்களை இப்பொழுது என் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன். காப்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம்.''

''எதற்குச் சிரமப்படுத்திக் கொள்கிறீர்கள்'' என்று கூச்சத்துடன் அவன் தடுமாறியபடி முணுமுணுத்தான்.

காரிலிருந்து இறங்கியதும் முதலில் கண்ணிற்குப் பட்டது பச்சைப் பசேல் என்ற புல்வெளியும் அதைச் சுற்றியிருந்த மிக நேர்த்தியான தோட்டமும்.

அதற்குப் பிறகு கண்ணில் பட்டது. பட்டதும் பார்வையிலேயே நின்றது—

''மீட் மை டாட்டர் சித்ரா—'' என்று நாகநாதன் அறிமுகப்படுத்திய பெண்—

(தொடரும்)

5 வருடம் உத்திரவாதமுள்ள 'மெரி' சூப்பர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை 15 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்தியாவில் முதல் முறையாகத் தயாரித்து இந்தியா முழுவதும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும் ஸ்தாபனம். சகல விபரங்களுக்கும் இன்றும் கேட்லாக் வாங்கிப் பார்க்கவும் இதில் உள்ள நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் பொருட்கள் அனுப்பப்படும். (வி.பி.பி. சார்ஜ் தனி)



MERI GOLD COVERING WORKS. (Estd: 1963)
P.O. BOX 1405, 14, RANGANATHAN STREET
T. NAGAR MADRAS-600 017 INDIA

பாத்திரங்கள் பளபளக்க

ஷைனா கிளீனிங் பவுடர்



எவர்சில்வர்

பித்தளை, செம்பு

அலுமினியம்




போன்ற எல்லா உலோக பாத்திரங்கள் மற்றும் மொசைக் தரைகள், வாஷ் பேசின்கள் முதலியவற்றிலுள்ள கறி, கசடு, எண்ணெய் பசை போன்ற கடுமையான அழுக்குகளை நீக்கி பிரகாசிக்க வைக்கிறது. உயர்தரத்தின் சின்னமான ஷைனா வேகமாக விற்பனையாகிறது.

Mfrs : **ASWINI CHEMICALS**
13-A, East Street, Komarasamypatti,
SALEM-636 007

சென்னையிலும், தமிழகத்தின் பிற பகுதிகளிலும், வட மாநிலங்களிலும் ஏஜென்சி இல்லாத பகுதிகளுக்கு ஏஜென்சி தேவை.

AGENTS WANTED FOR SRILANKA ALSO



குழந்தைகளின் முதல் செல்வம் தாய்ப் பால்

தாய்ப்பால் உங்கள் குழந்தைக்கு இயற்கை வழங்கும் முதல் பரிசு. அதற்கு மாற்று எதுவுமே கிடையாது. முதல் ஆறு மாதங்கள் வரை தாய்ப்பால் தான் சிசுவுக்குத் தகுந்த முழு உணவு. உங்களிடம் போதிய பால் இராது போலிருக்கிறதே என்று நினைத்துப் பவுடர் பாலைக் கொடுங்கள் என்று யாராவது சொன்னால் அதை நம்பாதீர்கள். ஏனெனில் அநேகமாக எல்லாத் தாயார்களிடமும் தங்கள் குழந்தைக்குத் தேவையான அளவுக்கு மேலேயே பால் கிடைக்குமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

முதல் இரண்டு நாட்கள் முக்கியம்!

நீங்கள் உங்கள் குழந்தைக்கு வெற்றிகரமாகத் தாய்ப்பால் ஊட்டுவதற்கு இயற்கை வழி செய்திருக்கிறது. தாய்ப்பால் ஊட்ட வேண்டுமென்ற மனஉறுதி, வெற்றிகரமாகப் பாலூட்ட முடியும் என்ற தன்னம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும். மற்ற எல்லாச் செயற்கைப் பால்களைக் காட்டிலும் தனிச் சிறப்புடைய பல குணங்களைத் தாய்ப்பால் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக அது சுலபமாக ஜீரணமாகிறது. உடல் அதைக் கிரகித்துக் கொள்கிறது. உடலுக்குத் தேவையான சத்துக்கள் அதிக விகிதத்தில் இருக்கின்றன.

முதல் ஒன்றிரண்டு நாட்கள் சுரக்கும் பாலுக்கு கொலஸ்ட்ரம் என்று பெயர். தாயாரின் உடல் உற்பத்தி செய்யும் கிருமி எதிர்ப்பு நுண்மங்கள் இந்த முதல் பாலில் நிறைந்திருப்பதால் அதிக விசேஷமானது. இந்தக் கிருமி எதிர்ப்பு நுண்மங்கள் புதிதாகப் பிறந்த குழந்தைகளை நோய்களிலிருந்து பாதுகாக்கின்றன. சிசு, நோய்க்கு எளிதில் இலக்காகக் கூடிய சமயத்தில் அதைப் பாதுகாக்கிறது. பின்னால் சுரக்கும் பாலிலும் இந்தக் கிருமி எதிர்ப்பு நுண்மங்கள் இருந்தபோதிலும், முதல் பாலில் உள்ள அளவு இருப்பதில்லை. அதோடு ஆஸ்துமா எக்ஸிமா போன்ற நோய்கள் வராமல் தடுக்கும். புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு இந்த நோய்கள் சாதாரணமாக வரும்.

குழந்தை ஏன் அழுகிறது?

சாதாரணமாகக் குழந்தைகள் பசித்தால் அழும். உணவுக்காகக் குழந்தை அழும் போதெல்லாம் அதற்குத்தாய்ப் பால் கொடுங்கள். நிர்ணயித்த நேரப்படி பாலைக் கொடுப்பதைக் காட்டிலும் பாலுக்காக அழும்போதெல்லாம் கொடுப்பது நல்லது. இரவு வேளைகளில் அழுதாலும் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். குழந்தைகள் வேறு காரணங்களுக்காகவும் அழலாம். இடுப்புத் துணி நனைந்தாலோ, உடை இறுக்கமாக இருந்தாலோ அழலாம். இந்தக் காரணங்களுக்காக அழுகின்றனவா என்று பார்த்தபின், அவை இல்லை என்றால், குழந்தை பாலுக்காகத்தான் அழுகிறது என்று

நீங்கள் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பக்கமும் பத்து நிமிடம் ஒரு குழந்தை குடிக்கும் என்ற பழைய விதி, ஒரு குழந்தை பால் குடிக்க எடுத்துக் கொள்ளும் சராசரி நேரத்தைச் சுமாராகக் கணக்கிட்டதன் மூலம் ஏற்பட்டது. ஆனால் ஒவ்வொரு குழந்தையும் வித்தியாசமானது. சில குழந்தைகளுக்கு வயிறு நிரம்பக் குடிக்க ஒரு பக்கத்துக்குப் பத்து நிமிடங்களுக்கும் குறைவானதாகவே பிடிக்கும். சிலருக்கு அதிக நேரம் பிடிக்கலாம். உங்கள் குழந்தை ஒரு பக்கம் முழுவதும் குடித்து விட்டால் மறுபக்கத்துக்கு மாற்றுங்கள். குழந்தை மறுபக்கம் விரும்புகிறவரைக் குடிக்கட்டும். குழந்தைக்குப் பசி குறைவாகவோ, தூக்க மயக்கத்திலோ அல்லது களைப்புற்றோ இருந்து பால் குடிக்க விரும்பாமல் இருக்கக் கூடிய சமயங்களும் உண்டு. குழந்தையைப் பால் குடிக்கும்படி கட்டாயப்படுத்தாதீர்கள். சிறிது நேரம்கழித்துப் பால் கொடுத்துப் பாருங்கள்.

குழந்தைக்குப் பால் போதுமா?

தாய்ப்பால் கொடுக்கும்போது குழந்தை எவ்வளவு பால் குடிக்கிறது என்பதை நீங்கள் பார்க்க முடியாது தான். எனினும் உங்கள் குழந்தை நன்றாகத் தூங்கினாலோ, ஆரோக்கியத்துடன் இருந்தாலோ, சுறுசுறுப்பாக, விளையாடிக் கொண்டிருந்தாலோ, ஒவ்வொரு மாதமும் சீராக எடை கூடிக் கொண்டிருந்தாலோ உங்கள் குழந்தைக்கு அதன் ஊட்டத்துக்கும், வளர்ச்சிக்கும் போதிய பால் கிடைக்கிறது என்று உறுதியாக நீங்கள் நம்பலாம்.

தாய்ப்பாலின் தரத்தையோ அளவையோ மேம்படுத்துவதற்கு விசேஷ உணவோ அல்லது மருந்துகளோ இல்லை. வெற்றிகரமாகத் தாய்ப்பால் ஊட்டுவதற்கும் தனது சொந்த ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும் பாலூட்டும் தாயார் வழக்கத்தை விடச் சற்றுக் கூடுதலாக உணவு சாப்பிட வேண்டும். விசேஷமாக எதுவும் சாப்பிட வேண்டியதில்லை. கொஞ்சம் பருப்பு, பச்சை இலைக் கறிகாய்கள், கீரைகள், பழங்கள் ஆகியவற்றைச் சாப்பிட்டால் பாலூட்டும் தாயாருக்கு, குழந்தைக்குப் போதுமான பால் பெருகவும் தனது சொந்த உடல் ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும் தேவையான ஊட்டம் அனைத்தும் கிடைக்கும். துவக்க மாதங்கள் ஒரு சவாலாக இருக்கலாம். உங்களுக்கு அதிகப் பொறுமையும் மனஉறுதியும் தேவைப்படலாம். ஆகையால் ஓய்வுடன், உங்கள் குழந்தைக்குப் பாலூட்டும் ஆனந்தத்தை அனுபவியுங்கள். உங்கள் குழந்தைக்குச் சிறந்த உணவு கிடைக்கிறது என்பதுடன், உங்கள் குழந்தைக்கும், உங்களுக்கும் மகிழ்ச்சிகரமான பத்திரமான உறவு ஒன்று, பாலூட்டும் காலத்தில் உருவாகிறது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகள் சாதாரணமாகப் போதுமான பாலைக் குடித்து விட்டால் அப்படியே தூங்கிப் போய் விடும். ஆனால் அவை தூங்கப் போகுமுன், தங்கள் முட்டிகளை விரிக்கலாம். புன்சிரிப்பு சிரிக்கலாம், மேலும் பால் குடிக்க மறுக்கலாம். அல்லது வெறுமே முதுகை வளைக்கலாம்.

சிறிய ஸ்தனங்களுடைய சில பெண்மணிகள் குழந்தைக்கு வேண்டிய பால் தங்களிடம் இராதோ என்று கவலைப் படுவார்கள். ஸ்தனங்களின் அளவுக்கும், பால் உற்பத்தியாகும் திறனுக்கும் தொடர்பில்லையாது. சிறிய ஸ்தனங்கள் உடைய பெண்கள், தங்களின் குழந்தைகளின் தேவைக்கு மேலாகவே போதுமான பால் உற்பத்தி செய்யமுடியும்; உற்பத்தியும் செய்கிறார்கள்: கவலைப் பட்டால் பால் பெருக்கம் குறையத்தான் செய்யும். உங்கள் ஸ்தனங்களின் அளவு முக்கியமல்ல, உங்கள் குழந்தையை அடிக்கடி பால் ஊட்ட அனுமதிப்பது தான் முக்கியம்.

'எப்பொழுது பால் கொடுக்கக் கூடாது?

மாத விலக்குக் காலத்தில் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணமேதுமில்லை. ஏனெனில் அது தாயாருக்கோ, குழந்தைக்கோ கெடுதல் செய்யாது. சில தாயார்கள் தங்கள் மாதவிலக்கு காலத்தில் தங்கள்* குழந்தைகள் மனநிலை சரிவர இருப்பதில்லை என்கிறார்கள் இதற்குக் காரணம் மாத விலக்கிற்கு முந்திய நாட்களில் தாயாருக்கு ஏற்

கேசவர்த்தினி....

நீண்ட அடர்த்தியான கூந்தலுக்கான பரம்பரை இரகசியம்

ஊட்டமளிக்கும் கேசவர்த்தினி
கூந்தல் எண்ணெய்.

நீங்கள் நாள்தோறும் உபயோகிக்கும்
தேங்காய் எண்ணெயில் சிறிதளவு
கேசவர்த்தினியை கலந்து
தேய்த்தால், உங்கள் கூந்தல்
நீண்டு, ஒளிகொண்டு
திகழுவதைக் காண்பீர்கள். மேலும்
உங்கள் கூந்தல் அடர்த்தியாகவும்,
கருமையாகவும் காணப்படும்.

இன்றே ஒரு பாட்டில்
கேசவர்த்தினியை வாங்குங்கள்.
ஆறே மாதங்களில் அழகு மிளிர்ந்த
கூந்தலை பெறுங்கள்.



கேசவர்த்தினி

கூந்தல் தைலம்

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்
சென்னை-600 087



OBM 8473/TM

HE is the cause of all our actions, We are only HIS instruments: the result is in HIS hands.

In any action the means are as important as the result.

ALWAYS do to others as YOU would wish others do to you in similar circumstances. Let your thoughts and actions be guided by Dharma (righteousness).

Don't compare yourself with those more fortunate than you and feel sorry: be happy that you are above those less fortunate than you. Involving yourself in solving others' problems will minimise your own.

Be thrifty. Spend only on needs and not on desires you can do without. Today's waste might prove to be tomorrow's want. Avoid tastes and expenditure you cannot always afford.

Save today for tomorrow's comforts or emergencies. The future is always unpredictable. Better to save than to have to borrow.

படும் பதற்ற நிலை, குழந்தைக்கும் பரவுவதாகும். பாலில் எந்த வித்தியாசமும் இல்லை.

தாயார் நோயுற்றிருந்தாலும், குழந்தைக்குத் தீங்கு ஏதும் இன்றிப் பாலூட்டலாம். தாய்ப்பாலிலுள்ள, கிருமி எதிர்ப்பு நுண்மங்கள் தாயாரின் நோய் குழந்தைகளுக்குக் கேடு செய்யாமல் பாதுகாத்து விடுகிறது. தாயாருக்குக் கடுமையான ஜுரமடித்தாலோ, மஞ்சள் காமாலை போன்ற நோய் வந்தாலோ, மருத்துவர் தாயாரை உடம்பு குணமடைகிற வரைபாலூட்ட வேண்டாமென்று ஆலோசனை கூறுவார். அப்படிப்பட்ட சமயத்தில் பாலை அவ்வப்போது பீச்சிக்கொட்டி விட வேண்டும். நோயிலின்று குணம் பெறும் வரை இதைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் பால் ஊறுவது குறையாது. உடம்பு தேறியவுடன் பழையபடி குழந்தைக்குப் பாலூட்ட முடியும்.

உங்கள் குழந்தை நோயுற்றிருந்தாலும் அதற்கு நிச்சயம் தாய்ப்பால் கொடுக்கலாம். குழந்தை வியாதியாகப் படுத்திருக்கும் போது, தாய்ப்பால் தொடர்ந்து கொடுத்து வரவேண்டியது முக்கியமாகும். ஏனெனில் உங்கள் பாலில் உள்ள கிருமிஎதிர்ப்பு நுண்மங்கள், ஏற்கெனவே பலவீனமாயுள்ள உடம்பிலிருந்து தோன்றக்கூடிய மற்ற நோய்கள் குழந்தைக்கு வராமல் பாதுகாக்கும். குழந்தை நோயிலின்று உடல் தேறுவதற்குத் தேவையான ஊட்டத்தையும் வலுவையும் அளிக்கும்.

கருவுற்றிருக்கும் தாய்மார்கள்...

தாயார் கருவுற்றிருந்தாலும் பால் ஊட்டலாம். கருவுற்றிருக்கும் காலம் முழுவதும் தனக்கோ, குழந்தைக்கோ கெடுதல் எதுவுமின்றித் தாயார் தன் குழந்தைக்குப் பாலூட்டலாம். வயிற்றில் இருக்கும் சிசுவுக்கும் கெடுதல் வராது. எனினும் தாய்ப்பால் கொடுக்கும் கருவுற்ற பெண்மணி ஒருவர், பால் ஊட்டும் குழந்தைக்காகவும், தனக்காகவும் வயிற்றில் வளரும் குழந்தைக்காகவும் சற்றே அதிகமாகச் சாப்பிட வேண்டும். இந்த மூன்று பேருக்கும் இந்தச் சமயத்தில் நல்ல ஊட்டம் தேவை.

வேலைக்குச் செல்லும் பெண்கள்...

வேலைக்குப் போகும் தாய் தன் குழந்தைக்குத் தாய்ப்பால் தான் கொடுப்பது என்று உறுதியுடன் இருந்தால், வேலைக்குப் புறப்படுமுன் காலையில் பாலைக் கையினால் பீய்ச்சிவைக்கலாம். இந்தப் பால் சுத்தமான மூடி போட்ட பாத்திரத்தில் வைக்கவேண்டும். அந்தப் பாத்திரத்தை ஏற்கெனவே தண்ணீரில் கொதிக்க வைத்துத் தக்கபடி சுத்தம் செய்திருக்க வேண்டும். இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கை குழந்தை உடலில் கிருமிகள் எதுவும் புகாமல் தடுக்க உதவும். தாய்ப்பாள் சில மணி நேரங்கள் குளிர்ப்பதனப் பெட்டியில் பாதுகாத்து வைத்து, தாயார் வெளியே போயிருக்கும் போது பயன்படுத்தலாம். பீய்ச்சிய பாலை அடுப்பில் நேராக வைத்துச்சுட வைக்காதீர்கள். அந்தப் பாலைச் சுட வைக்க, பாலுள்ள பாத்திரத்தைக் கொதிக்கிற நீர் உள்ள பாத்திரத்தில் வைத்துச் சுட வையுங்கள். வீட்டில் தங்கும் குடும்பத்தவர் எவரும், இந்தப் பாலை ஒரு சுத்தமான ஸ்பூனால் குழந்தைக்குக் கொடுக்கலாம்.

அழகு கெட்டுவிடுமா?

உங்கள் மேனி அழகை தாய்ப்பால் கொடுப்பது பாதிக்காது. அதற்கு மாறாக, தாய்ப்பால் கொடுப்பது உங்கள் வடிவழகைப் பழைய நிலைக்குக் கொண்டு வரும் இயற்கை வழியாகும். கர்ப்பம் தரித்த காலத்தில் உங்கள் உடலில் அதிகரிக்கும் எடையைக் குறைக்கத் தாய்ப்பால் கொடுப்பது உதவுகிறது. அதோடு வளரும் குழந்தைக்கு இடம் கொடுக்க விரிவடையும் கருப்பை தாய்ப்பால் ஊட்டும் போது வெளியாகும் ஒரு ஹார்மோனால் வழக்கமான வடிவை மீண்டும் பெறுகிறது.

தாய்ப்பால் ஊட்டும் தாயார் பச்சைத் தண்ணீர் குடித்தால் குழந்தைக்கு ஜலதோஷம் பிடிக்குமா? பிடிக்காது. தாய்ப்பால், குழந்தைக்குத் தக்க வெப்பநிலையில்தான் வருகிறது.

ஆதாரம்: குழந்தை. சத்துணவுத் தகவல் ஸர்வீஸ் (ஐ.என்.ஐ.எஸ்.) வெளியிட்டுள்ள 'உங்கள் குழந்தையின் வாழ்வு சிறப்பாக மலரட்டும்' நூலிலிருந்து.

—முருகவேல்



பரிசுக் குறிப்புகளைத் தேர்ந்தெடுத்தவர்கள்:-

வனிதா சமாஜம்

ரிஸர்வ் பாங்க் குவார்ட்டர்ஸ், சென்னை-10.

இம் மாத இல்லத்தரசி

முதல் பரிசு: மூடிபோட்ட எவர்சில்வர் சம்படம்

சோயா பீன்ஸ் வடை

தேவையான பொருட்கள்:

சோயாபீன்ஸ் 200 கிராம்.
துவரம் பருப்பு — 1 கைப்பிடி அல்லது 50 கிராம்.
கடலைப் பருப்பு — 1 கைப்பிடி அல்லது 50 கிராம்.
மிளகாய் வற்றல் — 6
ப. மிளகாய்.



பிப்ரவரி மாத மங்கையர் மலரில் அறிவிக்கப்பட்ட இல்லத்தரசி போட்டியில் பரிசுபெற்ற கட்டுரைகள்

பொட்டுக்கடலை மாவு — 50 கிராம்.
உப்பு — தேவையான அளவு.
கொத்து மல்லித் தழை நறுக்கியது— 1 கைப்பிடி
கறிவேப்பிலை — 2 ஆர்க்.
பெருங்காயம் — சிறு துண்டு.
வெங்காயம் — 1
கொப்பரை அல்லது தேங்காய்த் துருவல்— 1 கரண்டி.
முந்திரிப் பருப்பு அல்லது வேர்க்கடலைப் பருப்பு — 1 கைப்பிடி.
இஞ்சி — 1 சிறிய துண்டு.
பூண்டு — 2 பற்கள்.
டால்டா அல்லது எண்ணெய் தேவையானது

செய்முறை:

முதல் நாள் இரவு சோயா பீன்ஸை நீரில் ஊற வைக்கவும். துவரம் பருப்பு, கடலைப் பருப்பு இவைகளையும் மற்றொரு பாத்திரத்தில் ஊற வைக்கவும். மறுநாள் காலையில் கல் அரித்து சோயாபீன்ஸ், க. பருப்பு, மூன்றையும் கல்லுரலில் ஜலம் சேர்க்காமல் நறநற என்று உப்பு, மிளகாய் வற்றல், பெருங்காயம் சேர்த்து அரைக்கவும். பொட்டுக் கடலை மாவு, பொடியாக நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை, கொத்துமல்லி, கொப்பரை இவற்றைச் சேர்க்கவும். வேர்க்கடலை அல்லது முந்திரிப் பருப்பையும் உடைத்துப் போடவும்.

பின் ஒரு பாலிதீன் பேப்பரில் சற்று லேசான வடைகளாகத் தட்டி 3 ஓட்டைகள் போட்டு வைக்கவும். வாணலியில் டால்டா காய்ந்தவுடன் தட்டிய வடைகளைப்பொரித்து பொரித்துப் பொன் நிறமாக வெந்தவுடன் திருப்பி விட்டு எடுக்கவும். முறுமுறு என்று சாப்பிட ருசியாக இருக்கும். இதேபோல் மேலே கூறிய வடை மாவை குக்கரில் ஆவியில் வைத்து உதிர்த்து, கூறிய மற்ற சாமான்களைத் தாளித்து பிட்டு தயாரிக்கலாம்.

உளுத்தம் பருப்பில் செய்யக் கூடிய எல்லாப் பட்சணங்களும் சோயா பீன்சில் தயாரிக்கலாம்.

சோயா பீன்ஸை உசிலித்து காய்கறிசமையலுக்குத் தாளிக்கலாம்.

ஆர். காமாட்சி, தஞ்சாவூர்.

இரண்டாம் பரிசு: மூடிபோட்ட எவர்சில்வர் வாளி

சோயா பீன்ஸ் கொழுக்கட்டை:

தேவையான பொருள்கள்

சோயா பீன்ஸ் — ஒன்றரை கப்.
சர்க்கரை — 1 கப்
டால்டா — 2 மேசைக்கரண்டி
ஏலக்காய் — 3 பொடி செய்தது
பச்சை கற்பூரம் — சிறிது
பச்சரிசி — 1 ஆழாக்கு
மிளகாய் வற்றல் — 4 (பொடி செய்தது)
பெருங்காயம் தூள் உப்பு சிறிது
(முட்டைகோஸ் காலிஃப்ளவர் அரை கப் — தூளாகத் துருவியது.)

செய்முறை:

1. சோயா பீன்ஸை முதல் நாளிரவே ஊற வைத்து தோலை உரித்து மிக்ஸியில் நன்கு தண்ணீர் விடாமல் அரைக்கவும்.
2. பச்சரிசியை 1 மணி நேரம் ஊற வைத்து மிக்ஸியில் நைஸாகஅரைத்துக் கொள்ளவும்.
3. சோயா பீன்ஸை அரைத்த விழுதை 2 சமபாகங்களாகப் பிரித்து ஒரு பங்கு சர்க்கரை டால்டா சேர்த்து வாணலியிலோ உருளியிலோ நன்கு சுருண்டு வரும் வரை கிளறவும். ஏலப்பொடி சேர்த்து இறக்கவும்.
4. சோயா பீன்ஸை அரைத்த விழுதில் மீதி பகுதியை மிளகாய்ப் பொடி உப்பு மற்றும் பெருங்காயம் சேர்த்து இட்லித் தட்டிலேயே ஆவியில் இட்டு இன்னும் ஒரு தட்டில் கேபேஜ் காலிஃப்ளவர் துருவியவற்றையும் வைத்து, இரண்டையும் ப்ரீட்டிலே வேகவிடவும்.
5. வேகவிட்ட கார விழுதை வாணலியில் எண்ணெய்விட்டு, கடுகு தாளித்து, சுருள வதக்கி எடுத்துக் கொள்ளவேண்டும். இப்போது இனிப்பு கார பூரணங்கள் தயார்.
6. அரைத்த பச்சரிசி மாவை கன உருளியில் விட்டு அரை டீஸ்பூன் எண்ணெய் விட்டுக் கிளறவும்.
7. வெந்ததும் மாவை சிறுசிறு உருண்டைகளாகக் கட்டியில்லாமல் உருட்டிச் சொப்பு போலச் செய்து கொள்ளவும்.
8. பாதி சொப்புகளில் இனிப்பு பூரணமும் மீதி சொப்புகளில் கார பூரணமும் வைத்து மூடி ஆவியில் வேகவிடவும்.
9. கார விழுது சுருள வேக விட்டதை உருட்டி உருண்டைகளாக்கி ரசம், குழம்பு இவை கொதிக்கும் போது போட்டு இறக்கவும்.

தேங்காய் விற்கும் விலையில் சோயா பீன்ஸ் அரைத்த விழுது கலந்த பூரணம் வைத்து செய்தால் மிக மலிவானதாகவும் சத்துள்ளதாகவும் இருப்பதுடன் குழந்தைகள் விரும்பியும் சாப்பிடுவார்கள்.

—கே. வி. ருக்மிணி, சென்னை-43

மூன்றாம் பரிசு: எவர்சில்வர் ஸாஸ் பான்

ஸோயா பீன்ஸ் அல்வா

தேவையான பொருட்கள்:

ஸோயாபீன்ஸ் – 500 கிராம் (இரண்டரை கப்),
பால்கோவா – சர்க்கரை சேர்க்காதது 1 கப்
சர்க்கரை – 3 கப்,
நெய் – முக்கால் கப்,
ஏலக்காய் – 50 கிராம்,
முந்திரிப் பருப்பு அல்லது சாரப் பருப்பு,

செய்முறை:

ஸோயா பீன்ஸை 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து மிக்ஸியில் அல்லது கல்லுரலில் கரகரப்பாக அரைத்துக்கொள்ளவும். கடாயில் கால் கப் நெய்யை விட்டு, அரைத்த விழுதை நன்கு வதக்கிக் கொள்ளவும். பிறகு சர்க்கரையை வதக்கிய விழுதில் போட்டுக் கிளறவும். சர்க்கரை கரைவதற்கு 1 கரண்டி பாலையும் கலந்து கொள்ளவும். பாக்கி நெய்யையும் விட்டுக் கிளறவும். சுருண்டு வரும் சமயம் கோவாவை போட்டு கிளறவும். வேண்டுமானால் நிறத்திற்கு கேசரி பவுடர் சிறிது போடலாம். நன்கு கெட்டியானதும் ஏலக்காய் பொடியைப் போடவும். நெய் தடவிய தட்டில் கொட்டி மேலாக வறுத்து முந்திரி பருப்பைத் தூவவும். அதன்பின் துண்டு போட்டுச் சாப்பிடவும்.

—கிரிஜா சங்கர், திருச்சி

ஆறுதல் பரிசு: எவர்சில்வர் டிபன் பாக்ஸ்

சோயாபீன்ஸ் பருப்புப் பொடி

தேவையான பொருட்கள்:

எள்ளு – 2 தேக்கரண்டி,
சோயாபீன்ஸ் 1 கப் (150 கிராம்),
து. பருப்பு – 1 மேசைக்கரண்டி,
மிளகு – 1 தேக்கரண்டி,
சுக்கு – சிறிது,
கடலைப்பருப்பு – 1 மேசைக்கரண்டி,
கோதுமை – 1 மேசைக்கரண்டி,
சர்க்கரை – ஒன்றரை ஸ்பூன்,
மிளகாய் வற்றல் – 3 அல்லது 4,
உப்பு – அளவாக.

செய்முறை:

மேலே சொன்ன சாமான்களை வாணலியில் எண்ணெய் விடாமல் தனித்தனியாக வறுத்து எடுத்து மிக்ஸியில் பொடித்துக் கொள்ள வேண்டும். சூடான சாதத்தில் சிறிது நெய் விட்டு இதைப் பிசைந்து சாப்பிட்டால் மிக சுவையாக இருக்கும்.

—சூடா சாரதி, சென்னை-4.

ஆறுதல் பரிசு: எவர்சில்வர் டிபன் பாக்ஸ்

சத்தான பானம்

தேவையான பொருட்கள்:


பாசிப்பயிறு (அ) பருப்பு – கால் கிலோ,
நல்ல கோதுமை – அரை கிலோ,
பார்லி – 100 கிராம்
ஜவ்வரிசி – 100 கிராம்
கொண்டைக் கடலை – 100 கிராம்
புழுங்கல் அரிசி – 100 கிராம்
பொட்டுக்கடலை – 100 கிராம்
நிலக்கடலை (வேர்க்கடலை) – 100 கிராம்
ஸோயாபீன்ஸ் – 200 கிராம்
பால்பவுடர் ஏதாகிலும் – 200 கிராம்
ஏலக்காய் – 5
பிடித்தவர்கள் பச்சைக்கற்பூரம் சிறிது சேர்த்துக் கொள்ளலாம்.
கலருக்குக் கேஸரி பவுடர் – சிறிது.

(விருப்பமுள்ளவர்களும் வசதியுள்ளவர்களும்) முந்திரிப்பருப்பு – பாதாம்பருப்பையும் சேர்க்கலாம்.

செய்முறை:

மேற்கண்ட பொருட்களைக் கல் தவிடு பொட்டு குப்பை போகப் புடைத்துப் பொறுக்கிச் சுத்தம் செய்து விட்டு வாணலியில் தனித்தனியே பொறியும் பதம் வரும் வரை வறுத்துக் கொள்ளவும். (ஏலக்காய் பால் பவுடர் தவிர) பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து மிஷினில் அரைத்துக் கொண்டு காற்றுப் புகாத டின் அல்லது பாட்டில்களில் போட்டு வைத்துக் கொள்ளவும். அல்சர், காஸ்டிக் தொந்தரவு உள்ளவர்கள் இதை காலை மாலை வெறும் வயிற்றில் அரை டம்ளர் பால் – அரை டம்ளர் தண்ணீரைப் பொறுக்கும் சூட்டில் சூடாக்கி ஒன்றரை டீஸ்பூன் இந்த சத்து மாவையும் 1 டீஸ்பூன் சர்க்கரையையும் சேர்த்து நன்கு கலக்கிக் குடித்தால் தெம்பாகவும், ஆரோக்கியமாகவும், அதேசமயம் பசியும் பொறுக்க முடிகிறது.

—ஜானு சுப்பிரமணியன், காரைக்குடி



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றுதான், அதன் ஒப்பற்ற 3-வழிச் செயலால் வியர்க்குருவை தடுக்கிறது, முறியடிக்கிறது.

OBM-2515 TM

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றில் தான், நிரூபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது—அது, மூன்று தீவிரமான வழிகளில் செயல் படுகிறது.

- **தடுத்தல்**

  இதன் பாக்டீரியோஸ்டாடிக் செயல், பாக்டீரியா கிருமிகள் பெருகுவதை தடுக்கிறது.


- **நிவாரணம்**

  சுகந்த மணமுள்ள ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், வியர்வையை உறிஞ்சுகிறது. இதமளித்து விரைவான நிவாரணம் தருகிறது.

- **செயல்**

  ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒப்பற்ற கெரடோலிடிக் செயல் உள்ளது: அது, பாதிக்கப்பட்ட சருமத்தை விரைவாக மாற மருவற்றதாக்குகிறது.





Johnson & Johnson


ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்- வேர்க்குருவிலிருந்து உங்களுக்கு சிறந்த பாதுகாப்பு.

சில நிமிடங்களில் சுவையான
சிற்றுண்டி சமைத்தளியுங்கள் உங்கள் குடும்பத்தாருக்கு!

ஸ்:பியர்ஹாட்

ஸாண்ட்விச் டோஸ்ட்மேக்கர் உபயோகியுங்கள்.

ஸ்:பியர்ஹாட் ஸாண்ட்விச் டோஸ்ட்மேக்கர் உதவியுடன் திருப்தியான சுவையான விருந்தளிப்பீர். விதவிதமாய் விருப்பமான பொருள் சேர்த்து முறுமுறுவென சுடச்சுட சுவையாக தயாரித்து அளியுங்கள். பார்வைக்கு கனிவான இந்த டோஸ்ட்மேக்கர், தானாக இயங்கும் தர்மோ-ஸ்டாட் கண்ட்ரோல் உடையது. டெ:ப்லான் கோட்டிங் செய்யப்பட்டது. ஆகவே, ஸாண்ட்விச், டோஸ்டரோடு ஒட்டிக்கொள்ளாது. எளிதாக பயன்படுத்தலாம். இலகுவாக சுத்தப்படுத்தலாம். உங்கள் வீட்டிற்கு சாலச் சிறந்தது. அன்பளிப்பாய் அளிக்க அருமையான பொருள்.



மாடல்
ஃபிஃப்டி-ஃபிஃப்டி

விற்பனை ஏற்பாடு:

BATLIBOI

பாட்லிபாய்
& கம். லிட்.,
ரெஜிஸ். ஆ:பீஸ்:
வி.பி. காந்தி மார்க்,
பம்பாய்-400 023.

இதன் கிளைகள்,
இணையாளர்கள் மற்றும்
விற்பனையாளர்கள்
இந்தியா முழுவதும் உண்டு.

சிறந்த சுவைமிக்க விரைவான சிற்றுண்டிக்கு
ஸ்:பியர்ஹாட் ஸாண்ட்விச் டோஸ்ட்மேக்கர்

வாழ்க்கையில் நான் கற்ற பாடம்

எல்லாம் எனக்கே சொந்தம்!

குழந்தைப் பருவத்திலிருந்தே எனக்குப் பிடிவாதம் அதிகம் என்று அம்மா அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். எதற்கெடுத்தாலும் அழுவது என்பது என்னுடைய பிறவிக் குணமாகவே அமைந்திருந்தது. எதுவாயிருந்தாலும் எனக்கே வேண்டும் என்று சாதிப்பேன். ஐந்து குழந்தைகளில் முதலாவதாகப் பிறந்து விட்டு இப்படி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையே இல்லாமல் இருக்கிறாயே என்று அம்மா புலம்புவது வழக்கம்.

என்னுடைய கல்யாணத்தைக் கூட பிடிவாதத்துடன் அழுதே சாதித்துக் கொண்டேன். முறை மாமா. விமானப்படையில் வேலை பார்ப்பவர். ஒருமுறை விடுமுறையில் வந்திருந்த போது, ''எல்லோரும் சொல்கிறார்களே என்று நீ மனத்தில் ஆசையை உண்டாக்கிக்காதே. பின்னால் ஏமாற்றம் ஏற்படுமானால் உன்னால் தாங்கிக் கொள்ள முடியாது'' என்றார். நான் பொருமிப் பொருமி அழுதேன். மாலைமாலையாகக் கண்ணீர் வடித்தேன். ''நீங்கள் என்னைக்கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விட்டால் அப்புறம் இந்த பத்மாவை ஆறு, குளத்தில் தான் தேட வேண்டும்'', என்று விக்கிக் கொண்டே சொல்லி முடித்தேன்.

அவர் கரைந்து போனார். இந்தப் பெண் சொன்னபடி செய்தாலும் செய்யும் என்ற அச்சம் அவரைத் தாக்கியிருக்க வேண்டும். பெண் பாவத்துக்கு ஆளாக வேண்டாம் என்று மனமிரங்கி ஒப்புக் கொண்டார். எங்கள் கல்யாணம் நடந்தது.

கல்யாணத்திற்கப்புறம் தான் என்னுடைய சுயரூபத்தை அவர் முழுமையாகப் பார்த்தார். என் கணவர் எனக்கு மட்டுமே சொந்தமாயிருக்க வேண்டும் என்ற வெறி என்னைப் பிடித்தாட்டியது. அவருடைய தங்கைகள் அண்ணா, அண்ணா என்று அழைத்துக் கொண்டு இழைந்தது பிடிக்கவில்லை. தாயிடம் அவர் அன்பாகப் பேசியது கூடப் பிடிக்கவில்லை. முகத்தை உர்ரென்று வைத்துக் கொள்வேன். யாரேனும் பேசினால் குதர்க்கமாகப் பதில் சொல்வேன். தனியே உட்கார்ந்து அழுது தீர்ப்பேன்.

இரவு நேரங்களில் என் தலையை வருடியவாறு அவர் எனக்குப் புத்திமதி சொல்லுவார். இந்தக் குணம் இருப்பவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது என்று உதாரணங்களுடன் விளக்குவார். நான் இப்படி இருக்கிறேனே என்று எரிச்சல் படாமல் நிதானத்துடன் அரவணைக்கும் அவரைப் புரிந்து கொள்ளும் பக்குவம் எனக்கு இருந்தால்தானே! வெட்டு வெட்டென்று பதில் சொல்லுவேன். எவ்வளவோ நாட்கள் அவர் புறம் திரும்பாமல் ஒதுங்கிப் படுத்திருந்திருக்கிறேன்.

ஒரு மாதத்தனிக்குடித்தன டில்லி வாழ்க்கை இனிமையாகவே கழிந்தது. என்னுடைய பிறவிக் குணம் தலைதூக்க வாய்ப்பே இல்லாமல் ஆனந்தத்தில் மிதந்தேன். சரியாக ஒருமாத காலம்தான். மீண்டும் என்னை நானே கஷ்டப்படுத்திக் கொண்டு அவரையும் கஷ்டப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது.

அவருக்கு மிகவும் நெருங்கிய நண்பரொருவர் மனைவியுடன் அடிக்கடி வந்து போனார். சமயத்தில் அவள் மட்டும் வந்து பேசியிருந்து விட்டுச் செல்வாள். மிகவும் மார்டனாக உடை உடுத்தி, வாய் நிறைய ஆங்கிலம் பேசுவாள். என்னுடன் பேசுவதை விட என் கணவரிடம் தான் அதிகம் பேசினாள். எனக்கு ஆங்கிலம் அவ்வளவாகப்பேச வராது. அவர்களிருவரும் மணிக்கணக்கில் பேசுவதும் சிரிப்பதும் என்னை உறுத்தியது. அவள் என் கணவரிடம் அதிகமான நெருக்கத்துடன் பழகுவதாகத் தோன்றியது. என்னைக் கல்யாணம் செய்து அழைத்து வருவதற்கு முன்பிருந்தே அந்தக் குடும்பத்துடன் என் கணவருக்குப் பழக்கம் உண்டு என்பது தெரிந்ததும் உறுத்தல் சந்தேகமாக உருவெடுக்க ஆரம்பித்தது.

அவள் வருவதை வெறுக்கத் தொடங்கினேன். வார்த்தைகளால் என் கணவரைக் குத்திக் குத்தியெடுத்தேன். வாழ்க்கையே இழந்து விட்டது போல் அழுதேன். அன்றுட.. வாழ்வு நரகமாகியது.

என் கணவருக்கு என்னுடைய மனப்போக்கு விளங்கி விட்டது. இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்று அவர்





மனத்துக்குள் தீர்மானம் செய்து கொண்டு விட்டதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை. எது எனக்குப் பிடிக்கவில்லையோ அதை நிறையவே செய்ய ஆரம்பித்தார். அவளிடம் இன்னும் அதிகமாகப் பேசினார், சிரித்தார், நான் சித்திரவதைக்குள்ளானேன். உயிரையே மாய்த்துக் கொண்டு விட்டால் தேவலை என்று தோன்றியது.

அவரிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன். மிரட்டிக் கூடப் பார்த்தேன். அவர் மசிவதாக இல்லை. தன்னுடைய செயலுக்கு விளக்கம் கூறவும் இல்லை.

உண்மை விளங்க எனக்கு ஆறுமாத காலம் ஆகியது. எனக்குப் பாடம் கற்பிக்கத் தான் அவர் இப்படிச் செய்கிறார் என்பது கொஞ்சம் கொஞ்சமாக விளங்கியது. மனம் இலேசானது. அவரிடம் சிரித்துக் கொண்டு அமைதியாகப் பேச ஆரம்பித்தேன். எல்லாமே மாறிப் போனது.

''என்னைத் தண்டிக்கத்தான் அப்படிச் செய்ததாக ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே'' என்று கேட்டேன்.

''அசடே, எந்தப் பாடத்தையும் நாம் புகட்டுவதை விட அவரவர்களே அனுபவித்துக் கற்றால் தான் அது நிலையாக இருக்கும்'' என்றாரே பார்க்கலாம்.

-கே. பத்மாவதி, சென்னை-73.

தன்கையே தனக்குதவி!

● எனது 9-வது வயதில் தாயை இழந்த எனக்கு ஒரு தம்பி, ஒரு தங்கை இருந்தனர். என் தாய் இருந்தபோதே ''சின்னவீடு ''ஒன்றை அமைத்துக் கொண்ட என் தந்தை, என் தாய் இறந்த பின் அதையே பெரிய வீடாக மாற்றிக் கொண்டார். தம்பி, தங்கை, இரு குழந்தைகளை வளர்க்கவும், சாப்பாட்டிற்கும் என் தாய் இருந்த போது கற்றுக் கொடுத்த நாட்டியமும், இசையும் உதவின. நாட்டியத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததால் எனது நாட்டியக் கச்சேரிகள் எனக்கு வருமானத்தைத் தந்தன. 3 வயது, 1 வயதாக இருந்த குழந்தைகள் பள்ளிப் படிப்பில் நன்கு தேறி வந்தனர்.

இதனிடையே என்னை மணக்க ஒருவர் முன் வந்தார். அதிக சீர், வரிசைகள் எதிர் பார்க்காது திருமணத்திற்கு ஒப்புக்கொண்ட அவரிடம் என்னுடைய கடமை, குடும்ப சூழ்நிலை, தொழில், திருமணமான பின்னும் நாட்டியக் கச்சேரி செய்ய வேண்டிய. அவரிடம் விளக்கச் சம்மதித்த பின்னர் திருமணம் நடந்தது. ரயில்வேயில் சாதாரண கணக்கராகப் பணியாற்றிய அவருடைய வருமானம் மிகவும் குறைவு.

அவர் குடும்பத்துக்குக் கடனுக்கு எனது வருமானம் மிகவும் தேவைப்பட்டது. அதனால் திருமணம் ஆனபின் எனது நடனக் கச்சேரிகள் இரட்டிப்பாகியது. காலப்போக்கில் என் தங்கை, நாத்தனார் இருவரின் திருமணங்களும் நல்ல இடங்களில் நடைபெற்றன. தம்பி, மைத்துனர்கள் தங்கள் கல்லூரி படிப்பை முடித்து விட்டு, உயர்ந்த பதவிகளில் வேலைக்கு அமர்ந்தனர். வீட்டின் மீதிருந்த கடன் அடைக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டது.

வருமானத்தையே குறியாகக் கொண்ட நான் என் கணவரை விட்டுப் பிரிந்திருந்த நேரமே அதிகம். அதன் காரணமாக என் விடத்தை நிரப்ப அவருக்கு இன்னொரு பெண் தேவையாயிற்று. இந்நிலையில் எனது உடல்நிலை பாதிக்கப்பட்டது. எனது வருமானம் குறைந்தது. மேலும் நடன நிகழ்ச்சிகள் செய்யத் தகுதியின்றி உடல் பருத்து விட்டது. வருமானமின்றித் தவித்த நான் என் கணவரிடம் உதவி கேட்டேன். ''குடும்பச் சொத்து எல்லோருக்கும் பொதுவானது. என் பாகம் பிரிக்கப்பட்ட பின் பார்க்கலாம். மேலும் எனக்கென்று ஒரு குடும்பம் உருவாகி விட்டது. எனக்கே என் வருமானம் போதவில்லை. பிற்பாடு ஏதேனும் பணம் வந்தால் பார்க்கலாம்.'' என்ற பதில் கிடைத்தது.

மைத்துனர்களிடம் கேட்டதற்கு ''எங்களுக்கு மட்டுமா கொடுத்தாய்? உன் தம்பிக்கும்தானே கொடுத்தாய்? அவனிடம் போய்க் கேள்!'' என்றார்கள்.

தம்பியிடம் கேட்டதற்கு ''உன்னை யார் கொடுக்கச் சொன்னது. இப்போது வந்து தொல்லை கொடுக்கிறாய்'' என்றான். தங்கை கூறிவிட்டாள் ''கொடுத்து விட்டுத் திரும்பக் கேட்பது மிகவும் கேவலம்'' என்று.

இப்போது என் வயது ஐம்பது. இசை நடன வகுப்புக்களில் வரும் சம்பாத்தியமே ஜீவியத்திற்கு வழி. ஓடிஓடிச் சம்பாதித்தும் தங்க நிழலின்றி, சாப்பாட்டிற்குப் போதுமான வருமானமின்றித் தவிக்கும் நான் இப்போது உணருகிறேன். 'எப்போதுமே வருமானம் வந்து கொண்டிருக்கும், பிற்பாடு சேமிக்கலாம் என்று நினைத்தது எவ்வளவு பெரிய தவறு' என்று, 'எல்லாம் என்னுடைய சுற்றம், எல்லாம் என் குழந்தைகள் என்று நினைத்தது எத்தனை பிசகு!' என்று.

-எஸ். ஜெயலட்சுமி, பெங்களூர்-1.

ராசி பலன்

ஏப்ரல் '84

மேஷம்



வாழ்க்கையில் சகஜமான நிலைமைக்கு வந்து விட்ட நிலையில், உங்கள் குழந்தைகளின் காரணமாக முன்னேற்றம் ஏற்படும். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், எதிர் பார்த்த இடமாற்றமும் கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப் பிரயாணங்களினால் ஆதாயமும், நண்பர்களின் உதவியால் பணவரவும் உண்டாகும்.

ரிஷபம்



எந்தக் காரியத்தையும் மிகவும் கவனமாகச் செய்ய வேண்டிய நாட்கள் இவை. கவனப்பிசகின் காரணமாகப் பொருள்நஷ்டம் உண்டாகலாம். போட்டிகளுக்கு இடையே உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆதாயம் உங்கள் பக்கமே உண்டாகும். தற்சமயத்திற்கு தோல்விகள் போலத் தோன்றும் காரியங்கள் யாவும் இம்மாதத்தின் மூன்றாவது வாரத்தில் திசை திரும்பும். பண வரவு சகஜ நிலையில் இருக்கும்.

மிதுனம்



நீங்கள் நிர சிந்தித்து எடுக்கும் முடிவுகளைச் சார்ந்த காரியங்களை ஆற்றுவது இப்போதைக்கு மிகவும் பத்திரமானது. சில நண்பர்களின் காரணமாக எரிச்சலை ஊட்டக் கூடிய சம்பவங்களோ, நஷ்டப்படக் கூடிய காரியங்களோ ஏற்படலாம். அதிகம் யாருடன் விவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. திட்டமிட்ட காரியங்கள் மாதக் கடைசியில் உங்களுக்கு அனுகூலமாக முடியும்.

கடகம்



உங்களுக்கு அவசியமில்லாத நிலத்தையோ அல்லது வேறு பொருள்களையோ விற்பதற்கு நல்ல தருணமிது. நல்ல லாபம் தரக்கூடிய வியாபாரமாக அமையும். அதிர்ஷ்ட வசமாக எதிர்பாராத பணவரவு உண்டாவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. குடும்பத்தில் கணவன் மனைவியிடையே இருந்த சச்சரவுகள் நீங்கி சுமுகநிலை உண்டாகும். குழந்தைகளினால் சுபநிகழ்ச்சிகள் உண்டாகும்.

சிம்மம்




இந்த மாதம் புதிய நண்பர்களின் அறிமுகமும், பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் சம்பவங்களும் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கிட்டும். விலையுயர்ந்த பரிசுகள் சிலருக்குக் கிடைக்கும். திருமணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த மாதம் வரன்கள் கைகூடும். பிரச்னைகள் ஏற்படுவது போலத் தோன்றினாலும் இறுதியில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும்.



கன்னி

வீட்டு விவகாரங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நாட்களாக இம்மாதம் இருக்கும். மனதிற்குகந்த நட்பு இனிய வகையில் உறவாக மாறும். குடும்பத்தில் அமைதி நிலவுவதுடன் உல்லாசப் பிரயாணங்களும் ஏற்பாடாகலாம். சிலருக்கு புண்ணியஸ்தலங்களின் தரிசனங்களும், பெரியோரின் ஆசியும் கிட்டும். செலவு பணவரவிற்கு ஏற்றதாகவே அமையும்.



துலாம்

உங்கள் வேலைகளின் பளு அதிகமாவதுடன் ஓய்வு நேரத்தையும் ஆக்கிரமித்துக் கொள்ளும் அளவிற்குக் கடமைகள் அதிகமாகும். ஆனாலும் கடின உழைப்பிற்கு ஏற்ற வெகுமதியும், பாராட்டுதல்களும் கிடைப்பதுடன் பதவி உயர்வும் சிலருக்குக் கிட்டும். எனினும் புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கு முன் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. உடல்நலமும் ஓரளவு பாதிக்கப்படலாம்.




விருச்சிகம்

புதிய திட்டங்களையும், நீங்கள் நீண்ட நாட்களாக யோசித்துச் செய்ய நினைத்திருந்த வேலைகளையும் செய்து முடிப்பதற்கு உகந்த நாட்கள் இவை. உங்கள் குடும்ப நண்பர் ஒருவரின் சம்பந்தப்பட்ட வைபவங்களில் புதிய நபர்களின் அறிமுகம் ஏற்படுவதோடு, அதனால் ஆதாயங்களும் உண்டாகும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்து வந்த செய்தி மாதத்தின் நடுவில் கிட்டும்.



தனுசு

உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை மிகுந்த ஜாக்கிரதையுடன் கவனிக்க வேண்டிய நாட்கள் இவை. நண்பர்களின் மூலமாகவே சங்கடங்கள் ஏற்படுவதுடன் நீங்கள் இருக்கும் நிலைக்கே ஆபத்து உண்டாகலாம். எந்தக் காரியத்தைச் செய்வதற்கு முன்பும் யோசித்துச் செய்ய வேண்டும். அதிகம் யாருடன் விவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.




மகரம்

உங்களை நோக்கி வரும் வாய்ப்பொன்றினைச் சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டீர்களானால் வளமான எதிர்காலத்தை அடையலாம். உறவினர் ஒருவர் மூலமாக எதிர்பாராத ரீதியாகப் பணவரவும் சிலருக்கு உண்டாகும். வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், தனியார்த் துறையில் உள்ளவர்களுக்கும் அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும்.



கும்பம்

கலைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பொது மக்களின் ஆதரவும், புகழும் கிடைக்கும். வயதில் மூத்த பெரியவர் ஒருவரின் அறிமுகத்தால் வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். நீதிமன்ற வழக்கில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இம்மாதமும் எதிர்பார்த்த முடிவு ஏற்படாமல் இழுபறி நிலைமையே இருக்கும். சிலருக்கு வாகனப் பிராப்தி உண்டாகும்.



மீனம்

இம்மாதம் உங்கள் கடமைகள் நிறைவேறுவதுடன் மேலதிகாரிகளின் கவனத்திற்கும் ஆளாவீர்கள். உங்கள் குழந்தைகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு இம்மாதம் ஏற்பாடாகும். ஓரளவு அலைச்சல்களும், சிரமங்களும், பணச்செலவும் கொண்ட மாதமாக இம்மாதம் இருக்கும். உறவினர் ஒருவரின் பிரச்சினையை ஒரு புதிய கோணத்தில் தீர்த்து வைப்பதன் மூலம் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.



ஹேலோ வழங்குது
கூந்தல் எழில்—
கூந்தல் பெற்றிடும்
மென்மை சுகம்.
அதன் மணமோ
அபூர்வப் புதுமையே,
ஹேலோ உணர்வே
உன்னதமே.

வியப்பூட்டும் புதிய ஹேலோ வரிசை

ஹேலோ எக்
ஷாம்ப்பூ—
புரத
ஊட்டத்திறனானது.

புதிய ஹேலோ
க்ரீன் ஆப்பிள்
ஷாம்ப்பூ—
வியப்பூட்டும்
புத்துணர்வு மணம்
அளிக்கிறது.

புதிய ஹேலோ
ஹெர்பல்
ஷாம்ப்பூ—
மூலிகைகளின்
இயற்கை கலன்கள்
உள்ளது.

ஹேலோ உணர்வே உன்னதமே!

GK&E.B83.29.TM





மகப் பேற்றிற்குப் பின் உடற் பயிற்சிகள்

டாக்டர். என். அண்ணாஜி



உடல் நலமுள்ள தாய்மார்களும், குழந்தை பிறந்த அடுத்த நாளிலிருந்து உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். நாள்தோறும் காலை உணவிற்கு ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் இப்பயிற்சிகளைச் செய்யவேண்டும். இப்பயிற்சிகள் வயிற்றின் தசைக்கும், கூபகத்தின் அடித்தளத்திற்கும், மற்ற எல்லாத் தசைகளுக்கும் இரத்தச் சுழலை அதிகரித்து வலுவூட்டுகிறது. இவைகளை மெதுவாகவும், அமைதியாகவும் ஐந்து முதல் பத்து நிமிஷங்கள் வரை செய்யவேண்டும்.

முதல் நாள் செய்ய வேண்டிய பயிற்சிகள்:

(1, 2.)

1. படுக்கையில் படுத்துக் கொண்டு; கைகளைப் பக்கத்தில் இருத்தி



வயிற்றுத் தசையைச் சுருக்கிக்கைகளைப் பக்கவாட்டிலும், மேலும் உயர்த்தி, மூச்சை உள்ளிழுக்கவும். மூச்சை வெளியே விடும் போது (எல்லாபயிற்சிகளையும் செய்ய ஆரம்பிக்கும் போது உள்ளே மூச்சை இழுத்து, பயிற்சி முடியும் போது மூச்சை வெளியே விட வேண்டும்.)

2. கால்களை மடக்கிக். குதிகால்களை பிட்டத்திற்குப் பக்கமாகக் கொண்டு வரவும். இப்போது மூச்சை இழுக்கவும். பின் மூச்சை வெளியே விட்டுக் கால்களை நீட்ட வேண்டும்.

2—ம் நாள் செய்ய வேண்டிய பயிற்சிகள்
(1, 2, 3, 4, 5.)

3. படுக்கையில் படுத்த வண்ணம் கால்களை மடக்கிப் பாதங்களைப் பிட்டத்திற்குப் பக்கமாக வைத்துக் கொண்டு, கைகளை நீட்டி, இடுப்பை மேல் நோக்கி உயர்த்தவும். மூச்சை விட்டு இடுப்பைத் தளர்த்தவும்.

4. படுத்தபடி மூச்சை இழுத்துப் பக்கவாட்டில் கைகளை நீட்டிக்கால்களை மடக்கி, நெஞ்சுக்குப் பக்கமாகக் கொண்டு வர வேண்டும். பின் முன்னிருந்த நிலைக்கு வரும் போது மூச்சை விட வேண்டும்.

5. படுத்தபடி கைகளைப் பக்கவாட்டில் நீட்டி, வலது பக்கம் திரும்பி, இடப்புற முழங்காலை நெஞ்சோடு அணைக்க வேண்டும். கால்களைப் படுக்கையின் மீது படாமல் நீட்டவேண்டும். மறுபுறம் திரும்பி மற்றொரு காலையும் அவ்வாறு செய்ய வேண்டும்.

3—ம் நாளும், 4—ம் நாளும் —செய்ய வேண்டிய பயிற்சிகள்:





(முதல் 5 பயிற்சிகள்)

6. படுத்தபடி முழங்கைகளை ஊன்றி உட்காரவும். மெதுவாகப் பழைய நிலைக்கு வரவும்.

7. குப்புறப் படுத்துக் கொண்டு கைகளைத் தலையின் கீழ்மடக்கிவைத்துக் கொண்டு, கால்களை மடக்கவும். பின்னர் முன் நிலைக்கு வரவும்.

8. படுத்தபடி கைகளைத் தலையின் கீழ் மடக்கி, மெதுவாக எழுந்து உட்கார்ந்து, முன் கவிழ்ந்து, கால் விரல்களைத் தொட வேண்டும். பின் முன்னிலைக்குச் செல்லவும்.

9. படுத்தபடி பக்கவாட்டில் கைகளை நீட்டி, இடுப்பை மடக்கிச் சைக்கிள் மிதிப்பது போல் இரு கால்களையும், மாற்றி, மாற்றி நீட்டி மடக்கவேண்டும்.

(5–ம் நாள் 1–லிருந்து 9 வரை பயிற்சிகள் செய்ய வேண்டும்.)

இப்பயிற்சிகள் தொடர்ந்து ஒருமாதம் வரை செய்ய வேண்டும்.





இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!

கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.

இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!





கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது. உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!

இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.



Godrej

பவுடர் ஹேர்-டை
கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

குறுநாவல்

மாறும் முகங்கள்

— வையவன் —

1

''லட்சியம் தெளிவாயிருந்தா பாதை தன்னாலே கண்ணுக்குப் புலப்படும்.''

ஓட்டி வந்த காரை வித்யா வீட்டிற்குப் போகும் நீளமான சந்தில் திருப்ப ஸ்டியரிங்கை வளைத்தவாறே சொன்னாள் பிந்து. பக்கத்தில் அமர்ந்திருந்த வித்யா பெருமூச்சு விட்டாள்.

''லட்சியமாவது பொடலங்காயாவது! எனக்கு, என்னை மாதிரி ஒர்க்கிங் உமனா இருக்கறவங்களுக்கு, ஹஸ்பெண்ட், ஃபேமிலின்னு ஒரு வட்டத்துக்குள்ளாற கத்த நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுக்கு அதெல்லாம் பெரிய ஆடம்பரம்!''

சந்திற்குக் குறுக்கே சீ டில்லி எருமை ஸ்பீட்—பிரேக்கர் மாதிரி நின்றது. காரின் வேகத்தை மட்டுப்படுத்தி பிந்து இரண்டு முறை ஹார்ன் செய்தாள்.

''என்ன வித்யா பெரிய தூத்துக்கெழவி யாட்டமாப் பேசறே? இருந்திருந்து உனக்கென்ன வயசாகப் போறது... இருபத் தஞ்சா?''

''போன வெள்ளிதான் என்னோட பர்த் டே. இருபத்து மூன்று முடிஞ்சது.''

''இருபத்து நாலாவது வயசிலே இன்னும் ஒரு குழந்தை கூடப் பொறக்கறதுக்கு முன்னாடி ஏன் இப்படி உப்புச்சப்பில்லாம மாறிட்டு வர்றே?''

டில்லி எருமை சாவகாசமாய் நகர்ந்தது. பிந்து காரைத் திருப்பினாள்.

''அதான் லைஃப்... ஒரு மிடில் க்ளாஸ் லைஃப் லட்சியம்லாம் உன்ன மாதிரி இருக்கப் பட்டவங்களுக்கு! நீ நெனச்சா எதையும் சாதிக்கலாம். எந்தத் தடையையும் நீ மீற லாம். தேவைப்பட்டா ஒடச் கட்டுக் கூட வரலாம்.''

இந்த வித்யாவிடம் பிந்துவுக்குப் பிடிக்காதது இரண்டு. ஒன்று பிந்துவின் அந்தஸ்தை அவள் மறவாதது. மற்றொன்று தன்னைச் சுற்றித்தானே ஒரு வட்டம் போட்டுக் கொள்வது.

''நீ காலேஜ் நாட்களில் இப்படி இல்லேடி வித்யா! நீ பெண்கள் சுதந்திரம் பற்றி நம்ம ஆடிட்டோரியத்திலே பேசின பேச்சு எனக்கு இன்னிக்கும் க்ளியரா ஞாபகம் வருது! நாலஞ்சு பேர் கிட்டே சொல்லிச் சொல்லி எனக்கு அது மனப்பாடம் ஆயிடுச்சு.''

''காலங்கள் மாறும்'' என்று கச்சிதமாகச் சொன்னாள் வித்யா. பின்பு தொடர்ந்தாள்.

''அது காலேஜ் டேஸ்... அதெல்லாம் போயாச்சு. இப்ப லைஃப். நெஜமாலும் லைஃப். ஆபீஸ்... குடும்பம்... ஹஸ்பெண்ட். கூட்டிக் கழிச்சுப் பார்த்தாலும் ஒரு கூட்டுக் குள்ளாறதான் அடைஞ்சுட வேண்டியிருக்கு. எல்லாம் லிமிடெட்... வரையறுக்கப்பட்டிருக்கு.''

''நான் ஒரு ஆம்பளையா பொறக்கலி யேன்னு எனக்கு வருத்தமா இருக்கு வித்தூ!''

வித்யாவின் முறுவல் குறும்பாக நெளிந்தது.

''பொறந்திருந்தா?''

''ஒன்னை காலேஜ் டேஸிலேயே இட்டாப் பண்ணிண்டு போயிருப்பேன்!''

''ஆம்பளையா பொறந்திருந்தா நீ என்னை லா காலேஜிலே சேத்திருப்பியோ?''

''ஷ்யூர்.''


''பொண்ணாயிருக்கிற தைரியத்திலே சொல்றயாக்கும்.''

''நீ ஒரு பெமினிஸ்ட்.''

''இருந்துட்டுப் போறேன் விடு. நீ ஆணாப் பொறந்திருந்தாலும் அதே கதைதான். ஆம்பளென்னா அதுக்கான லட்சணமெல்லாம் வந்துடுமோல்லியோ. நீயும் அவர் மாதிரியே இருப்பே. எனக்குக் கார் வச்சுண்டிருக்கற சிநேகிதி இருந்தா உனக்குப் பிடிக்காது. நான் நல்லா மேக்கப் பண்ணிக்கணும். வகை வகையா சமைக்கணும். மாசந்தவறாம பே—கவரை ஒன்னண்டை கொண்டு வந்து கொடுத்துடணும்... எனக்குன்னே வாழற டெடிகேடட் ஒய்ஃபா நான் இருக்கணும்... டிட்டோ... டிட்டோ.''

''சரி... நான் மேலே பேச முடியாது! உனக்கு மூட் அவுட்!''

வித்யா வீட்டு காம்பவுண்ட் வந்ததும் பிந்து காரை நிறுத்தினாள். கதவைத்திறந்து கொண்டு கீழே இறங்கினாள் வித்யா.



காம்பவுண்டுக்கு மேலே தெரிந்த மொட்டை மாடியில் பூபதி நிற்பதைக் காரிலிருந்தவாறே பிந்து கவனித்தாள்.

''ஏய் வித்தா... ஒங்க ஹஸ்பெண்ட்...''

வித்யா நிமிர்ந்து பார்ப்பதைத் தவிர்த்தாள்.

''நான் வரட்டுமா?'' என்று அவசரமாகக் காரை 'ஸ்டார்ட்' செய்யப்போனாள் பிந்து.

''பிந்து... என்ன அவசரம்.? ஏதோ தப்பு செஞ்சுட்டு ஓடறாப்பிலே?''

''ஐம் ஸாரி... நான் வர்றேன்.''

''எதுக்கு ஸாரி.''

''உன்னை ஒரு நெருக்கடியான நிலைமைக்கு ஆளாக்கிட்டேன்.''

வித்யாவுக்குப் புரியவில்லை. புருவத்தை உயர்த்தினாள்.

''ஐ மேட் யூ ஆன்ஸரபிள். ஒன்னை ஒரு பதில் சொல்ல வேண்டியவளாக்கிட்டேன்.''

பிந்து பதிலுக்குக் காத்திராமல் வண்டியை ஸ்டார்ட் செய்து ரிவர்ஸ் எடுக்கப் பின்னால் பார்த்தாள். கார் மெதுவாக நகர்ந்தது..

2

தோளில் மாட்டிய 'வானிடி பாக்' குடன் படியேறும் போதே இன்றைக்கு என்ன காத்திருக்கிறதோ என்று வித்யாவுக்கு மனசு 'திக்'கென்றது.

''ஏம்மா இவ்வளவு லேட்?''

ஒரு வாஞ்சையான குரல் வாசலில் காத்திருந்தது. அப்பா! பனியன். தோளில் துண்டு. மூக்குக் கண்ணாடி. படித்துக் கொண்டிருந்து எழுந்து வந்த மாதிரி விரல் அடையாளத்தோடு மூடிய 'பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்' புத்தகம்.

எங்கிருந்து இந்த உற்சாகம் வருகிறது? அடைத்த நீரூற்றுக்கள் பீறிக் கொண்டு பீச்சுவது போல... கூட்டிலிருந்து ஒரு கூட்டம் பறவைகள் சிறகடித்து எழுவது போல. இது என்ன களிப்பு?

''எப்பப்பா வந்தீங்க?''

''ஒன் அவர் ஆகப் போறது. நீ வீட்ல இருக்கப் போறேயோ இல்லேயோன்னு சந்தேகப்பட்டுண்டே வந்தேன்.''

ஆத்மாராமன் முகம் அவனுடைய ஆனந்தத்தைப் பிரதிபலித்தது.

''மாப்பிள்ளை எனக்கு முன்னாடியே ஆபீஸிலேர்ந்து வந்துட்டார்மா'' என்று அவள் தாமதத்தைக் குற்றம் சொல்வது போல் கூறினார்.

''எங்க ஆபீஸ்லே இன்னிக்கு டைரக்டர் போர்டு மீட்டிங் அப்பா! நான்தானே ரிசப்ஷனிஸ்ட்! நான் சீக்கிரமா வந்துட முடியுமா... அவருக்கென்ன... ஆபீஸ்லே கேஷ் அக்கவுண்ட் டாலி ஆயிட்டாப் போறும். ஜாலியாக் கௌம்பி வந்துடலாம்.''

''எளைச்சுப் போயிருக்கியே.''

''இல்லேப்பா களைச்சுப் போயிருக்கேன்... மொகம் அலம்பினா ப்ரஷ்ஷாயிடுவேன்.... வீட்டிலே எல்லோரும் நல்லா இருக்காளாப்பா?''

''எல்லோரும் நல்லா இருக்காம்மா.''

அவரை நெருங்கி அவர் கையிலிருந்து புத்தகத்தை அடையாளத்தோடு வாங்கித் திருப்பித் தலைப்பைப் படித்தாள். 'மாரேஜ் அண்ட் மாரல்ஸ்.''

கேஸ் ஸ்டவ் எரியும்போது சிவப்பாக எரிந்தால் சிறிதளவு உப்பைத் தூவ நீல ஜுவாலையாக எரியும்.

ஜெயா.

''இது குட் ஓல்ட் புக் ஆச்சேப்பா!''

''நீ வச்சிருக்கியோ?''

''எதை வாசிக்க டயம் இருக்கு! ஒங்களைப் பாத்தா இப்ப பொறுமையா இருக்கு எனக்கு. எப்படா ரிடயர்ட் ஆகி இப்படி புஸ்தகம் புஸ்தகமாப் படிச்சுத் தீர்ப்போமோன்னு இருக்கு!''

கண் சுடர உதடு துடிக்க, மோவாய் தூக்கிக் கொண்டு வித்யா பேசுவதில் தோய்ந்தார் ஆத்மராமன்.

ஒரு வாரம் பிரிந்திருந்தால் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அப்பா என்று அலறிக் கொண்டு மறுசந்திப்பில் வந்து கட்டிக் கொண்டு கழுத்தில் ஊஞ்சலாடுவாள் இந்தப் பெண். ஒரு வருஷமாகப் போகிறது. இவளைப் பார்த்து.

''கொஞ்சம் உட்காருங்கோப்பா.''

விடுவிடுவென்று உள்ளே நுழைந்தாள் வித்யா. வானிடி பாக்கை ஆணியில் மாட்டிவிட்டு முகம் அலம்பினாள். வேலைக்காரி வாங்கி வைத்திருந்த பாலை ஸ்டவ்வில் ஏற்றி காப்பி கலந்து கொண்டு வந்தாள்.

''மாப்பிள்ளைக்கும்மா?''

''கொடுக்கறேம்பா:'' வித்யா இன்னொரு டபராவை எடுத்துக் கொண்டு மொட்டை மாடிப் படிக்கட்டிற்குப் போனவள். கீழேயிருந்தே குரல் கொடுத்தாள்.

''...கீழே வர்றீங்களா?''

''வர்றேன்'' ஒற்றைச் சொல்லாக பதில் வந்தது. உறைந்திருக்கும் கோபம் மௌனமாக உறுமும் முகத்தோடு பூபதி வந்தான். வித்யாவை நிமிர்ந்தே பாராமல் அவள் நீட்டிய காப்பியை வாங்கினான். இரண்டு ஆற்று ஆற்றி மூன்று மடக்கு குடித்துவிட்டு டபராவை அவளிடம் கொடுக்காமல் படி மீது வைத்தான்.

''எனக்கு அர்ஜண்டா கொஞ்சம் வேலை இருக்கு! ஒன் அவர் ஆகும்!'' என்று மாமனார் முன்னால் மன்னிப்புக் கோருவது போல் நின்றான்.

''ஓ... எஸ்! தாராளமாப் போய்ட்டு வாங்க மாப்பிள்ளே.''

ஆத்மராமன் அப்போது தான் காப்பியை உறிஞ்சினார்.

வித்யாவிடம் விடைபெற்றுக் கொள்ளாமல் நடையில் நிறுத்தியிருந்த 'மொபெட்டை'த் தள்ளிக் கொண்டே கீழே இறங்கினான். இரண்டு நிமிஷத்திலே 'மொபெடி'ன் பொறுமல் மறைந்தது.

ஆத்மராமன் நிதானமாகக் காப்பியை குடித்துவிட்டு டபராவைக் கீழே வைத்தார்.

ஆபீஸுக்குப் போகும் அவசரத்தில் கொடியில் காயப் போட்டிருந்த துணிகளை எல்லாம் மடிக்காமல் போட்டிருந்தாள் வித்யா. ஒவ்வொன்றாக எடுத்து இப்போது மடித்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து ''என்னம்மா தகராறு?'' என்றார்.

''தகராறு?'' என்று நிமிர்ந்தாள் வித்யா.

அப்பாவின் முகத்தில் கவலையை விட ஆதுரமும் வாஞ்சையும் தான் அதிகமாயிருந்தன.

''அப்படி ஒண்ணுமில்லையே?''

''மாப்பிள்ளே கோபமா இருக்கார் போலேருக்கே!''

''இருப்பார்!''

''ஏன்?''

வித்யா துணிகளை மடித்துக்கொண்டே சாதாரணமாகச் சொன்னாள்.

''அவர் ஆம்பிளை இல்லியா. அடிக்கடி கோவிச்சுப்பார். ஒவ்வொரு நாளைக்கு ஒரு காரணம்.''

''இந்தத் தடவை சீரியஸ்னு எனக்குத் தோணறது!''

அப்பாவின் வருகைக்கு ஏதோ காரணம் உண்டு என்று வித்யாவிற்கு இப்போது சந்தேகம் வந்தது.

''அவர் உனக்கு லெட்டர் போட்டிருந்தாராப்பா?'' நெருக்கத்தை விலக்கும் பண்மை மரியாதையை அவள் கைவிட்டாள்.


வித்யாவை ஏமாற்ற முடியாது. ஆத்மராமன் விரும்பவில்லை... சிரித்தார்.

''பாவம்பா அவர்!'' என்று கம்பீரமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னாள். ஆத்மராமன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்.

''என்ன எழுதியிருந்தார்?''

அவர் பதில் சொல்லவில்லை.

''ஒழுங்கா டயத்துக்கு வீட்டுக்கு வர்றதில்லே. கார் வச்சுண்டு இருக்கற ஒரேஇ



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனல் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்



உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிருபணமான ஆன்டிஸெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதியிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

**கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.**

GBM/2513 TAM

Johnson & Johnson

தனித்தன்மை வாய்ந்த
இவரது தணியாத விருப்பம்
'ப்ளெயின்' ஷர்ட்டிங் மட்டும் அணிவதே



MODEL : COURTESY AIR-INDIA

அதாவது மஃபத்லால் வழங்கும்
பாலியெஸ்டர் மற்றும் பாலியெஸ்டர்
ப்ளெண்டுகளின் ஷர்ட்டிங்.

அவருக்கென ஒரு தனி பாணி, தனி ரசனை.
பறைசாற்றமாட்டார், என்றும் பவ்வியமாக இருப்பார்.
தனக்கே உரிய தனித் தோற்றத்தை வலியுறுத்துவார்.

மஃபத்லால்
ஷர்ட்டிங்

MF-126-TAM

யோட ஊர் சுத்தரு. இப்ப பி. ஜி. எல். படிக்கணும்னு பிடிவாதம் பிடிக்கறு.... இத்யாதி... இத்யாதிதானே!''

ஆத்மராமன் துண்டை எடுத்து வாயைத் துடைத்தார்.

''டு யூ நோ தி ரீஸன்?''

இல்லே என்பது போல் அவர் தலையசைத்தார்.

''லவ் பண்ணிட்டுக் கைகழுவிடலாம்னு நெனச்சவரை விடாமே நீயும், நானும் கல்கத்தா வரை துரத்திட்டுப் போயிப் பிடிச்சுட்டோம். மாட்டிக்கிட்டவங்களுக்கு வர்ருப்பிலே பெரிசா தான் தியாகம் பண்ணிட்ட மாதிரி ஒரு பிரமை வேறே! ஸோ... என்ன எதிர்பார்க்கறார் தெரியுமோ? ஒரு டோடல் ஸரண்டர். முழு சரணாகதி!''

அங்கே ஆத்மராமன் குறுக்கிட்டார்.

''நீங்க சந்தோஷமா இருக்கேளாம்மா''.

வித்யா அவரைக் கூர்ந்து நோக்கினாள்.

''என்னை வருத்தப்படுத்தறதிலே அவருக்கு ஒரு சந்தோஷம். வருத்தப்படாம தப்பிச்சுக்கறதிலே எனக்கு சந்தோஷம்.''

''யாரும்மா அந்த ஃபிரெண்ட்?''

''பிந்துதானே! ஃபிரெஞ்ச் கத்துக்கறப்ப கிடைச்ச கிளாஸ்மேட். ஒரு டைனமிக் பெர்ஸனாலிடி. நுட்பமான அறிவு. துணிச்சல். சுறுசுறுப்பு.''

''உன்னை மாப்பிள்ளை வருத்தப்படுத்தறதுக்கு அவ காரணமாயிட்டாளோ?''

வித்யா அவரிடம் ஒரு முரண்பாட்டைக் கண்ட மாதிரி உங்களுக்கு இது அழகல்ல என்று மறுக்கிறவாறு தலையசைத்துவிட்டு மெதுவாய்ச் சிரித்தாள்.

''நீ என்னப்பா சொல்றே? கணவர் வருத்தப்படுவார்ன்னு சிநேகிதியைக் கட் பண்ணச் சொல்றியா?''

''இல்லேம்மா... நான் அப்படிச் சொல்லலே...''

''வர்றச்சே பிந்து ஒண்ணு 'ஸ்பார்க்கிங்கா' சொன்னாப்பா! லட்சியம் தெளிவா யிருந்தாப் பாதை தன்னாலே கண்ணுக்குப் புலப்படும்.''

''கரெக்டா சொல்லியிருக்கா! எது உன்னோட லட்சியம்?''

''அவளுக்குச் சொன்ன பதிலையே திருப்பிச் சொல்லட்டுமா?''

''சொல்லு.''

''லட்சியம்னு ஒண்ணை வச்சுக்கறதே என்னைப் போல இருக்கறவங்களுக்கு பெரிய ஆடம்பரம்னேன்!''

''அது நெஜமா?''

''கொஞ்சம் வெய்ட் பண்ணுப்பா! நாலஞ்சு வீட்டு வேலை இருக்கு... சாயங்காலம் வேலைக்காரி வரமாட்டா... நாந்தான் கவனிக்கணும்... நீ படிச்சிட்டு இரு... இதோ வந்துடறேன்.... உன்கிட்ட ரொம்பப் பேசணும்!''

''சரிம்மா, நீ சாவகாசமா வா!''

மடித்துக் கொண்டிருந்த துணிகளை அள்ளியவாறு வித்யா உள்ளே போனாள்.

3

''கீழே அப்பா இருக்கார்'' கட்டிலில் உட்கார்ந்திருந்த வித்யா அவனை எச்சரிப்பது போலக் கூறினாள்.

பனியனைக் கழற்றப் போன பூபதி நிறுத்தினான்.

''என்ன செய்யணுங்கறே? அவரண்டே பர்மிஷன் வாங்கிண்டு வரணுமோ?''

அவன் கண்களில் குத்தல் மின்னியது.

''இப்படி 'டர்ட்டியா' பேச வேண்டாம்.''

''ஓ... மானர்ஸ் சொல்லித் தர்றியா?''

''தேவைப் பட்டால் சொல்லத்தான் வேண்டியிருக்கும். ஒரு வருஷமா வராத

சப்பாத்தி பிரஸ்ஸரில் உட்பாகத் தகடு பிளவுபட்டுவிட்டால் உடனேயே புதியது மாற்றவேண்டாம். மாவு உருண்டைமேல் ஒரு பால் கவரைப்பொருத்தி சப்பாத்தி தயாரிக்கலாம். விரிசல் சப்பாத்தி (அ) பூரியின் மேல்விழுவதைத் தடுக்கலாம்.

—திருமதி தேவநாதன்.

மாமனார் வந்திருக்கார். அதுவும் நீங்க லெட்டர் எழுதிப் போட்டு! ஒரு ராத்திரி கொஞ்சம் அடக்கமா இருந்து அவருக்குக் கம்பெனி கொடுக்க முடியாதா?''

பூபதி வித்யாவை அலட்சியமாகப்பார்த்து விட்டு பனியனைக் கழற்றிக் கட்டிலின் மீது எறிந்தான். ஜன்னல் கட்டை மீது வைத்திருந்த சிகரெட் பெட்டியிலிருந்து ஒன்றை உருவிப் பற்ற வைத்தான். வித்யாவிற்கு சிகரெட் வாசனை பிடிக்காது. அவனுக்குத் தெரியும். அதைப் பொருட்படுத்த முடியாது என்று தான் அவன் சிகரெட் பிடித்தான்.

''நான் லெட்டர் எழுதினேன்னு ஒங்கப்பா சொன்னாரா...?''

''அப்படியெல்லாம் அவர் யாரையும் காட்டிக் கொடுக்க மாட்டார்.''

''பின்னே?''

''திடீர்னு வந்திருக்கறச்சே எனக்கு 'கெஸ்' பண்ண முடியாதா?''

''ஐ ஆம் ஸாரி. நீதான் பெரிய ஷெர்லக் ஹோம்ஸ் ஆச்சே.''

குடைச்சல் ஆரம்பமாகிவிட்டது என்று புரிந்து கொண்டாள் வித்யா. மார்பின்மீது கைகளைக் கட்டியவாறு மனசுக்குள் எண்ணிக்கை சொல்லத் தொடங்கினாள்.

''போன தடவையே உனக்குச் சொன்னேன். அந்த பிந்துவோட கார்ல வீட்டுக்கு வரவேண்டாம்னு!''

நம்பர் இரண்டு என்று எண்ணினாள் வித்யா.

''இது... ஒரு மாதிரி டீசண்டான மிடில் கிளாஸ் பீப்பிள் இருக்கிற ஏரியா.''

நம்பர் மூன்று. இப்போது பூபதி மறைமுகமாக பிந்துவின் ஒழுக்கத்தின் மீது தாக்குதல் தொடுத்திருக்கிறான். இந்த அணுகுமுறை புதியது. இதுவரை இல்லாதது. வித்யாவுக்கு நறுக்கென்று ஏதாவது சொல்ல நாக்கு துடித்தது. அடக்கிக் கொண்டாள். அவன் இன்னும் பேசட்டும்.

''நீ டெஸ்பரேட்டா வேணும்னே அவகிட்டே இன்னிக்கு சாயங்காலம் என் கண்ணெதிரே பேசிக்கிட்டு நிக்கறே!''

வித்யா அவனைக் கண்களால் அளந்து கொண்டிருந்தாள்.

''ஒண்ணு எனக்கு ஒய்ஃபா இரு. இல்லே அவளுக்கு ஃப்ரெண்டா இரு. ரெண்டும் ஒரே நேரத்திலே சாத்தியமில்லே!''

அவளுக்குச் சிரிப்பு வரும் போலிருந்தது. வேண்டாம். நிலைமை மோசமாகும். கீழே அப்பா இருக்கிறார்.

'''ரெண்டுமே வேணும்னு நான் நெனச்சா?''

''இம்பாஸிபிள்... உங்கப்பா வந்திருக்கார். நான் மட்டும் வேணும்னு இரு. இல்லே அவரோட கௌம்பிப் போய்டு.''

இன்றைக்கு எல்லை மீறிவிட்டது.


''நீங்க போய்டுன்னு போய்டுவேன்னு பாக்கறேளா?''

எரிச்சல் தாளாமல் சிகரெட் புகையை ஊதிவிட்டுப் பல்லைக் கடித்துக் கொண்டான்பூபதி.

''பிந்துவோட நான் பழகறது உங்களுக்கு ஏன் பிடிக்கலே?''

''அவளை எனக்குப் பிடிக்கலே.''

''இது மட்டும் காரணம் ஆகாது. இது தான் காரணம்னு என் பதில். அவளை எனக்குப் பிடிச்சிருக்கு.





எனக்குப் பிடிச்சவாளை உங்களுக்கும் பிடிக்கணும்னு அவசியமில்லையே.''

''அப்ப எனக்கு அவளைப் பிடிக்கலேங்கறதுக்கு நீ என்ன மரியாதை தர்றே?''

''ஐ ஆம் ஸாரி. நான் வருத்தப்படறேன். தட்ஸ் ஆல்...''

''எனக்குப் பிடிக்கல்லேன்னு ஒரு காரியத்தை விட்டுடு.''

''எனக்கு நீங்க ஸ்மோக் பண்ணறது பிடிக்கலே. விட்டுடுவீங்களா? அப்பப்ப நீங்க பார்ட்டிக்குப் போயி 'ட்ரிங்க்' பண்றது பிடிக்கலே... விட்டுடுவீங்களா? ஒங்க ப்ரெண்ட் அந்த நோஞ்சான் பாலுவோட நீங்க பழகறது எனக்குப் பிடிக்கல்லே.... விட்டுடுவீங்களா?''

அவனுக்கு முகம் சிவந்தது. என்ன பதில் வரும் என்று தெரிந்து கொண்டே அவன் இறுமாப்போடு சொன்னான்.

> முருங்கை பூ விட்டதும் வேரைச் சுற்றிக் கட்டிப் பெருங்காயத்தைப் பொடி செய்து தூவினால் நிறைய நல்ல காய்களைத் தரும்.
>
> —சீதாலக்ஷ்மி.

''அது என் இஷ்டம்!''

''ஆனா நான் அப்படிச் சொல்லலே. ஒரு பொம்மனாட்டிக்குக் கல்யாணம் ஆனப்புறம் வேற சொஸைடி வேண்டாம். வேற வளர்ச்சி வேண்டாம். ஒரு வட்டத்துக் குள்ளாறேயே அவ குக்கி குந்திண்டு மாஞ்சாப் போறும்... இல்லே?''

''ஏண்டி இன்டலாப் பண்றே?'' என்று அவன் கத்தினான்.

''நீங்க எவ்வளவு அல்பம்னு ஒங்க மாமனாருக்குக் காட்டணும்னு இன்னும் நல்லாக் கத்துங்க?''

பூபதிக்குத் திடீரென்று வெறி வந்தது. வித்யாவை நெருங்கி அவள் கூந்தலை வலிக்கிற மாதிரி இறுகப்பற்றித் தலையை உலுக்கிக்கொண்டே ''அல்பம் இல்லம்னு சொன்னே...'' என்று எச்சரித்தான்.

''சொல்லணுமா என்ன, இத ப்ரூவ் பண்ணிக் காட்டறீங்களே!'' என்றாள் வித்யா.

அவன் அவள் கூந்தலைப் பிடித்த பிடியை விட்டுவிட்டான்.

''ஏன் விட்டுட்டீங்க?''

அவன் அவளை வெறித்துப் பார்த்தான்.

''அடுத்ததைத் தொடங்கலியா?''

''நீ இப்போ என்னண்டே ஒதை படப் போறே!'' என்று பூபதி எச்சரித்தான்.

''அதான் அப்பப்ப பட்டுக்கிட்டு இருக்கேனே... இனிமே வேற புதுசாப் படணுமாக்கும்! ஜஸ்ட்... உங்களால வேற என்ன பலத்தைக் காட்ட முடியப் போறது? மிருக பலம்தானே...''

''ஆமாண்டீ. நான் மிருகம் தான். வேணும்னு இந்த மிருகத்தோட அட்ஜஸ்ட் பண்ணிண்டிரு. இல்லே கௌம்புடீ...''

''மறுபடியும் மறுபடியும் கௌம்புன்னு சொல்லாதீங்க. ஒங்களாலே என்ன மாக்ஸிமம் இம்சை பண்ண முடியுமோ... பண்ணுங்க. நான் போறவ இல்லே... கம் ஆன்.''

கட்டிலில் உட்கார்ந்திருந்த வித்யா எழுந்து நின்றாள்.

''இப்ப என் கண் முன்னாடி நிக்காதே.... போய்டு'' அவன் குரல் ஓங்கியது.

''சரி... கீழே போறேன்.''

அவள் போகத் திரும்பினாள்.

''சனியனே... நீ போக வேண்டாம். நான் போய்த் தொலையறேன்!''

அவன் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வேகமாக வெளியேறினான்.

கீழே கதவைத் திறக்கும் ஓசை கேட்டு ஆத்மராமன் விழித்துக் கொண்டு பேசுவது கேட்டது.

''எங்கே இந்நேரத்திலே?''

பூபதி சொன்ன பதிலும் காதில் விழுந்தது.

''வயிறு சரியில்லே! ஒரு சோடா குடிக்கணும்'' மொபெட் உறுமிவிட்டுச் சென்றது.

4

ஆத்மராமனுக்கு வயது அறுபது முடிந்து விட்டது. சீனியர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்து ஓய்வு பெற்றவர். வாழ்க்கையின் சகல மேடுபள்ளங்களையும் பார்த்தவர். அனுபவித்தவர். மூன்று பெண்கள். இரண்டு பையன்கள். நல்ல காலம். ரிடையராவதற்குள் எல்லாப் பிரச்னைகளும் ஓய்ந்து விட்டன. வித்யா தான் கடைசி.

அப்பா — மகள் என்ற இடைவெளியை அவர் என்றும் பெரிசாக எடுத்துக்கொண்டதில்லை. காஃப்காவிலிருந்து கங்காருவின் இனப்பெருக்கம் வரை அவளுடன் விவாதிப்பார். ஒவ்வொரு குழந்தையும் அவருக்குப் பூஞ்செடி மாதிரி. உரமிட்டுக் கொத்தி விட்டுக் கத்தரித்து விட்டு பூத்துக் குலுங்கும் புஷ்பங்களோடு நிற்க வேண்டிய விஷயங்கள் குழந்தைகள்! பெற்றதோடு நின்று விடாமல் கவனம் செலுத்தி வளர்த்தார்.

இதில் வித்யா கடைசியானதால் தனி அக்கறை. அவள் சிந்தனையில் அவள் உணர்வில் எங்கேனும் ஒரு மூலையில் ஓர் அம்சத்தில்

அவர் காட்டிய அக்கறை பரிமளித்தது. கரிசனம் குரல் கொடுத்தது.

பி. எஸ்ஸி. படிக்க வைத்து ஓர் அந்நிய நாட்டுக் கூட்டுறவில் இயங்கிய கம்பெனியில் தொள்ளாயிர ரூபாய் சம்பளம் வரும் ஸ்பெஷலிஸ்ட் வேலையையும் வாங்கிக் கொடுத்தார். தத்துப்பித்து என்று ஓடும் காலத்திற்குத் தப்பிக்க வைக்கலாம். பருவத்திற்கு? கடைசியில் வித்யா கூட காதலிக்கத் தொடங்கிவிட்டாள்.

விஷயம் கைமீறிய போது பூபதி வேலை செய்த ஆபீஸிலிருந்து கல்கத்தா கிளைக்கு மாறுதல் வாங்கி விட்டான். ஒருவாரம் பேயறைந்த மாதிரி உலவிய வித்யாவைப் புலன் கண்டு பிடித்தார். விவரம் வெளியானதும் முதலில் மனசு சரிந்தது.

தான் வளர்த்த வளர்ப்பில் எங்கோ கோளாறு!

காதலித்ததில் அல்ல: அதைத் தன்னிடமிருந்து வித்யா மறைக்கிற அளவு தூரத்திலா தான் இருந்திருக்கிறோம்! பந்தம் பற்றிய கணக்கீட்டுப் பிசகில் உண்டான மனச்சோர்வு.

கண்ணீர் விட்டு நிற்கும் பெண்ணைப்பார்க்கும் போது ஆத்திரம் வரவில்லை. விவேகம் வந்தது. என்ன தான் காலம் மாறிவிட்டாலும் ஆணும், பெண்ணும் தங்கள் அடிப்படை விருப்பு, வெறுப்புக்களில் மாறிவிடவில்லை என்பதை அவர் அனுபவம் புரிய வைத்திருந்தது.

ஒருவனால் காதலிக்கப்பட்டவள்; ஆண்டு அனுபவிக்கப்பட்டவள் என்ற உண்மை எந்த ஆணுக்கு இனிக்கப் போகிறது? அந்த உண்மையை மூடித் திரையிட்டு வாழும் பொய்ம்மைக்கு வித்யாவை ஆட்படுத்தவும் அவருக்குச் சித்தமில்லை.

அவளைத் தூண்டித் துருவி விசாரித்து கல்கத்தாவிற்குக் கூட்டிச் சென்று, பூபதியைக் கண்டுபிடித்து நயமாகப் பேசி, மிஞ்சினால் விபரீதம் ஆகும் என்று மறைமுகமாக மிரட்டி, அவனை மசிய வைத்துக் கல்யாணத்தை நடத்தியே வைத்துவிட்டார்.

முதல் வருஷம் அடிக்கடி வந்துபார்த்துக் கொண்டிருந்தார். வலுக்கட்டாயம் செய்த கல்யாணம் மாதிரி ஒரு மனக்குறை. அப்புறம் வித்யாவுக்கும் பூபதிக்கும் சென்னையிலேயே வேலை மாற்றல் கிடைத்து எல்லாம் சரிப்பட்ட நிலையில் அவருக்கே கொஞ்சம் ஒதுங்கி இருக்கத் தோன்றிற்று.

திடீரென்று பூபதியிடமிருந்து இப்படி ஒரு தபால் வருமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. மறுநாள் காலை எட்டுமணிக்கெல்லாம் பூபதி புறப்பட்டுப் போன பின்பு வித்யாவிடம் அதைத்தான் சொன்னார்.

"நீ சொல்றதைப் பார்த்தா தப்பு எம் பேரிலேங்கறுப்பிலே இருக்கு" என்று காய்ந்திருந்த துணிகளுக்கு 'அயர்ன்' செய்து கொண்டே பதிலளித்தாள் வித்யா.

"என்கொயரி பண்றவங்கிட்டே எம் பேரிலே தப்பு இல்லேங்கறுப்பிலே சொல்றே?"

"ஆக தப்பு என் பேரிலே... அதானே. சொல்ல வர்றே. ஆறு இது பிரச்னையா தோணலையா உனக்கு?"

"என்ன பிரச்னை சொல்லு?"

"நான் பித்துவோட பழகறேன். இவருக்குப் பிடிக்கலே. நான் பி. ஜி. எல். பண்ணனும்னு நெனக்கிறேன். இவருக்குப் பிடிக்கலே."

"என்ன காரணம்?"

"காம்ப்ளெக்ஸ் தான்! தன்னைவிட தன் மனைவி ஒசத்தியாப் போயிடுவாளோங்கற காம்ப்ளக்ஸ்தான்."

பச்சை மிளகாயை ஒருவாரத்திற்குக் கெடாமல் வைத்திருக்க ஒரு கண்ணாடி பாட்டிலில் சில துளி மஞ்சள் பொடியை அடியில் போட்டுவிட்டு, அதன் மீது பச்சை மிளகாய்களைப்போட்டு, காற்றுப் போகாத அளவிற்கு மூடி விட வேண்டும். பச்சை மிளகாய் வாடாது. வதங்காது. கருங்காது.

—கே. மோகன கிருஷ்ணமூர்த்தி.

"இட்ஸ் நேச்சரல்."

"அப்பா... அப்பா... நீ வகையா மாட்டிக்கிட்டே! நீ கூட பாகுபாடாத்தான் பேசறே. நீ கூட ஒரு மேல் – ஷோவனிஸ்ட் தான். என்ன மறைச்சாலும் வேஷம் எப்படிப் பளிச்சினு கலைஞ்சு போயிடறது பார்த்தியா. ஆம்பிளைங்கள்ளாம் என்னிக்கும் ஆம்பளைக் கட்சி தான்!"

அவள் முகத்தில் சிரிப்பையும் பழைய அரட்டை அடிக்கும் ஒளியையும் பார்ப்பதற்காக இப்படி மற்றுமொரு முறை மாட்டிக் கொள்ளத் தோன்றியது அவருக்கு. ஆனால் வாதத்தை நிறுத்தவில்லை.

"ஏம்மா... காம்ப்ளக்ஸ்ங்கறது நேச்சரல் தானே... தாழ்வு மனப்பான்மை வர்றது இயல்புதானே! இதுக்குப் பதில் சொல்லு. ஒன் குற்றச்சாட்டுக்கு நான் அப்புறம் பதில் சொல்றேன்!"

"நோய் கூட இயல்புதானே? அதுக்கு சிகிச்சை செய்யணுமில்லே?"

"எஸ்... சிகிச்சை தான் செய்யணும். ரண சிகிச்சை இல்லே."

"ரண சிகிச்சை தேவைப்பட்டா?"

"பக்குவமா... பேஷண்டுக்கு எந்தஹானியும் நேர்ந்துடாதபடி செய்யணும்!"

''அதாவது சுத்தி வளைச்சு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு வாழணும்னு சொல்ல வர்றே?''

''அட்ஜஸ்ட்மெண்ட்டுன்னு நீ எதை நெனச்சுச் சொல்றியோ... எனக்குத் தெரியலே! இன் டோடல்... மனுஷா சாந்தியா இருக்கணும். இல்லேன்னா எங்கேயோ அதை நீக்கப் பிரயாசை எடுக்கணும்.''

வித்யா அயர்ன்-பாக்ஸைத் தொட்டுப் பார்த்தாள். சூடேறியிருந்தது. 'பிளக்'கை அகற்றினாள்.

''அப்பா உனக்கு வயசு அறுபதாயிடுத்து! உனக்கு சாந்தி தான் தேவைப்படும். அது உன்னோட பாய்ண்ட் ஆஃப் வ்யூ!''

''உனக்கு என்ன தேவை? சொல்லு பார்ப்போம்?''

நான் எத்தனையோ உணவுப் பண்டங்களை ஆராய்ச்சி செய்திருக்கிறேன். ஆனால் நான் ஆராய்ச்சி செய்த பண்டங்களுள் பாலுக்கு நிகரான ஒரு சத்துப் பொருளை இதுவரை கண்டதே இல்லை.

இப்படிக் கூறியவர்: தாமஸ் ஆல்வா எடிசன்.

எஸ். விஜயா சீனிவாசன்.

''நான் வளரணும் எனக்கு என்ன சக்தி உண்டுன்னு நான் புரிஞ்சுக்கணும். வெறுமனே மனசுக்குள்ளாற இல்லே. ப்ராக்டிகலா அனுபவிச்சுப் பாத்து புரிஞ்சுண்டாகணும்.''

வித்யாவின் கண்கள் மின்னின.

''என்னோட வளர்ச்சிக்கு ஏதானும் குறுக்க நின்னு அதை எதிர்த்துப்போராடணும்னு இப்ப தோணறது! என்னை ஏதாவது நசுக்கி வச்சுண்டிருந்தா அதை விட்டுட்டு ஓடிடணும்னு தோணலே. அதை ஒடைச்சுத் தகர்த்துட்டு வெளியே வரணும்னு தோணறது!''

''எனக்குப் புரியறது! இந்தக் காலத்துப் பெண்களின் குரல். ஆனா இது எதுலே முடியப் போறது?''

''ஏம்பா... நீ பயப்படறியா?''

''நான் பயப்பட்டு என்ன ஆகப் போறது?''

''யார் பயப்பட்டும் நடக்கறதை நிறுத்திவிட முடியாது. ஆனா பர்ஸனலா எனக்காக நீ பயப்பட வேண்டாம்' வித்யாவின் பாந்தமான புன்னகை அவருக்கு ஒரு வாக்குறுதி அளித்தது.

''நான் அதைச் சொல்ல வரல்லே! அதிலே... உன் லைஃபை - பத்திரமா காப்பாத்திக்குவேங்கறதிலே எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனா போராடிண்டிருக்கறவாளுக்குப் போராட்டமே 'மெய்னு'ப் போயிடும்... சுகம்... சந்தோஷம்... சாந்தி... சாந்தியை விட்டுடு... எனக்குத் தான் அறுபதுன்னு ஞாபகப்படுத்திட்டியே... திருப்தி... இதெல்லாம் ரெண்டாம் பட்சமாயிடும். முடிவான லட்சியம்... அது போயிடுமே!''

''எப்படிப் போயிடுங்கறே?''

''நீ ஒசத்தியா... நான் ஒசத்தியான்னு கடைசிலே வந்து முடிஞ்சிடும். சச்சரவு.... போட்டி. விட்டுக் கொடுக்க முடியாதுங்கற தீவிரம் வந்துடும். அப்புறம்...? வாழ்க்கைக்கு என்னதான் அர்த்தம்?''

5

எட்டு மணிக்கெல்லாம் ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போன பூபதி அரை மணி நேரத்தில் திரும்பி வந்தான்.

''என்ன மாப்பிள்ளே?'' என்று கேட்டார் ஆத்மராமன்.

''எங்க எம். டி. யோட அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்காம். பிரைவேட் நர்ஸிங் ஹோம்லே சேர்த்திருக்கா. வழியிலேயே நியூஸ் கெடச்சுது. லீவ் போட்டுட்டேன். அவங்களைப் போய் நர்ஸிங் ஹோம்ல பாக்கணும்.''

''அப்படியா... ப்சு... ப்சு... எத்தனை வயது...?''

உள்ளே சமைத்துக் கொண்டிருந்த வித்யா வெளியே வந்தாள்.

''வயது அறுபது தான் ஆகப்போகிறது.. அவங்களுக்கு ரொம்ப மெண்டல் ஒர்ஸ்... வித்யா... நீயும் நானுமா போயி பார்த்துட்டு வந்துடுவோமா... மாமா வீட்டிலே இருக்கட்டும்...''

''ஐம் ஸாரி... நான் வரல்லே! எனக்கு இன்னிக்கு ஆபீஸ்லே லீவு கெடைக்காது. நேத்திக்கி டைரக்டர்ஸ் போர்ட் மீட்டிங். ஏகப்பட்ட 'கால்' வரும்.''

''நீ கட்டாயம் வருவேன்னு தான் வந்தேன்'' மாமனார் எதிரில் பூபதி கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கும் காட்சியை மனமார ரசித்தாள் வித்யா.

''எம். டி. என்னை மானேஜர் பிரமோஷனுக்கு கன்ஸிடர் பண்ணிட்டிருக்கார்னு கேள்வி. இப்ப ரெண்டு பேருமா போய்ப் பார்த்தா அவருக்கு என் பேரு இம்ப்ரஸிவ்வா மனசிலே பதியும்'' மாமனார் எதிரில் வித்யாவைத் தனது மாமூல் பாணியில் வலியுறுத்த வழியின்றிச் சமாதானமாகச் சொன்னான்.

''இப்படி ஏதோ காரியார்த்தமா போய் ஒருத்தரை அதுவும் ஹார்ட்பேஷண்ட்டைப் பார்க்க வேண்டாம்'' நறுக்கென்று சொன்னாள் வித்யா.

ஆத்மராமன் வித்யாவை மேற்கொண்டு பேசவிடாமல் இடைமறித்தார்.

''நோ... நோ... நீ அவசியம் போயிட்டு வரணும் வித்யா! ப்ரமோஷன் கூட ரெண்டாம் பட்சமா இருக்கட்டும். சங்கடமான சமயத்திலே மனுஷா போய்ட்டு வர்றதே முக்கியம்.''

வித்யாவுக்கு அந்த எம். டி. யின் தாயார் மீது அனுதாபமாக இருந்தது. ஆனால் பூபதியோடு அதுவும் தன் மனசில் ஏதோ ஓர் உட்கருத்தை வைத்துக் கொண்டு இப்படி மேல் பூச்சாகப் போய்ப் பார்த்து வருவது பிடிக்கவில்லை. அவமானமாய் இருந்தது. பூபதி தன் மனைவி ஸ்தானத்தை வேறு எதற்கோ பயன்படுத்தத் தான் இடமளிப்பது போலிருந்தது.

ஆனால் அவள் அப்பா எதிரில் மேற்கொண்டு மறுக்கப் பிரியப்படவில்லை. பூபதியின் புகார்க் கடிதத்திற்கு அது நேர்முகமாகச் சாட்சியம் கொடுத்ததாகி விடும்.

புகையும் உள்ளத்தோடு அவள் டிரஸ் மாற்றிக் கொண்டு புறப்பட்டாள்.

வழியில் ஒரு டெலிபோன் பூத்தருகில் வண்டியை நிறுத்தச் சொல்லி ஆபீசிற்கு அரைநாள் ஸி. எல். அறிவித்தாள்.

போன் செய்து விட்டுத் திரும்பும்போது அவள் ஆத்திரம் வெடித்தது.

மொபெடின் பின்னால் உட்கார்ந்து கொண்டே அத்தனையையும் கொட்டித் தீர்த்தாள்.

''ஒங்க ஆபீஸ்... ஒங்க எம். டி. அவரோட அம்மா... ஒங்க ப்ரமோஷன். அதுக்கு நீங்க மட்டும் போய்க்கலாமே! நான் வரமாட்டேன்னு நல்லாத் தெரிஞ்சும், எங்க அப்பா எதிர்லே ப்ளாக்மெய்ல் பண்ணி அழைச்சுக்கிட்டு வர்றீங்களே?''

பூபதி டிரைவ் செய்து கொண்டே போனான். அவனால் பேச முடியவில்லை. ஆத்திரம் அவன் தலை உச்சிக்கு ஏறிவிட்டது என்பது அவன் கழுத்து நரம்புகள் புடைப்பதில் நன்றாகத் தெரிந்தது. அதைப்பற்றி இப்போது வித்யா அக்கறைப் படவில்லை.

''பேஷண்டுன்னு அவங்க மேலே நெஜமா அக்கறை இருந்தா பார்க்கணும். இப்படி உள்ளூர ஒரு இன்டென்ஷன் வச்சுக்கிட்டு என்னை ஏன் அதுக்குத் துணைக்குக் கூப்பிடறீங்க? அட்லீஸ்ட் ஒங்க நெனப்பையாவது அப்பா எதிர்லே காட்டாம இருந்திருக்கப் படாதோ?''

அவள் வெடித்துச் சிதறினாலும் கவலையில்லை என்கிற தோரணையில் பூபதி எட்வர்ட் எலியட்ஸ்ரோடிலிருந்த ஒரு பிரைவேட் நர்ஸிங் ஹோமின் முன்னால் தன் மொபெட்டை நிறுத்தினான்.

வண்டியிலிருந்து இறங்கியதும் அவன் பார்வை அவளைக் கூர்மையாகத் தாக்கிற்று.

''உனக்கு ஒரு நியூஸ் சொல்றேன் கேளு.. இவ்வளவு நேரமா நீ சொல்லிக்கிட்டு வந்ததுக்கெல்லாம் ஒரே பதில். ஒன்னோட ப்ரண்ட் பிந்து இருக்காளே அவ வேணும்னே எங்க எம். டி. பெண் பார்க்க வந்தபோது வரன் பிடிக்கலேன்னு மொகத்திலே அடிச்சாப்பிலே சொல்லிட்டா.''

வித்யா திகைத்துப் போய் நின்றாள். அப்படி ஒரு சம்பவம் நடந்ததைப் பற்றி பிந்து அவளிடம் சொல்லியிருக்கிறாள். அது அவரது எம். டி. தான் என்பது இது வரை அவளுக்குத் தெரியாது.

''இதை ஏன் முன்னாடியே நீங்க சொல்லலே?''

காராமணியிலும் வடை செய்யலாமே!

நாம் உளுந்து, கடலைப்பருப்பு, ரவை இவைகளில் தான் பெரும்பாலும் வடை செய்வோம். கருப்போ, சிவப்போ தோலுள்ள எந்த வகைக் காராமணியானாலும் சரி, அதனை ஊற வைத்துக் கெட்டியாக அரைத்து வடை செய்து சாப்பிடலாம். சுவையும் நன்றாக இருக்கும். எண்ணெயும் இழுக்காது.

—ரமாமணி பார்த்தசாரதி.

'ஒரு சந்தர்ப்பம் வரணுமோல்லியோ?''

வித்யா சற்று யோசித்து விட்டுக் கேட்டாள்.

''பிந்து என் ப்ரெண்டுன்னு உங்க எம். டி.க்குத் தெரியுமா?''

''தெரியும்... நீயும் அவளும் கார்லே போறச்சே பார்த்திருக்கார்.'' அவன் அதற்கு மேல் தொடராமல் மொபெட்டை அந்தக் கட்டிடத்திற்குள் ஏற்றினான்.

6

''திடீர்னு இங்க வரச் சொல்லி ஏன் 'போன்' பண்ணினே?'' என்று டிரைவ்—இன்னுக்குள் காத்திருந்த வித்யாவைக் கேட்டுக் கொண்டே காரிலிருந்து இறங்கினாள் பிந்து.

''திடீர் திடீரென்று சில விஷயங்கள் நேர்ந்துடறது''.

''நீ இன்னிக்கி ஆபீஸுக்கு லீவா?''

''ஆமா... நேத்திக்கி ஈவினிங் நீ என்னை ட்ராப் பண்ணிட்டுப் போனியே... அப்ப

ஊர்லேருந்து அப்பா வந்திருந்தார்.''

''போய்ட்டாரா?''

''இல்லே இருக்கார்... அவரோட பேசிண்டிருக்கறச்சே காலம்பற எங்க ஹஸ்பெண்ட் ஆபீஸுக்கு லீவு போட்டுட்டு வந்தார். என்னே அவங்க ஆபீஸ் எம். டி. யோட அம்மா ஹார்ட் அட்டாக் வந்து படுத்துண்டிருக்கான்னு கூட்டிண்டு போனார்.''

''இதைச் சொல்றதுக்குத் தான் நீ என்னே வரச் சொல்லி போன் பண்ணியா?'' வித்யாவைக் கிண்டலாகக் கேட்டாள் பிந்து.

''இல்லே வேறே ஒரு ஷாக் நியூஸ் உனக்கு'' ஒரு பீடிகை போட்டாள் வித்யா.

பபீதா கேக் ஃப்ருட்

பப்பாளி வீஸனுபித்றே. அரைகுறையாகப் பழுக்க ஆரம்பித்த பப்பாளியைச் சின்னத் துண்டுகளாக (தோலைச்சீவி) நறுக்குங்கள். மேல் சரம்போக நல்ல வெயிலில் ஒருநாள் உலர்த்துங்கள். வித விதமான கலரில் பிரிந்து வையுங்கள்.

சர்க்கரைப்பாகு வைத்து (2 கம்பி) உலர்ந்த துண்டுகளைப் போட்டுப் பிரிந்து விடுங்கள். நான்கு நாள் வட்டம் வெயிலைக் காட்டினால் (1 மாதம் வரை) போதும். கேக் செய்யும் போதெல்லாம் கலர்கலராக அள்ளிப் போடுங்கள். கடைக்குப் போய் கேக் ஃப்ருட் வாங்க வேண்டாம்.

சித்ரா

''என்ன ஷாக் தரப்போறே?''

''ஹார்ட் அட்டாக்கிலே படுத்துண்டிருக்கிறவர் யார் தெரியுமா?''

''ஒங்க ஹஸ்பெண்டோட எம். டிக்கு அம்மா.''

''அந்த எம். டி. தான் நீ வரன் பிடிக்கலேன்னு உதறித் தள்ளியவர்.''

பிந்து ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்தாள்.

காலியாயிருந்த திறந்தவெளி மேஜை ஒன்றின் அருகில் இருவரும் அமர்ந்தனர்.

''நீ அவரை மேரேஜ் பண்ணிக்க மாட்டேன்னு ரெஃப்யூஸ் பண்ணி எத்தனை வருஷம் ஆறது?''

''மூணு வருஷம்.''

''மூணு வருஷமா அந்த மனுஷர் கல்யாணமே வேண்டாம்னு ஸ்டப்பர்னா நின்னுட்டிருக்கார். ஒரு பொண்ணு நம்மை இன்ஸல்ட் பண்ணிட்டதேன்னு அவருக்குள்ளாற ஒரு வைராக்கியம் வளர்ந்துட்டிருக்கு.''

''வாட் கேன் ஐ டூ?'' என்று கையை விரித்தவாறே கேட்டாள் பிந்து.

''அவங்கம்மாவுக்கு இவர் ஒரே பிள்ளை. இவர் கல்யாணம் வேண்டாம்னுட்டதும் அந்தம்மாவுக்கு மனசு ரொம்பக் கெட்டுப் போயிட்டிருக்கு. இந்த ஹார்ட் அட்டாக்குக்கு அதான் முக்கிய காரணம்.''

''ஸோ... என்னே என்ன பண்ணச் சொல்றே...?''

நறுக்கென்று பிந்து கேட்டாள். அவள் கேட்டதும் வித்யாவுக்கு சொரேர் என்று உறைத்தது.

''உன்னே என்னமோ பண்ணச் சொல்றதுக்காக இதைச் சொல்லலே... ஜஸ்ட் ஃபார் யுவர் இன்பர்மேஷன்!''

வித்யாவை பிந்து கூர்ந்து பார்த்தாள்.

''நான் ஏன் அந்த மனுஷரைப் பிடிக்கலேன்னு சொன்னேன் தெரியுமோ?''

''தெரியாது... சொல்லு!''

''அந்த மனுஷன் இதுவரைக்கும் நாற்பது ஐம்பது பெண்களைப் பிடிக்கலே... பிடிக்கலேன்னு 'ரிஜக்ட்' பண்ணினவர்னு கேள்விப்பட்டேன். அவர் பெண் பார்க்க வந்த அன்னிக்கு காலமேயிருந்து எங்க வீட்டிலே ஏதோ ஒரு சூபர்மேன் வர்றாப்பிலே தடபுடல். என்னமாவது நடந்துடுமோங்கற கவலை... பெரிய ஷோ மாதிரி எனக்குத் தோணித்து. அந்த மனுஷர் கர்வத்துக்கு ஒரு புல் ஸ்டாப் வைக்கணும்னு நான் முடிவு பண்ணினேன்... இதான் நடந்தது.''

வித்யா பிந்துவைப் புரிந்து கொண்ட உள்ள நெகிழ்ச்சியோடு அவளைப் பார்த்தாள்.

''ஆம்பிளைகளுக்கு மட்டும் தான் பெண் பிடிக்கலேன்னு சொல்ற 'ரைட்' உண்டா? நீ சொன்னியே இதனாலே அவங்கம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்னு. இந்த மனுஷன் பார்த்துப் பார்த்து விட்டுட்டு வந்தாரே அவாள்ளே எத்தனே பேருக்கு என்னென்ன அட்டாக் வந்திருக்குமோ?''

''ஆமா... ஒரு விஷயத்தைக் கவனிச்சியா?''

''என்னது?''

''தன் பையனுக்குக் கல்யாணமாகலேன்னு அகெய்ன் ஒரு பெண்ணுக்குத் தான் ஹார்ட் அட்டாக் வந்திருக்கு.''

பிந்து மௌனமானாள். சர்வர் வந்து நின்றார். இரண்டு காபிக்கு ஆர்டர் கொடுத்தாள். அவர் அகன்றார்.

''இப்ப பழி என் பேர்ல வந்திருக்குன்னு சொல்றியா?'' என்று கேட்டாள் பிந்து.

''இது பழியா? நோ... நான் அப்படி நெனைக்கலே. நாப்பது அம்பது பேரைப் பெண் பார்க்கப் போன மனுஷனுக்குத் தன்னை ஒருத்தி மறுத்தப்புறம் ஏன் இன்னொரு பெண்ணைப் பார்க்கத் தோணலே?''

உங்களுக்குத் தேவை இவைதான்:
சாந்தமுள்ள மனநிம்மதி
சக்தியுள்ள உணவுகள்.



ஆம். குழந்தைக்கு பாலூட்டத் தயாராகும் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டியது மிக எளிய விஷயம்; மன நிம்மதியோடு பாலூட்டுங்கள். அதிகமாக பால் சுரப்பதற்கு உதவிடும் உணவுகள் அனைத்தையும் உண்ணுங்கள்.

கவலைப்படுவதை நிறுத்துங்கள்

கவலைப்படுவது உங்களுக்குத் தீங்கு விளைவிக்கும்—என்றால், உங்கள் குழந்தைக்கும்தான். கவலைப்படுவதால் உங்களுக்கு நோய் ஏற்பட்டு பால் வற்றிவிடும்.

நோய்ப் பிரச்சனைகள் எதுவும் உங்களுக்கு இருந்தால், அலட்சியமாய் இருந்து விடாதீர்கள்; டாக்டரிடம் செல்லுங்கள் அவரை உங்கள் மூத்த நண்பராய்க் கருதுங்கள்.

ஆரோக்கியமான உணவைத் துவக்குங்கள்:

உடலுக்கு உகந்த ஆரோக்கிய உணவு எது என்பதை அறிந்திட பிரமாதமாக நூல் நிலையத்திற்குச் சென்று புத்தகங்களைப் புரட்டுவதோ, கலோரிப் பட்டியலைப் பார்ப்பதோ அவசியமில்லை. உங்களுக்குத் தேவை பொது அறிவுதான். உதாரணமாக, குழந்தையின் வளர்ச்சிக்கு புரதம் அதிக அளவில் தேவைப்பட்டால் அதை வழங்கக்கூடியவை, உடல் வளர்ச்சியை உருவாக்கும் பால், முட்டை, மாமிசம் ஆகும். அவற்றை நீங்கள் உண்ண வேண்டும்; புரதம் செறிந்த உணவுப் பானங்களை அருந்த வேண்டும். புரதச்சத்தை அதிக அளவில் நீங்கள் பெறுவது, உங்கள் குழந்தையும் பெறுவதாகும்—உங்களிடமிருந்து. மிகவும் முக்கியம் என்னவென்றால் கார்போஹைட்ரேட்டுகள் அதிகம் கூடாது. காரணம் அது பாலின் தரம் மற்றும் அளவைப் பாதிக்கும்.

இதுபோன்ற எளிய நடவடிக்கைகள்கூட, உங்கள் குழந்தை முறையாக முலைப்பால் குடித்திட உதவும். உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் உங்கள் குழந்தைக்கு நீங்கள் மாற்றுப்பால் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல்ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது, முன்னாலேயே அதை பசைநீபால் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்.

இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—

இதில் அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல் தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

ASP/AS-TAM7/83

பிந்து பதிலளித்தாள்.

"அவர் ஈகோவை அது பாதிச்சிருக்கும். லீவ் இட். அது அவர் பிராப்ளம்."

"எனக்கு வேற மாதிரி தோணறது! உம் பேர்ல அவருக்கு ஒரு தனி இன்ட்ரஸ்ட் வந்திருக்கு. நீ மறுத்ததே அவருக்கு ஒன்னோட ஒரு மானசீகத் தொடர்பை ஏற்படுத்தியிருக்கும்னு நெனக்கிறேன்."

பிந்து அவளை விநோதமாக உற்றுப் பார்த்தாள்.

"நீ என்ன சொல்ல வர்றே? நான் அவரைச் சந்திக்க ஏத்துக்கணும்கறியா?"

வித்யா புன்முறுவல் செய்தாள்.

"ஏன் இப்படி இடீர்னு முடிவு கட்டறே? ஒன்னை எனக்குத் தெரியாதா? எந்த விஷயத்திலாவது நாம ஒருத்தரை ஒர்த்தர் கம்பெல் பண்ணியிருப்பமா..."

"அப்ப நீ ஏன் இதையெல்லாம் என் கிட்டே லீவ் போட்டுட்டு வந்து சொல்றே?"

"அந்த அம்மாவைப் பார்க்கறச்சே எனக்கு ரொம்ப டச்சிங்கா இருந்தது. கல்யாணமே வேண்டாங்கிறும்மா கொழந்த! ஒங்காத்துக் காரரும் நீயும் ஏதாவது சொல்லி அவன் மனசை மாத்தப்படாதோன்னு பலவீனமா அவர் சொல்றச்சே எனக்கு என்னமோ போல ஆயிடுத்து!"

வித்யா சொல்வதைக் கேட்டதும் பிந்துவுக்கு முகம் வெளிறிற்று. இதற்கு தான் ஒரு காரணம் என்பதை முதன் முறையாக அவள் யோசிக்கத் தலைப்பட்டாள். சர்வர் காபி கொண்டு வந்தார். குடித்து முடித்து விட்டு இருவரும் சற்று நேரம் உட்கார்ந்திருந்தனர். பேசுவதற்கு விஷயமே அற்றுப் போனது போல் ஒரு சூன்யம் இருவர் மனசிலும் நிலவிற்று.

பிந்து எழுந்தாள்.

"ஆல்ரைட் வித்தா! நான் அடையாறுக்குப் போகணும். நாளைக்குப் பார்க்கலாம்" என்று புறப்பட்டாள்.

7


ஆபீஸ் முடிந்து வித்யா வீட்டுக்கு வரும்போது ஆத்மராமன் ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தார்.

"என்னம்மா இன்னிக்குச் சீக்கிரமா வந்துட்டே?"

"இன்னிக்கு அரைநாள் லீவு எடுத்துண்டு பிந்துவைப் பார்த்துட்டு வரேம்ப்பா..."

வித்யா சுருக்கமாக நடந்ததைச் சொன்னாள். ஆத்மராமன் எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஓர் அக்கறை தோன்றியது.

"மாப்பிள்ளையோட எம். டி. ஓர் அசாதாரணமான மனுஷன்னு எனக்குத் தோணறது!"



''எப்படிப்பா?''

''என்னைப் பார்த்து உம்மை எனக்குப் பிடிக்கல்லேன்னு ஒரு பொண் சொல்லியிருந்தா. ஜஸ்ட் ஐ டோண்ட் கேர்னு வேறொரு ஒசத்தியான எடமாப் பார்த்து ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணிண்டிருப்பேன். இவர் வேற மாதிரி! எனக்கு என்ன தோணறது தெரியுமோ?''

''சொல்லு.''

''எம். டி. பிந்துவை லவ் பண்றார்.''

''எக்ஸாக்ட்லி. நானும் அதான் நெனச்சேன்.''

''அந்த எம். டி.யை நீ பார்த்திருக்கியோ?''

என்னைப் போட்டுவைக்கும் பாட்டிலில் சிறிது நெல்லைக் கலந்துவிட்டால் எவ்வளவு நாளானாலும் பூச்சிகட்டாது. பழைய வாசனை வராது.

-கல்யாணி

''பார்த்திருக்கேம்ப்பா.''

''என்ன வயசு இருக்கும்?''

''இருபத்தேழு. இருபத்தெட்டுத்தான் இருக்கும். அவரோட அப்பா காலமானதாலே சின்ன வயசிலேயே எம். டியா வந்துட்டார்.''

''பாக்க நல்லாயிருப்பாரா?''

''ஓ எஸ்...''

''அப்ப பிந்து ஏன் வேண்டாம்னுட்டா''

''நாப்பது அம்பது பொண்களை அவர் ரிஜெக்ட் பண்ணினார்ன்னு கேள்விப்பட்டதில ஒரு வெறுப்பு. இவர் மட்டும் தான் பண்ண முடியுமான்னு வேண்டாம்னுட்டா.''

ஆத்மராமன் தனக்குள் நகைத்துக்கொண்டார். வித்யாவுக்கு அது புரிந்து விட்டது.

''என்னப்பா... சிரிக்கக்றியா?''

''வேறென்ன செய்யறது? பழிக்குப் பழி வாங்கற மாதிரின்னு உம் ப்ரெண்ட் பண்ணியிருக்கா. எவ்வளவு குழந்தைத்தனம்?''

''எதிர்ப்பை வெளிப்படுத்தறது சிறு பிள்ளைத்தனமாப்பா?''

''எஸ்... வெறும்னே எதிர்க்கறது ஒரு லட்சியமாயிடுமா?''

''கொடுமையை நீக்கணும்னு அதை எதிர்க்கறதே ஒரு லட்சியம்.''

''கொடுமையை நீக்கிட்டு என்ன உரிமை வேணுமோ அந்த உரிமையை அடையணும்னு நெனக்கற வேகம் தான் லட்சியம்'' லட்சியத்திற்கு ஒரு ஐடியல் வேணும். வெறும்னே பாடம் கற்பிக்கறதுன்னு கிளம்பினா அதுக்கு பலம் போறாது... பாதியிலேயே அது தப்புன்னு தோணிடும்.''

வித்யா விவாதிக்க விரும்பவில்லை.

''எம். டி. ஏன் நாப்பது அம்பது பொண்களை ரிஜக்ட் பண்ணினாராம்?''

''தெரியலே... எத்தனையோ காரணம் இருக்கும்.''

''எனக்கு ஒண்ணு தோணறது! எம்.டி.யும் பிந்துவும் மறுபடியும் ஒரு தரம் மீட் பண்ணினா நன்னாயிருக்கும்னு தோணறது!''

''எம். டிக்கு நிஜம்மா பிந்து மேல லவ் இருக்குன்னு தெரியாம எப்படி அதை முடிவு பண்ணறது?''

''மீட் பண்ணினாத் தெரிஞ்சுடுமே''.

''நீ சொல்றது நல்ல ஐடியாதாம்பா'' என்று கூறிவிட்டு வித்யா முகம் அலம்ப பாத்ரூமுக்குப் போனாள்.

8

பூபதி நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

''அப்பா ஊருக்குப் போகணும்கறார்!''

''ஏன் இன்னும் ரெண்டு நாள் இருந்து போகச் சொல்றது?''

''நீங்கதானே அவரை வரச் சொல்லி எழுதினது... நீங்களே சொல்லுங்க.''

பூபதி அவளை முறைத்தான்.

''அவர்கிட்டே பண்ற ரிப்போர்ட்டெல்லாம் பண்ணி ஆயிடுத்தா?''

''நான் ரிப்போர்ட் பண்றதுக்காக அவரை வரச் சொல்லலே?''

''பின்னே?''

''உனக்கு அட்வைஸ் பண்றதுக்காக வரச் சொன்னேன்.''

''என்ன அட்வைஸ்... கட்டுப்பெட்டியா ஹஸ்பெண்டுக்கு சலாம் பண்ணிண்டிரு. எம். டியை ஒரு பொண் அவமானப்படுத்தியிருந்தா அவளோட சேரப்படாது.... லோ, லோவா...''

பூபதி புருவத்தைச் சுளித்தான்.

''அந்த பிந்து ஒரு கலகக்காரி. ரெபல். அவளோட ஒரு ஃபேமிலி வுமன் சேர்றது நல்லால்லே.''

''எனக்கு பிந்து ஆப்த சிநேகிதி. என்னால அவளோட சிநேகிதத்தை விட முடியாது...''

''நட்புங்கறது பரஸ்பரம் தானே! நீ சொல்ற மாதிரியே அவளுக்கும் உன் மேலே அவ்வளவு அன்பு இருக்கா?''

அதற்கு வித்யா பதில் சொல்லவில்லை. அலட்சியமாகச் சிரித்தாள்.

''ஜஸ்ட் ஒருமுறை அதை 'டெஸ்ட்' பண்ணிப் பாரு. அப்புறம் என் அப்ஜெக்ஷன் சரியா இல்லையான்னு தெரியும்.''

9

மறுநாள் வித்யா ஆபீஸ் விடுகிறநேரத்துக்கு பிந்து வெளியே காரில் காத்திருந்தாள். வித்யா வெளியே வந்தாள். காரில் ஏறி அமர்ந்தாள்.

''பிந்து, நாம ஒரு புது இடத்துக்கு இன்னிக்குப் போறோம்...''

வித்யா பிந்துவையே கொஞ்சநேரம் பார்த்தாள். இதை நான் உனக்கு வைக்கிற சோதனை என்று நினைத்துக்கொண்டே பார்த்தாள்.

''ஏன் அப்படிப் பார்க்கறே?''

''சொன்னு வருவியோ மாட்டியோன்னு தான்.''

''தாராளமா வர்றேன்.''

''எம். டி. யோட அம்மாவைப் போய் நாமு ரெண்டு பேரும் பார்க்கணும்.''

''இம்பாஸிபிள். நான் ஏன் அவரை வந்து பார்க்கணும்?''

''எம். டி.யோட அம்மாவா இல்லே. ஒரு வயதான பெண்ணைப் பார்க்கறதாப் போவோம். ஆம்பிளைங்களாலே அவஸ்தை அனுபவிக்க நியதி அதான்னு ஏத்துண்ட ஒரு மனுஷியைப் போய்ப் பார்க்கலாம்''

பிந்து கொஞ்சம் யோசித்தாள். தன் மனசை மாற்றிக் கொண்டாள்.

''சரி... வர்றேன்! பட் ஒன் திங்... அவரா என்னை அடையாளம் கண்டுபிடிச்சுண்டா போகட்டும். நீயா ஒண்ணும் சொல்லப்படாது...''

தான் வைத்த சோதனையில் பிந்து தேர்ந்து விட்டது வித்யாவிற்கு உள்ளூர பெரிய மகிழ்ச்சி.

எட்வர்ட் எலியட்ஸ் ரோடில் நர்ஸிங் ஹோமின் எதிரில் கார் நின்றது. வழியில் வாங்கி வந்த சாத்துக்குடிப் பழங்களைப் பிளாஸ்டிக் பையில் போட்டு எடுத்துக் கொண்டு வித்யா முன்னே போனாள்.

தும்பு தூசில்லாமல் பளபளவென்று மொஸைக் மின்னிய அறையில் கட்டிலில் தலையைச் சற்று உயர்த்தி வைத்துக் கொண்டு 'வியாசர் விருந்து' புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள் எம். டி. யின் அம்மா. வெளியே கதவின் மீது ஒரு துண்டுச் சீட்டில் பெயர் எழுதி வைத்திருந்தது. பாக்யலக்ஷ்மி.

ஸ்கிரீனை விலக்கும் ஒலி கேட்டதும் பாக்யலக்ஷ்மியின் பார்வை நிமிர்ந்தது.

''வாங்க கொழந்தைங்களா!'' என்று வாயார வரவேற்றாள்.

மூக்குக் கண்ணாடியைக் கழற்றி உறையில் வைத்துப் புத்தகத்தில் ஓர் அடையாள அட்டை கொடுத்து ஷெல்பில் வைத்து நிமிர்ந்து உட்காருகிற பதவிசிலிருந்தே பாக்யலக்ஷ்மியைப் பற்றி இருவருக்கும் ஓர் உயர்ந்த அபிப்பிராயம் உருவாகிவிட்டது.

''உன்னைத் தெரியறது! நீ காலமே வந்தே... இது... எங்கியோ பாத்தாப்பிலே இருக்கு... சட்டுனு கண்டுபிடிக்க முடியல்லே... வரவர ஞாபக சக்தி கொறஞ்சுண்டே போறது... தப்பா நெனச்சுக்காதே கொழந்தே'' என்று பிந்துவை அடையாளம் கண்டுபிடிக்க முடியாததற்கு மன்னிப்புக் கேட்கிற மாதிரி சொன்னாள் பாக்யலக்ஷ்மி.

''இவ என் சிநேகிதியம்மா...''

''அப்படியா... சந்தோஷம்'' பாக்யலக்ஷ்மி தன் மகிழ்ச்சியைத் தெரிவிப்பது போல முகம் மலர்ந்தாள்.

''இப்போ ஒடம்பு எப்படி இருக்கு?''

''பரவாயில்லே. ஒடம்பிலே என்னம்மா இருக்கு. மனசுதான் படுத்தறது.''

தேங்காய் போட்ட பொரியலா!

தேங்காய் வாங்கிப் பொரியல், கூட்டுகளில் போட்டுச் சமைப்பது குதிரைக் கொம்பாக உள்ள இந்நாளில் பொரியலில் சற்று கூடுதல் சுவை கூட்டச் சுத்தமான புழுங்கலரிசியைப் பொரித்துப் பொடி செய்து பொரியலில் தூவி இறக்குங்கள். தேங்காய் சேர்த்தது போலச் சுவையாக இருக்கும்

—ரமாமணி பார்த்தசாரதி.

பிந்துவுக்குச் சங்கடமாயிருந்தது.

''என்ன அந்தஸ்து... எந்த பதவி... எத்தனை சௌகர்யம் இருந்தாலும் மனுஷாளுக்கு ஒரு கொறை வேணுமோல்லியோ! அதான் பகவான் இப்படி வச்சிருக்கார்!''

வித்யா சாத்துக்குடிப் பழங்கள் அடங்கிய பையை ஷெல்ஃபின் மீது வைத்தாள்.

''இதெல்லாம் எதுக்கும்மா கொழந்தே! ரெண்டாவது முறையும் வரணும்னு ஒனக்கு தோணித்தே...'' என்று இங்கிதமாக வித்யாவின் அன்பைப் புரிந்து கொண்டதாக அறிவித்தாள்.

''ராகவன் எல்லாத்தையும் கொண்டு மலைமலையாக் கொட்டறான்! எனக்கு வேண்டியது ஒரு மாட்டுப் பொண்ணு. அது ஒண்ணும் மட்டும் காதில விழாதவனாட்டம் போயிடறான்... ரெண்டு பேரும் நிக்கறேளே ஒக்காருங்கோ'' என்று கட்டில்

எதிரில் கிடந்த இரண்டு ஸ்டூல்களைக் காட்டினாள்.

வித்யா பேச்சை ஆரம்பித்தாள்.

''ஒங்க ஸன் ஏன் மாமி கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கறார்.''

பிந்து நெளிய வேண்டும் போல் தோன்றிய உணர்வை கட்டுப்படுத்தினாள்.

பாக்யலக்ஷ்மி பெருமூச்சு விட்டாள்.

''எனக்கு இருக்கறது ஒரே பிள்ளை. அவனுக்குத் தகுந்த எடமா அந்தஸ்தா லட்சணமா பொண் அமையணுமேங்கற கவலேலே நாப்பது அம்பது எடம் பார்த்தேம்மா. ஒண்ணு இருந்தா ஒண்ணு இல்லே. எல்லாம் இருந்தா அவனோட காரியங்களுக்கு ஒத்தாசையா இருக்கறப்பிலே பொண்ணு அமையலே. எல்லாம் இருக்கறவளா ஒரு பொண்ணைப் பார்த்தோம்! எடுத்த எடுப்பிலே வரன் பிடிக்கலேன்னு முகத்திலே அடிச்சாப்பிலே அவ சொல்லிட்டா. அன்னிலேர்ந்து அவனுக்கு மனசு விட்டுப்போச்சு.''

புளிக்காய்ச்சல் தயாரிக்கும் போது, சிலபேர் பருப்பு வகையருக்களை எண்ணெயில் வறுத்து, அதில் கொட்டி வேகவிடுகின்றனர். மிளகாய் வத்தல், கடுகு, பெருங்காயத்தைக் கொட்டிக் கொதிக்க விடலாம். ஆனால் பருப்புக்களை மட்டும் இறக்கினவுடன் கொட்டி ஊறத்தான்விட வேண்டும். இவ்வாறு செய்தால் சளுப்பு நாற்றம் இன்றிப் புளியோதரை 'கமகம'வென்று இருக்கும். மேலும் வெறும் வாணலியில் சிறிது வெந்தயத்தைப் பொன்னிறமாக வறுத்து,பொடி செய்து போட, வயிற்று உபத்திரவம் ஏற்படாது.

—திருமதி தேவநாதன்.

வித்யா திரும்பி பிந்துவைப் பார்த்தாள்.

''தப்பு என்னோடது தான்! எனக்கு ஒரு பொண் கொழந்தை பொறந்து இப்படி வரன் வரனு வந்து பார்த்துட்டுக் கல்யாணமாகாம நின்னிருந்தா எப்படி இருக்கும்னு யோசிக்கத் தோணலே. அவா அவா பெத்தது தான் அவா அவாளுக்கு ஒசத்தியாத் தோணறது!''

பிந்து உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''அந்தப் பொண்ணு எனக்குச் சரியான பாடம் கத்துக் குடுத்தா. இவன் மனசு விட்டுப் போச்சு. கல்யாணம்னு ஆரம்பிச்சாலேயே என்ன வேலே செஞ்சுண்டிருந்தாலும் விட்டுட்டுப் போயிடறான். அதுக்குப் பயந்துண்டே அவன் சாப்பிடறச்சே அந்த விஷயத்தை நான் எடுக்கறதில்லே.''

வித்யாவுக்கு பாக்யலக்ஷ்மியின் கவலே புரிந்தது. அவளது கழிவிரக்கமும் புரிந்தது.

''நமக்குப் பிராப்தம் அவ்வளவுதான்னு ஒரு சமயம் மனசைத் திடப்படுத்திண்டாலும் இன்னொரு சமயம் கேக்கறதா? அதுவும் மின்ன மாதிரி இப்ப என்னாலே ஓடியாடி எதையும் கவனிக்க முடியலே.''

பாக்யலக்ஷ்மி சற்று நகர்ந்து எட்டுகிற இடத்திலிருந்த ஒரு காலிங்பெல் ஸ்விட்சை அழுத்தினாள்.

''மனுஷா தாம்மா முக்கியம். அது எனக்கு இப்பதான் தெரியறது.''

ஷூ ஓசை கேட்டு இருவரும் திரும்பினர்.

பூபதியின் ஆபீஸ் எம். டி. ராகவன் கழுத்தில் டையும் கையில் ஒரு ப்ரீப் கேஸுமாக உள்ளே நுழைந்தான். நல்ல உயரம். அம்மா மாதிரி சிவப்பு. முகத்தில் பெருந்தன்மை.

வித்யா பிந்துவைப் பார்த்தாள். பிந்துவின் முகம் வெளுத்தது. உள்ளே வந்தவன் சட்டென்று அவளை அடையாளம் கண்டு கொண்டான்.

முகத்தில் தென்பட்ட பெருந்தன்மை குலையாமல் பிந்துவைப் பார்த்து, ''குட் ஈவினிங்'' என்றான்.

வித்யா பதிலளித்தாள். ''குட் ஈவினிங்.''

பிந்து ஒரு கணம்தான் மானர்ஸ் இல்லாமல் நடந்து கொண்டாற்போன்று உறுத்தல் ஏற்பட்டது. தன்னைச் சமாளித்துக் கொண்டு பதிலளித்தாள்.

''குட் ஈவினிங்.''

தன் வருகை அச்சூழ்நிலையில் ஓர் இறுக்கத்தை ஏற்படுத்தி விட்டதை அவன் உணர்ந்திருக்க வேண்டும்.

''நீங்க பேசிட்டிருங்க. நான் அப்புறமா வர்றேன்'' என்று வந்த கையோடு திரும்பப் போனான்.

''நோ... நோ... நீங்க இருங்கோ! நாங்க விடை பெறுகிற நேரம் தான்!''

''ஹவ் ஆர் யூ'' என்று ராகவன் துளிக்கூட மரியாதை குறையாத குரலில் பிந்துவைக் கேட்டான்.

''ஃபைன்... ஹவ் ஆர் யூ'' என்று பிந்துவும் மரியாதையை விட்டுக் கொடுக்கவில்லே.

இருவரும் புறப்பட்டனர். பிந்து ராகவனிடமும் வித்யா பாக்யலக்ஷ்மியிடமும் விடைபெற்றனர்.

''அடிக்கடி வந்துண்டிரு கொழந்தே! உன்னைப் பார்த்தா எனக்கென்னவோ ஒரு சாந்தி கெடைக்கறது'' என்று வித்யாவைப் பார்த்துச் சொன்னாள் பாக்யலக்ஷ்மி.

''நிச்சயம் வர்றேம்மா.''

''ஸாரி ஃபார் தி டிஸ்டர்பன்ஸ்'' என்று அவர்கள் பேச்சினிடையே தான் குறுக்கிட்டதற்கு பிந்துவிடம் வருத்தம் தெரிவித்தான்.

''ஓ டஸின்ட் மேட்டர்! ஆக்சுவலா நாங்க கௌம்பிண்டிருந்தோம்'' என்று தைரியமாக அவன் முகத்தைப் பார்த்துப் பதிலளித்தாள் பிந்து.

அவன் வெளியே படிக்கட்டு வரை வந்தான்.

பிந்து தலைநிமிர்ந்தாள். ராகவன் முகத்தில் அவன் நேர்மையுள்ளம் திறந்த கதவின் வழியே தெரியும் காட்சி போல் வெளிப்பட்டது.

''ஸீ யூ.''

''ஸீ யூ'' பிந்து கையாட்டினாள்.

10

ஒரு மாதம் கழித்து ஒரு மாலைப் பொழுது.

வித்யா சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்து விட்டிருந்தாள். மிக்ஸியைச் சுத்தம் செய்து கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மொபெட் ஒலியும் பூபதி அதை நிறுத்தி வாசலில் ஏற்றி உள்ளே கொண்டு வரும் ஓசையும் கேட்டன.

தலைநிமிர்ந்தாள்.

''ஹேய் வித்யா!'' என்று தன் கையிலிருந்து ஒரு பழுப்புக் கவரை எடுத்து உயர்த்திக் காட்டினான். அவன் முகத்தில் பூரிப்பு கரை புரண்டு ஓடிற்று.

''என்ன ப்ரமோஷன் வந்தாச்சா?'' என்று அசுவாரசியமாகக் கேட்டாள் வித்யா.

''என்ன அவ்வளவு சாதாரணமா கேக்கறே... ப்ரமோஷன் ஹெட் ஆபீஸ்லேயே கெடைச்சிருக்கு... பிந்துவுக்குத் தான் தேங்க்ஸ் சொல்லணும். அவ இல்லேன்னா கோயம்புத்தூருக்கோ, கல்கட்டாவுக்கோ தான் போயிருக்கணும்... அவளுக்கு நம்ம வீட்ல ஒரு பார்ட்டி தரணும்'' அவன் உற்சாகத்தைக் கண்டு முகம் கடுகடுக்க அவள் எழுந்தாள்.

''அதுல ப்ராப்ளம் என்னன்னா...'' என்று வித்யா ஆரம்பித்தாள்.

''அவளுக்கு மட்டும் தர முடியாது! எங்க எம்.டிக்கும் சேர்த்துத் தரணுங்கறியா?''

''நான் அதைச் சொல்ல வரல்லே. இது மிடில் க்ளாஸ் ஏரியா. ஒரு மாதிரி டீசன்டான பீப்பிள் இங்கே இருக்கா.''

அவன் முகம் விழுந்து போயிற்று.

''இருப்பி அடிக்கறதுல ஒரு சந்தோஷமா உனக்கு... ஆல்ரைட்... சந்தோஷப்படு...''

மார்பின் மீது கைகளைக் கட்டிக்கொண்டு பூபதியைப் பார்த்தாள் வித்யா. அவளுக்கே பரிதாபமாக இருந்தது.

''ஐம் ஸாரி பூப்.''

கல்யாணமானதிலிருந்து அந்தச் செல்லப் பெயரை இரண்டு முறைதான் உபயோகித்திருப்பாள் வித்யா.

''எதுக்கு?'' அவனுக்கு நிஜமாகவே விளங்கவில்லை.

''உங்க சந்தோஷத்தை உடனே நான் பகிர்ந்துக்கலே... அன்ட் நோஸ்கட் கொடுத்துட்டேன்.''

''ஐம் ஆல்ஸோ ஸாரி'' என்றான் பூபதி.

''ஏன்''?

''ஒன்னை இப்படி பகிர்ந்துக்க விடாத மாதிரி நான்தான் பன்ஜன்டா நடந்துக்கிட்டிருக்கேன்.''

பூபதி அவளை நெருங்கினான்.

ஒருகணம் அவர்கள் ஒன்றுயினர். வித்யாவுக்குக் கண் கசிந்து விட்டது. அவன் பார்ப்பதற்கு முன் தன்னை விடுவித்துக் கொண்டு கண்ணைத் துடைத்து விட்டாள்.

''எம். டியையும் நம்ம வீட்டுக்குக் கூப்பிட்டா வருவாரோ? அது நல்லா இருக்குமா?''

''பிந்து என் ஆப்த சிநேகிதி.''

''அப்ப அவங்க கல்யாணத்துக்கு அப்புறம் கூப்பிடலாம்.''

''அது நடக்கும்கறீங்களா?''

''ஷ்யூர்... ரெண்டு தடவை நான் எம்.டி.யும், பிந்துவும் கார்லே சிரிச்சுப் பேசிகிட்டுப் போனதைப் பார்த்தேன்!''

தோசைமாவில் உளுந்து அதிகமாகி விட்டால் சுட வராது. அதற்கு மாவுடன் சிறிது ரவையைக் கலந்து தோசை சுட, தோசையும் மிருதுவாக இருக்கும்.

-ஆர். பாலா

''நேத்திக்கி பிந்து போன் பண்ணினா.''

''என்ன சொன்னா?''

''லா காலேஜ்ல படிக்க அவர் சரின்னுட்டாராம்.''

''கல்யாணத்துக்கு அப்புறம் படிக்க வைப்பாரோ?''

''கல்யாணத்துக்கும், படிப்புக்கும் சம்பந்தமில்லேன்னுட்டாராம்.''

''ஐ ஸீ.''

பூபதி ஏதோ யோசிப்பது போல் மௌனமாயிருந்தான்.

''என்ன யோசிக்கறீங்க?''

அவன் ஒரு கையை நீட்டினான். வித்யா தாமதித்தாள். பிறகு நீட்டிய கையைப் பிடித்துக் குலுக்கினாள்.

''நீயும் பி. ஜி. எல். பண்ணு வித்து!''

அவள் அவன் முகத்தைப் பார்த்தாள்.

''ஒங்க 'பாஸ்' போற வழியைப் பின்பற்றணுமோ?''

''இல்லே... மனப்பூர்வமாகச் சொல்றேன்...''

அவள் கை பூபதியின் கரத்தை இறுக்கமாகப் பற்றியது.

(முற்றும்)





மகன் இறந்தால் சொத்தில் தாய்க்குப் பங்குண்டா?

செய்தி மலர்

திருமணமாகி, மனைவியும் ஒருகுழந்தையும் உள்ள மகன், திடீரென்று இறந்து விட்டால் அவன் சொத்தில் அவன் தாய்க்கும் ஒரு பங்கு உண்டா?

'கிடையாது' என்று டில்லி கோர்ட்டில் வழக்குப் போட்டு வாதாடினார் பிரதமர் இந்திரா காந்தியின் மாட்டுப் பெண் மேனகாகாந்தி.

1980 ஜூனில் இந்திராகாந்தியின் மகன் சஞ்சய்காந்தி திடீரென்று விமான விபத்தில் இறந்து விட்டில் அவர் விட்டுச் சென்ற சொத்துக்களின் மதிப்பு பல லட்சங்கள். இவையனைத்தும் தனக்கும் மகன் வருணுக்கும் மட்டுமே சேர வேண்டும். மாமியாருக்கு ஒரு பைசாகூட போகக்கூடாது என்று மேனகா காந்தி வாதித்தபோது 'சிறப்புத் திருமணச் சட்டம் 21—வது பிரிவை'ச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்திராகாந்தி தமக்கும் ஒரு பங்கு உண்டு என்று எதிர்வாதம் செய்தார். மேற்படி சட்டம் 1976—ல் திருத்தப்பட்டு 21—ஏ பிரிவு சேர்க்கப்பட்டதைக் குறிப்பிட்டு அதன்படி சஞ்சய்காந்தியின் சொத்தில் மூன்றில் ஒரு பங்கு தன்னைச் சேர வேண்டும் என்று விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் இந்தச் சொத்து தனக்கு வரவேண்டும் என்ற ஆசை கிடையாது. தன் பங்கைப் பேரன் வருணுக்கே எழுதி வைப்பதுதான் நோக்கம் என்று அவர் கூறினார். 'பேரனுக்குச் சேர வேண்டிய சொத்தை மேனகா காந்தியோ வேறு யாரோ துர்விநியோகம் செய்து விடலாம் என்பதால் தான் சொத்தில் பங்கு கேட்கிறேன்' என்று சொன்னார்.

சென்ற மாதம் டில்லி கோர்ட் இந்திராகாந்திக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து விட்டது. மேனகா, வழக்கை விசாரித்த நீதிபதி பிரதமரின் செல்வாக்குக்குப் பயந்து இப்படித் தீர்ப்பளித்தார் என்று சொல்லி மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். 'பேத்தல்' என்று சொல்லி அப்பீலை ஏற்க மறுத்து விட்டது உயர்நீதி மன்றம். ஆக, மாமியார்களுக்கு வெற்றியாக முடிந்து விட்டது இந்த வழக்கு.

* * *

எங்கேயோ அல்பேனியாவில் (ஐரோப்பாவில் இத்தாலியை ஒட்டிய சிறிய நாடு) பிறந்து சிறு வயதிலேயே ஏசுவின் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, இந்தியாவிற்கு வந்து ஏழைகள் மிகுந்த கல்கத்தாவில் அனாதைக் குழந்தைகளுக்காகவும், கவனிப்பாரற்றுச் சாகும் தருவாயில் உள்ள வயோதிகர்களுக்காகவும் ஒரு சேவாஸ்ரமத்தைத் துவக்கிய அன்னை தெரஸாவின் புகழ் உலகமெங்கும் பரவி இருக்கிறது. அவருடைய அமைதிப் பணிக்காகச் சென்ற ஆண்டின் நோபல் பரிசும் தரப்பட்டது. அவர் தமிழ்நாடு வந்திருந்த போது கோடைக்கானலில் மகளிர் பல்கலைக் கழகத்தைத் திறந்து வைத்தார். அதற்கு அவர் பெயரைச் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தம். இந்தியாவில் வேறெங்கும் இல்லாத

மகளிருக்கான பல்கலைக் கழகம். தமிழ்நாட்டுப் பெண்கள் அவர்தம் வாழ்க்கையைத் தாமே வகுத்துக் கொள்ளக் கூடிய சுதந்திரத்தையும், மன வலிமையும் ஏற்படுத்தித் தரும். கல்விப் பயிற்சி பெறும் வாய்ப்பளிக்க வேண்டும். அதுதான் நாம் அன்னை தெரஸாவின் பெயருக்குத் தரக்கூடிய மரியாதையாகும்.

* * *

பரப்பளவு 2226 சதுர மைல். 2,20,000 மக்கள்தாம். உலகத்திலேயே அதிக தனிநபர் வருமானமுள்ள இரண்டாவது நாடாக (முதலாவது குவெய்த்) ப்ருநெய் பிறந்திருக்கிறது.

சிங்கப்பூருக்குக் கிழக்கே போர்னியோ தீவின் வடக்கே உள்ள இந்தச் சின்னஞ்சிறிய முஸ்லிம் நாடு ஜனவரி முதல் தேதி பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. ப்ருநெயின் சுல்தான் கர் ரூடா ஹஸல்னல் போல்க்கியா முய்ஜாத்தீன் வாதாவுல்லாவுக்கு 39 வயதுதான் ஆகிறது. இரண்டே மனைவிகள். எண்ணெய் வளம் மிகுந்த நாட்டின் செல்வச் செழிப்பில் திளைத்திருந்த சுல்தானும் பிரஜைகளும் பிரிட்டிஷ் பாதுகாப்பிலேயே அடிமை நாடாகவே இருக்க விரும்பினர். அண்டை நாடான போர்னியோவும், வடக்கே மலேசியாவும் ப்ருநெயின் செல்வச் செழிப்பில் பொறாமை உள்ளவர்கள். தம்மோடு இணைத்துக்கொண்டு விட வேண்டுமென்ற நோக்கமுடையவர்கள் உள்நாட்டில் கம்யூனிஸ்டுத் தொல்லை வேறு உண்டு. பிரிட்டிஷ் காலனியாக இருந்து விட்டால் பாதுகாப்புப் பிரச்னையே இல்லை. ஆனால் இந்தத் தலைமைப் பொறுப்பு நமக்கு எதற்கு என்று பிரிட்டன், அதற்காக யாரும் போராடாமலேயே சுதந்திரம் வழங்கிவிட்டுத் தன் கொடியைச் சுருட்டிக்கொண்டு போய் விட்டது.

35 கோடி ரூபாய் செலவில் 1778 அறைகள் கொண்ட பிரும்மாண்டமான அரண்மனை ஒன்றை எழுப்பிச் சுதந்திர விழா கொண்டாடினார் சுல்தான். எழுபது நாடுகளிலிருந்து 4300 விருந்தினர்கள் வந்திருந்தனர்.

* * *

காதலிப்பது இங்கே பெரிய குற்றம். திருமணமாகாத ஆணும், பெண்ணும் நெருங்கி நின்றாலும், உட்கார்ந்திருந்தாலும், மப்டி போலீஸின் கண்ணில் பட்டுவிட்டால் உடனே சிறைதான். ஆறு மாதம் நீட்டி விடுவார்களாம்.

பொது இடத்தில் கணவனின் கன்னத்தில் பளாரென்று அறைவாள் மனைவி. அவன் பொறுத்துக் கொண்டு போக வேண்டும். ஒரே பெண்ணுக்கு நாலைந்து கணவர்கள் உண்டு. சொத்து பந்தம் எல்லாம் பெண்ணுடையது தான். ஆண்களுக்கு உரிமைகள் இல்லை. கடவுள்கள் கூட பெண்கள் தாம்.

'மினரோ' என்ற இந்தச் சிறிய சமூகம் காஷ்மீரில் மனித நாகரீகத்துக்கு எட்டாத இடத்தில் இப்போதும் இருக்கிறதாம். இந்தச் சமூகத்தினரே 'ஆரியர்'கள் எனப்படும் வேதகால மனித இனமாம். மொத்தமே 800 பேர்கள்தாம் இருக்கிறார்கள். வில்லும், அம்பும் கொண்டு மலை ஆடுகளை வேட்டை ஆடுகிறார்கள். வீடுகளில் வெள்ளாடுகள் வளர்க்கிறார்கள். திராட்சையிலிருந்து மது தயாரித்துக் குடிக்கிறார்கள். வாழ்நாளில் ஒருமுறை கூடக் குளிப்பதில்லை.

இந்த விவரங்களையெல்லாம் நேரில் சென்று கண்டு ஒரு புத்தகமாகஎழுதி வெளியிட்டிருக்கிறார் மைக்கேல் பீஸல் (Michael Peissel) என்னும் அமெரிக்கப் பேராசிரியர். மினரோ ஆரியர்களைப் போலவே முகத்தில் சாயம் பூசிக் கொண்டு யாரும் போக அனுமதியில்லாத இந்த இடத்திற்குப்போய் ஆறு மாதங்கள் இவர்களுடனேயே தங்கி அபூர்வமான செய்திகளைத் திரட்டித் தந்திருக்கிறார் இவர். இந்தச் சமூகம் இன்னும் கற்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்தியப் படைகள் மலைகளை வெட்டி, சாலைகளை அமைத்துக் கொண்டு இவர்களை நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். பிறகு இந்த அபூர்வ இனமே இல்லாமல் போய்விடும் என்று கூறுகிறார் பீஸல். சுத்தமான ஆரிய ரத்தம் ஓடும் இந்த இனத்து ஆண்களோடு சேர்ந்து குழந்தைப் பெற்றுத் தர சில ஜெர்மானிய இளம் பெண்களை அனுப்பி வைக்கும்யோசனை 1938-ல் இவர்களைப் பற்றிக் கேள்விப் பட்ட போது சர்வாதிகாரி ஹிட்லருக்குத் தோன்றியதாம்.

-ரங்கஸ்ரீ

ஸ்ரீ மாதா

ரா. கணபதி

6

லீலையில் மலர்க்கரம் வீசிய மலர் மாலை மஹாதேவன் கண்டத்தே விழ, விண்ணிலிருந்து மலர் மழையும் சொரிந்தது. சுபம் எதற்குமே தேவர் புஷ்ப விருஷ்டி பொழிவதுண்டெனினும், இப்போது அவர்களது துயர் தீர்க்கவே அன்னை மணமகளான போது, இந்திரன் மேகங்களை விசேஷமாகத் தூண்டி மலரைப் பெரு மழையாகவே பொழிவித்துத் தீர்த்தான்.

அவள் பரம ஸ்வதந்திரையான பர தேவதை என்ற ரீதிக்கிணங்க காந்தர்வ மணம் செய்து கொண்டு விட்டாள். ஆனால் அவள் உயர்குலத்துக்கெல்லாம் வழிகாட்டி என்ற ரீதியில் சாஸ்திர முறையையும் வைதிக நெறியையும் நடத்திக் காட்டவும் வேண்டியவளாயிற்றே. அதனால் சதுர்முகன் சிவ–சக்தியரின் சாஸ்திரோக்தமான விவாஹத்துக்கு உடனே ஏற்பாடு செய்தான். ஏனெனில் அதுவே லோக மங்களம் விளைக்கும் சுபமுகூர்த்தமாக இருந்து விட்டது.

அகிலாண்ட ஜனனியான அவளுக்குத் தந்தை ஸ்தானம் வகித்துக் கன்யாதானம் செய்யக் கூடியவராக எவரையும் பிரம்மனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவளாக இஷ்டப்பட்டு தக்ஷன், ஹிமவான் போன்றோருக்கு மகளாக ஆவிர்பவிப்பது வேறு விஷயம்.

தந்தைக்குப் பதில் தமையன் பொறுப்பேற்கலாமன்றோ?

பிரம்மன் திருமாலை நோக்கினான். ''இந்த மஹாதேவி உன் வடிவினளே அல்லவா? நீங்களிருவரும் உடன் பிறப்புக்களாயிற்றே! காமேச்வரனுக்கு இக்கலியாணியைக் கன்யாதானம் செய்து கல்யாணம் செய்துதரும் தகுதி அண்ணனான உனக்கே உண்டு வா'' என்றான்.

உலகொழிந்த பரம சாந்த நிலையைப் பரசிவம் என்றும், அதுவே உலக மாயையை இயற்றி ஆள்கையில் புருஷவடிவாயின் விஷ்ணு என்றும், பெண் வடிவாயின் அம்பாள் என்றும் அநுபூதிமான்கள் கண்டிருக்கிறார்கள். இப்புருஷ வடிவு பெண்வடிவு ஒவ்வொன்றுக்குமென உள்ள தனி எழில் காரணமாக இரு வடிவாயும் லோக நாடக மஹாசக்தியை வைத்து எண்ணுகையில் விஷ்ணுவும் அம்பாளும் தமையனும் தங்கையும் ஆகின்றனர். அம்பிகை விஷ்ணுவோடு ஸர்வஸமமாக உள்ள நிலையில் அவளை அபிராமிபட்டர், ''தரங்கக் கடலுள் வெங்கட்பணியணை மேல் துயில் கூரும் விழுப்பொருளே!'' என விளிக்கிறார்: ஸோதர பாவத்தில் அநுபவிக்கும் போது, ''மூவா முகுந்தற்கிளையவளே!'' என்றும், ''செங்கண்மால் திருத்தங்கைச்சியே!'' என்றும் தித்திக்க அழைக்கிறார்.

மனத்தை அன்பில் ஒன்றுபடுத்தி தியானித்து. தியானித்துப் பரமானந்தமடைய வேண்டிய காட்சி: கல்யாணஸுந்தர பரமேச்வரனுக்கு ஸர்வ மங்கள மங்களையான லலிதா த்ரிபுரஸுந்தரியை வைகுந்த நாதனானவாக தே உன் ஆனந்தத்தோடு அருமறை வழிப்படி தாரை வார்த்துக் கொடுத்துத் தாரமாக்குகிறான்! மஹாவிஷ்ணுவே பரமேசனை மாப்பிள்ளையாக்கி, ''மஹா விஷ்ணு ஸ்வரூபிணே'' என்று பூஜிக்கிறான்! நம் மனம் எழுச்சி பெறவும், அவ்வெழுச்சி சொல்லாய் உருகி வெளிப்படவும் மீண்டும் அபிராமிபட்டரைத் தான் துணை கொள்ள வேண்டியதாகிறது:

> வல்லிய பாகத்(து) இறைவரும் நீயு(ம்) மகிழ்ந்திருக்கும்
> செல்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
> அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகி வந்து
> வெவ்விய காலன் என் மேல்வரும் போது வெளிநிற்கவே!

ஆம்! அந்தகன் நம்மை அணுகும் அந்த அந்திம வேளையிலே நமது ஆவி பரமபதத்திலே மலராக மணக்க இந்தத் திருமணத் தியானத்திலும் சிறந்ததாக என்ன உண்டு? சக்தி சிவத்தைக் கூடியதைச் சிந்தித்தால் ஜீவாத்மாவும் பரமாத்மாவோடு பிரிவுறாமல் கூடிவிடும்.

திருமணம் முடிந்தவுடன் ''ஆசீர்வாதம்'' என்ற பெயரில் மணமக்களுக்குப் பரிசுகள் ஒதப்படுவது வழக்கமல்லவா? இங்கோ ஜகத்தின் ஜனக – ஜனனியருக்கு ''நமஸ்காரமாக'' அமரர்கள் அரிய காணிக்கைகளைச் செலுத்தி அகமகிழ்ந்தனர்.

நூதன தம்பதியர் கரம் கொண்ட ஐந்து மலரம்புகளாக நாராயணனின் ஆரா அன்பே மலர்ந்தது. அவர்களது கரும்பு வில்லாக இறுகி இனித்தது சதுர்முகனின் மதுரநேசம். அவர்கள் தாங்கும் பாச அங்குசங்களாக வருணனின் பாசாயுதமும், விச்வகர்மனின் அங்குசமும் சிறப்பு செய்தன. அக்னி அவர்களுக்குக் கிரீடம் அணிந்தான். ஸௌர்ய



சந்திரர்கள் குண்டலங்கள் ஈந்தனர். (லலிதா ஸஹஸ்ர நாமத்தின்படி கதிரவனும் மதியமுமேதான் அம்பாளின் இரு தாடங்கங்கள்.) ரத்னாகரம் எனப்படும் கடலின் அதிதேவதை நவரத்ன ஆபரணங்களை அளித்தான். இந்திரன் என்றும் குறையாத மதுபாத்திரத்தை ஈந்தான். பிரேமானந்த ரஸமே அந்த மது! குபேரன் சிந்தாமணிகளாலான ஹாரம் அளித்தான்.

இத்தம்பதியர் ராஜனும் ராணியுமாகத் திகழ வேண்டியவர்களாயிற்றே! 'ராஜன்' என்று மரியாதைக்குச் சொன்னாலும், ஆட்சியதிகாரம் முற்றிலும் பெற்றவள் ராணியான அவள்தான். ஆம், அம்பிகை கவிதையாயுள்ள கோலத்தில் எலிஸபெத் ராணி போல; ஈசன் ஃபிலிப் கோமகன் போலத்தான்! அதெப்படியாயினும் அவள் பதியில்லாத கன்னியாக அரசு கட்டில் ஏற முடியாதென்ற சாஸ்திர விதியைக் காட்டித்தான் விதாதா அவளை விவாஹத்துக்கு இணங்கச் செய்திருந்தான்.

> எலுமிச்சம் இலையில் வைடமின் 'சி' சத்து உள்ளது. இந்த இலையை மோரில் போட்டுவைத்தால், மோர் ருசியாக இருக்கும். உடம்பு உஷ்ணம் குறையும். ஜீரண சக்தி உண்டாகும்.
>
> எஸ். விஜயா சீனிவாசன்

அரச இலச்சினைகளில் முக்யமானது வெண்கொற்றக் குடை. இந்தக் குடையைப் புது மணத் தம்பதியர்க்கு ஓதி வைத்ததும் திருமால்தான். சக்கரக் கையானை அவனே திரிலோகச் சக்கரவர்த்தி. ஸ்ரீசக்ர நாயகியான அவனது தங்கையே மூவுலகச் சக்கரவர்த்தினி.

'சத்ர — சாமர' என்ற முறைமைப்படி குடைக்கு அடுத்த ராஜரீகச் சின்னமான இரு சாமரங்களைக் கங்கையும் யமுனையும் அளித்தனர். அவை அலைவீசுவதே சாமரம் இரட்டுவது போன்றதுதானே?

வஸுக்கள் எண்மர், ருத்ரர் பதினொருவர், ஆதித்யர் பன்னிருவர், இரட்டையரான அச்விநி தேவர்கள், அஷ்ட திக்பாலகர், தேவர்களில் பல பிரிவினரான மருத்துக்கள், ஸாத்யர்கள், கந்தர்வர்கள் ஆகியோரும், மஹாதேவனின் பிரதம (பூத) கணநாதரும் தத்தம் ஆயுதங்களை சிவ—சக்தி தம்பதியருக்கு தத்தம் செய்தனர். பண்டனால் செயவிழந்து நிற்கும் இவர்களுக்காகப் போராடப் போவது அம்பிகைதானே?

மற்றும் முப்படைகளுக்கு அடையாளமாக ரத, கஜ, துரகங்களையும் அவர்கள் நமது திவ்ய வதூவரர்களுக்கு அர்ப்பணித்தனர்.

இவற்றிலும் முக்கியமான காலாட்படை வீரர்களை மட்டும் அவளேதான் ஸ்ருஷ்டித்துக் கொள்ளப் போகிறாள். தாங்கள் அடியோடு கையாலாகாமல் கையறு நிலையில் அவள் காலில் விழுந்து கிடக்க வேண்டியவர்களேயன்றி, அவளது கருவியாகக் கூடப் போரிடத் தகுதியற்றவர்கள் என்ற எளிமை நிலையில் அப்போது அமரர்கள் இருந்தனர். அவர்களது அந்த சரணாகத அழகை மெச்சி ஏற்குமுகமாகவே அம்பிகை பிற்பாடு பண்டனுடன் யுத்தத்துக்குப் புறப்படுகையில் அவர்களைத் துணை கொள்ளாமல் தானே, தன்னிலிருந்தே சக்தி ஸேனையைத் தோற்றுவித்துக் கொண்டாள்.

மணமக்கள் ஊர்வலம் வரவேண்டாமா? தற்காலத்தில் ஸாரட்டு போய் கார் வந்திருக்கிறதெனில், அந்த ஆதிகாலத்திலேயே பிரம்மா நமது மணமக்களை ஹெலிகாப்டரில் பவனி கொள்ளச் செய்துவிட்டான்! குஸுமாகரம் என்ற விமானத்தைப் படைத்து அந்த விண்ணூர்தியில் சிவனையும் சிவையையும் எழுந்தருளச் செய்தான். 'குஸுமாகரம்' என்றால் மலர்மயமானது என்று பொருள். 'புஷ்பக விமானம்' என்பதன் பொருளும் இதுதான்.

கண் இனிக்க, நாசி மணக்க வாடா மலர்களாலேயே உருவாகியிருந்தது அவ்வூர்தி. அதன் பரிமளம் சற்றுப்பட்டாலே போதும், மனக்கலக்கம், நோய், பசி, யாவும் பறந்து விடும். விமானமாயினும் விண்ணில் போலவே மண்ணிலும் அது செல்லும். அதில் வீற்றிருப்போர் விருப்பப்படியெல்லாம் தானாகவே செல்லும். இப்படிப்பட்ட திவ்ய விமானத்தில் காமேச்வர—காமேச்வரியர் இருக்கை கொண்டு அடியார்கள் உள்ளம் உவகிக்க உலா வந்தனர்.

ராஜோபசாரம் நடந்தது. சத்ர — சாமரங்களென்ன? கொடி தாங்குவோரும் தடி தாங்குவோரும் என்ன? வீணை, வேணு, மிருதங்காதிகள் இசைப்போரென்ன? இப்படி அமரர் கணம் சூழ, அப்ஸர கணங்கள் ஆட, அம்மை — அப்பர்களின் அற்புத பவனி நடந்தது.

உப்பரிகைகளிலிருந்து தேவமாதர் பொரியையும், மங்கலாக்ஷதையையும் வீசினர். ஸுமங்கலியர் வாயில்தோறும் எழுந்தருளும் திவ்ய தம்பதிக்குத் தீப ஆரத்தி காட்டித் தொழுதனர்.

இப்படி வீதி வீதியாக உலா முடித்து லலிதா — காமேச்வரர்கள் அரண்மனை திரும்பி ஸபா ப்ரவேசம் செய்த கோலாஹலத்தை எழுதி முடியுமோ. பரம ரிஷிகளின் பவித்திர பத்தினியர் பழுத்த ஸுமங்கலிகளாக ஒன்றுகூடி அவர்களை கந்த, புஷ்ப அக்ஷதை மரியாதையுடன் ஸபை முகப்பில் வரவேற்றனர்.

சிகர கட்டமாக சிம்மாதனம் ஏறினர் அம்மாவும் பெம்மானும்.

அப்பெரும் ஸபையில் ஒருவர் விடாமல் அனைவர் மீதும் அம்பிகையின் அருள் பார்வை இன்னல் தீர்க்கும் இனிய மின்னலாய்த் தீண்டிக் கொண்டே ஓடிற்று. கயல் விழிகளின் அக்கருணை நோக்கு பட்ட மாத்திரத்திலேயே அவர்கள் யாவரும் ஸர்வாபீஷ்டங்களும் ஈடேறிவிட்ட நிறைவைப் பெற்றுப் பூரித்தனர்.

''கடாக்ஷ லேசத்தாலேயே அனைவரின் காமனைகளையும் பூர்த்தி செய்யும் தாயே, உனக்குக் காமாக்ஷி என்று நாமகரணம் செய்து நாக் குளிருகிறேன்'' என்று நான்முகன் நமஸ்கரித்தான்.

அரியாஸனத்தில் அரனார் பக்கலில் அமர்ந்து ஸிம்ஹாஸனேச்வரியாக, ராஜராஜேச்வரியாக அமரர்களை ஆண்டருளத் தொடங்கினாள் அன்னை லலிதை.

அவளுக்காக நிர்மாணமாகியிருந்த புது நகரத்திலேயே தேவர்களும், ரிஷிகளும் குடியேறிவிட்டனர். அன்னையின் அன்பாட்சியில் நிம்மதியாக, நிச்சிந்தையாக அவர்கள் வாழலாயினர். அவர்களில் ஒவ்வொருவரும், ''என்னிடமே தேவிக்கு அதிக வாத்ஸல்யம்'' என்று பெருமிதப் படும்படியாக அந்தத் தாய் அருமைக்கிட்டாளாம்!

இனிமையிலும் இனிமையான நிலவரம்.

ஆனால் இப்படியே போனால் அவர்களது கர்மத்தின் கதி என்னாவது? பண்டன் நெருங்கவும் நினைக்க முடியாததொரு ராஜதானியில் அம்பிகை இப்படியே அமரரோடும் அருந்தவசியரோடும் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்து விட்டால் அவ்வஸுரனின் அழிவு எப்படி ஏற்படும்? அன்னையின் யுத்த பராக்ரமம் எப்படி வெளியாகி அக்ரமத்தை அழித்துக் காட்ட முடியும்? எல்லாவற்றுக்கும் மேலாக, 'லலிதோபாக்யானம்' என்பதாக இன்றைக்கும், என்றைக்கும் அடியார்கள் படித்தும், கேட்டும், பாராயணம் செய்தும் ஆனந்தமுறும் லீலா சரிதம் எப்படி உருவாகும்?

இதையெல்லாம் எண்ணி, நாரத மஹர்ஷி லலிதாம்பிகையின் ஸந்நிதிக்கு வந்து தமது விண்ணப்பத்தை வெளியிட்டார். ''அம்மா! மறைந்து நிற்கும் அரூப மஹாசக்தியான நீ ரூபம் கொள்வது தீயோரை ஸம்ஹரிக்கவும், நல்லோரை இன்புறுத்தி மேலெழுப்பவுமே அல்லவா? தீய பண்டன் பரிபூர்ண சக்தியான உன்னையன்றி வேறெவராலும் வெல்வதற்கு இயலாதவனாக செம்மாந்து வாழ்ந்து வருகிறான். இங்கே உன்னருகே வந்து குடிபுக முடியாத மூவுலகினரும் அவனால் பீடிக்கப்பட்டுத் தவிக்கின்றனர். அது மாத்திரமின்றி உன் ஸ்ருஷ்டிக் கிரமத்தில் பலவிதமான தேவருலகங்கள், ரிஷி மண்டலங்கள் யாவும் ஒவ்வோர் ஒழுங்கின் மீது நிர்மாணிக்கப்பட்டிருப்பதை அடியேன் உனக்கு நினைவுறுத்தலாமா? அந்த உலகங்களின் பிரஜைகள் தங்கள் வினைப்பயனை அநுபவிக்க ஏற்பட்ட அவ்விடங்களை விட்டு வந்து, வினையே தீண்டாத இந்த உன் ராஜதானியிலேயே வாஸம் செய்வதால் கர்ம நீதியும் பாதிக்கப்படுகிறதே!''

இப்படியாக, 'கலகம்' என்று உலகோர் தவறாகச் சொல்லும் கருணைப் பணியை, தருமப் பணியை நாரதர் புரிந்து அன்னையின் அவதாரப் பணியைத் தொடங்கி வைத்தாக.

அவர் சொன்னதன் நியாயத்தை தேவி உளம்கொண்டாள். 'புண்ய அபுண்ய பலப்ரதா', 'கர்மபல ப்ரதா' என்றெல்லாம் ''ஸஹஸ்ரநாமத்''திலும் ''த்ரிசதி''யிலும் பெயர் கொண்டவள் அவள். எனவே தேவர் கர்மத்தை ஒரேயடியாக இப்போதே தீர்த்து விடக் கூடதென்றும், பண்டனின் துஷ்கர்மத்துக்கான பலனை அவனுக்குத் தரவேண்டுமென்றும் திருவுளம் கொண்டாள்.


தேவர் ரிஷிகள் ஆகியோர் மனம் நோகாத வண்ணம் அவர்களுக்கெல்லாம் வெகுமதிகள் தந்து, விடை கொடுத்து அனுப்பி வைத்தாள்.

'ஸ்ரீ லலிதாதேவி அக்னி குண்டத்திலிருந்து ஆவிர்பவித்தது, பரமேசனைக் காமேசனாக்கிக் கடிமணம் புரிந்துகொண்டது பட்டாபிஷேகம் செய்து கொண்டு சிம்மாதனம் ஏறியது — ஆகிய இச்சரிதைகளை அதிகாலையில் எழுந்து சிரத்தையுடன் மனத்தில் கொள்பவர்கள் இம்மை மறுமை, நலம் ஸகலமும் பெறுவர், படுவர்' என்று இச்சரிதையை அகஸ்தியருக்குக் கூறும் ஹயக்ரீவப் பெருமான் சாற்றுகிறான். ஸூர்யோதயம், நண்பகல், அஸ்தமனம் ஆகிய மூன்று பொழுதுகளிலும், அரியணையில் வீற்றிருக்கும் அரசிக் கோலத்திலே அன்னையைத் தியானம் செய்து, அவளது மந்திரத்தை ஜபிப்பவர் ஆறு மாதத்துக்குள் மகத்தான லக்ஷ்மியைப் பெறுவர் என்று காவலெடுவே வைக்கிறான். ஆத்மானந்தம்தான் அந்த மஹத்தான லக்ஷ்மி என்று சொல்லவும் வேண்டுமா?

(தொடரும்)

நகத்தில் சிலருக்குச் சொத்தை இருக்கும் இதற்கு கீழ்காய் நெல்லி இலையைப் பறித்து நல்லெண்ணெய் விட்டு அரைத்து இரவு படுக்கும்போது வைத்துக் கொண்டால் பத்து நாட்களில் நல்ல பலன் தெரியும்.

- இந்திராராஜாமணி



ங்கள் இல்லத்திற்குத் தேவையான
க்ஸி, ரெப்ரிஜிரேட்டர், டிவி,
க்கிங் ரேஞ்ச், நகைகள், மோபெட்
போன்ற பொருட்களை இத்திட்டங்கள்
மூலம் நீங்கள் எளிதாக வாங்கலாம்.

ரெடிமணி ஷாப்பர்ஸ் கிளப்' உங்களுக்கு மூன்று மணியான திட்டங்களை அளிக்கிறது.

1. செலவழிக்கும்போதே சேமிக்க ஒரு 'ரெடிமணி திட்டம்'

குறைந்தபட்சம் ரூ. 2000/- டெபாசிட் செய்து, ரூ. 1000/- மதிப்புள்ள பொருட்களை இலவசமாக உடனே பெறுவதோடு, ஆண்டுகளுக்குப் பிறகு ரூ. 2300/-ஐயும் திரும்பப் பெற்றுவிடுங்கள்.

2. ரெடிமணி தவணைமுறைத் திட்டம்

ரூ. 250/- கட்டி ரெடிமணி ஷாப்பர்ஸ் கிளப்பில் உறுப்பினராகி பொருட்களை (Consumer Durable) வாங்கித் தவணை முறையில் பணத்தைச் செலுத்துங்கள். அப்போலோ ஹாஸ்பிடலில் மருத்துவ வசதி, உல்லாசப் பயணம் போன்றவைகளுக்கும் தவணை முறை வசதி உண்டு.


3. 'ரெடிமணி' மாதாந்திரக் கடன் வசதித் திட்டம்

ரூ. 100/- கட்டி உறுப்பினராகி ஒரு 'கடன் அட்டையை' (Credit Card) பெற்று, பில்களுக்கு மாதக் கடைசியில் பணம் செலுத்துங்கள்.

ஆம், சிறுகக்கட்டிப் பெறுக வாழ, உங்கள் குடும்பத்தினருக்கு, ஏற்ற இம்மணியான திட்டங்கள் மகிழ்ச்சியான வாழ்விற்கு வழி வகுக்கும்.

மேலும் விவரங்களுக்கு ஸ்பென்ஸர்ஸில் உள்ள ரெடிமணி கவுன்ட்டருக்கு வருகை தாருங்கள்.

RELIABLE HIRE PURCHASE
Readymoney
SHOPPERS' CLUB
AT
Spencer's
IT'S A GREAT NEW WAY TO SHOP!



பணத்திற்கு மதிப்பு. மனத்திற்கு பிடிப்பு.

SAA/RHP/1480



மங்கையர் மலர் சில மாதங்களுக்கு முன்பு 'திருமணம் எனக்குத் திருப்புமுனை' கட்டுரைப் போட்டி அறிவித்திருந்ததே! அதில் முதல் பரிசு பெற்ற மதுரையைச் சேர்ந்த வசந்திக்குக் கோபிமிக்ஸி நிறுவனத்தினர் மிக்ஸியைப் பரிசளித்தனர்.

செய்திகள் குறிப்புக்கள்

பயனுள்ள பத்துக் குறிப்புக்கள்

1. பெயிண்டோ, கறையோ உடம்பில் எது ஒட்டிக் கொண்டாலும் சமையல் எண்ணெயைப் போட்டுத் தேய்த்தால் போய் விடும். பெயிண்ட் ரிமூவரை உபயோகிப்பது சருமத்திற்குக் கேடு.

2. ஆப்பிள், தக்காளி இவற்றின் தோலை உரிக்க அதன்மேல் கொதிக்கும் நீரைவிட்டுப் பத்து நிமிடம் ஊற விட்டால் போதும். எளிதில் தோலை உரித்து விடலாம்.

3. முட்டையில் விரிசல்கள் விட்டால் அதன்மேல், 'செலபோன் டேப்'பை ஒட்டிவிடுங்கள். முட்டை பாழாகாது.

4. துணிகளை 'அயர்ன்' செய்யும் போது எப்போதும் முதலில் கெட்ட பக்கத்தில், பிறகு நல்ல பக்கம் திருப்பிச் செய்யுங்கள். துணிகள் பாழாகாது.

5. உடல் இளைக்க விரும்புவர்கள் தினமும் நன்கு வேக வைத்த முட்டை யொன்றைச் சாப்பிட்டால் போதும். பசியைக் குறைப்பதுடன் உடலுக்குத் தேவையான சத்தையும் தருகிறது. சாப்பிடாமலே இருப்பதற்குப் பதில் சாப்பாட்டைக் குறைத்துச் சாப்பிடுவது நல்லது.

6. எப்போதும் நீரைக் கொதிக்க வைத்து, அதில் காய்கறிகளைப்போட்டு வேகவிடுங்கள். காய்கறிகளைப் பச்சைத் தண்ணீரில் போட்டுப் பிறகு கொதிக்க வைப்பதால் வைட்டமின்களை இழப்பதுடன் எரிபொருளும் அதிகம் செலவாகும்.

7. நீண்ட நாளைக்கு அரிசியைச் சேகரித்து வைப்பவர்கள் டின்னின் அடியில் ஒரு பிடி வேப்பிலைக் கொத்தைப் போட்டுப் பிறகு அரிசியைப் போடுங்கள். வண்டு, பூச்சி வராது.

8. கோதுமையையும் நிறைய வாங்குபவர்கள் வேப்பிலையுடன் சிறிது உப்பையும் கலந்து வைத்துவிட்டால் போதும்.

9. காலி பிளவர் போன்றவைகளைக் காய்கறிகளைச் சமைக்கும்போது ஒரு துண்டு எலுமிச்சம்பழத்தையும்சேர்த்து விடுங்கள். நிறம் இழக்காமல் இருப்பதுடன் ருசியும் அதிகமாகும்.

10. முறுகலான தோசை விரும்பிகள் நான்கு பங்கு அரிசிக்கு ஒரு பங்கு உளுந்தும், சிறிது வெந்தயமும் சேருங்கள்.

-ஐடியல்ஹோம் அண்ட் குட்ஹவுஸ் கீப்பிங்' புத்தகத்திலிருந்து


ஸ்ரீராம் சிட்பண்ட் கம்பெனி ஒரு புதிய சீட்டுக்குருப்பைஆரம்பித்துள்ளது. டாக்டர்களுக்கு மட்டும் என்று ஒரு சீட்டுக் குருப்பை ஆரம்பித்துள்ளது புதுமைதான். வெளியார் ஜாமீன் இல்லாமல் டாக்டர்களே ஒருவருக்கொருவர் ஜாமீன் கொடுத்துக் கொள்ளலாம் என்பது இதன் சிறப்பம்சங்களில் ஒன்று.



லீக்கோவா கொக்கா?

முன்பெல்லாம் இல்லத்தரசிகளுக்கு லீக்கோ கரி நிறைய கிடைத்துக்கொண்டிருந்தது. அதனுடைய அதிக வெப்ப சக்தியால் சீக்கிரம் சமையல் ஆகிவிடும். இப்போதெல்லாம் அது கிடைப்பதேயில்லை. ஏன்? நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மேனேஜிங் டைரக்டர் திரு டாண்டன் கூறுகிறார்—

''லீக்கோ கரியைச் சமையலறையில் உபயோகப்படுத்துவது, தேக்குமரத்தை கொண்டு அடுப்பெரிப்பது போலத்தான். ஏனென்றால் லீக்கோவிலிருந்து மிகவுயர்ந்த வெப்பம் பெரிய, பெரிய தொழிற்சாலைகளுக்குப் பயன்படும். பெரிய பாய்லர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் இதன் உயர்ந்த உபயோகத்தைத் தெரிந்து கொண்டு லீக்கோவை வாங்க ஆரம்பித்துவிட்டன. அதனால் தான் வீட்டு உபயோகத்திற்கு நாங்கள் லீக்கோவை இப்போதெல்லாம் அனுப்புவதில்லை''



உயர்ந்த பரம்பரை, சுவாதி நட்சத்திரம், ஹரித கோத்திரம், பிரஹசரணம், 38 வயது பெண்ணிற்கு — நல்ல படிப்பு — உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. 48 வயது வரை இருக்கலாம். பெண் சிவப்பு. எஸ்.எஸ்.எல். ஸி. பாஸ். தெய்வ பக்தி வீட்டு நிர்வாகம் உண்டு. ஜாதகம் தேவை. பெட்டி எண்: 1240.

24 மனை தெலுங்குச் செட்டியார், கந்த வஸ்கரவர் கோத்திரம், பி.காம்., 25வயது, அரசுப் பணியில் மாதச் சம்பளம் ரூ. 850 வாங்கும், குடும்பப்பாங்கும், அடக்கமும் கொண்ட பெண்ணுக்கு, அதே ஜாதியைச் சேர்ந்த செவ்வாய் தோஷமுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 1241.

எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்து சேலத்தில் தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.700 சம்பளம், வயது 31, உயரம் 5' 2'' உடைய செங்குந்தர் முதலியார் மணமகனுக்கு மேற்படி இனத்தில் படித்து பண்புள்ள மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1242.

Wanted graduate employed Tamil Iyer match for Ashtasahasram Kabi Gothram accomplished graduate girl 34/160 Parents settled in Gujarat. Star Kartikai Subsects no bar. Decent early marriage. Box No: 1243.

சீர் கருணிக பிள்ளை, 27, பட்டதாரி, மத்திய அரசில் ரூ. 1200 மாத வருமானமுள்ள வரனுக்கு, அதே வகுப்பில் மத்திய அரசில் பணி புரியும் பெண் தேவை. பெண் டெல்லியில் பணி புரிபவளாயிருந்தால் நலம். முழு விபரத்துடன் போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1244

சைவ வேளாளர், வயது 27, எம்.ஏ. படித்து சொத்தும் வருமானமும் உள்ள பிள்ளைக்கு அதே வகுப்பைச் சேர்ந்த வேலைக்குச் செல்லாத வசதியுள்ள குடும்பத்துப் பட்டதாரி மணமகள் தேவை. பெட்டி எண்: 1245.

இந்து செட்டி, சைவம், நல்ல குடும்பம், சென்னையில் அரசுப் பணியில் மாதம் ரூ. 850 சம்பளம் நல்ல அழகு ஐந்தேகால் அடி உயரம் ஆரோக்கியமான 34 வயது சொத்து உள்ள பெண்ணிற்கு ஹிந்து சாதி வேறுபாடில்லாமல் கலப்புத் திருமணம் செய்ய விரும்பும் இளார்க் பதவிக்கு குறையாது வேலை பார்க்கும் 40 வயதுக்குட்பட்ட திருமணம் ஆகாத நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரன் தேவை. பெட்டி எண்: 1246

அழகு, குணம், குடும்பக்கலை தெரிந்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த சென்னையில் அரசுப் பணியில் 25 வயது போஸ்ட்—கிராஜுவேட் ஹிந்து செட்டி பிரிவைச் சேர்ந்த சொத்து உள்ள பெண்ணிற்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அரசுப் பணியில் அல்லது தனியார் நிறுவனத்தில் நல்லபதவியில் உள்ள கலப்புத் திருமணம் செய்ய விரும்பும் நற்குணம் உள்ள வரன் தேவை. எளிய முறையில் திருமணம். பெட்டி எண்: 1247.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த துறுதுறுப்பும், பரந்த மனப்பான்மையுமுள்ள 23/175 மாநிறமான, இருபட்டங்கொண்ட இந்து நாடார் பொறியாளருக்கு, படித்த, அழகிய, பண்புள்ள தமிழ் பேசும் மணமகள் தேவை. பொறியாளர் எனிலும் நல்லது. பெட்டி எண்: 1248.



Protestant Christian Nadar post-graduate, aged 30, invites matrimonial alliance from Christian Nadar post-graduate and graduate working Teachers wellsettled brides. Box No: 1249.

பி. எஸ்ஸி, எல்.எல்.பி., இந்து பருவத ராஜகுலம் 28/175 பம்பாயில் ஏர் இந்தியாவில் பிளைட் பர்சர் மாதம் 3100 4 லட்சம் சொத்துள்ள வரனுக்கு 20—23 வயதுக்குள் நல்ல அழகான பி.யு.சி. வரையிலாவது படித்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதி பேதமில்லை. போட்டோவுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1250

Alliance for Vathima, Tharagayana Poorattadhi, Slim, Goodlooking girl, 30 years S. S. L. C. Domestically trained, Decent marriage assured. Subsect acceptable. reply with particulars to Box No: 1251.

மத்திய அரசு அலுவலகத்தில் பெங்களூரில் மாதம் ரூ. 1200 வருமானம் உள்ள 28 வயது பட்டதாரி ஸ்ரீவைஷ்ணவ கௌசிக கோத்திர வடகலை பையனுக்கு, படித்த, அழகான, வேலையில் உள்ள, புத்திசாலியான மணமகள் தேவை. நட்சத்திரம், புனர்பூசம்,

விருப்பமுள்ளோர் ஜாதகம் விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 1252.

தெல்லை மாவட்டம் வயது 35, உயரம் 5' 9'', சிகப்பு, செட்டியார் குலம், மத்திய அரசில் ரூ. 1150 சம்பளம். 9, 4 வயதில் பெண், 3 வயதில் ஆண், குழந்தைகளைத் தன் பொறுப்பிலுள்ள, படித்த, வசதியுள்ள, தாரம் இழந்தவருக்கு குடும்பப் பாங்கான துணைவி தேவை. படிப்பு, வயது, உயரம், போட்டோ ஆகிய விவரங்களுடன் தொடர்பு கொள்க. ஜாதி பேதமில்லை. பெட்டி எண்: 1253.

திருமண மலர்ப்பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ. 30/– தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பவேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். பதில் அனுப்புபவர்கள் ''விளம்பரதாரர், பெட்டி எண்.... c/o மங்கையர் மலர், கிண்டி, சென்னை-600032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

Vadakalai Iyengar boy (divorcee) age 33 years, settled in Bombay, wants girl of average look and age between 26 - 30years Box No: 1254.

வடமான் – கௌண்டின்ய கோத்திரம் – அவிட்ட நட்சத்திரம் – 32 வயதுள்ள நல்ல குடும்பத்திலுள்ள பெண்ணிற்கு 35–38 வயதுள்ள நல்ல வேலையிலுள்ள வரன் தேவை. பெண் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்திருக்கிறாள். வீட்டு வேலையில் நல்ல தேர்ச்சியுண்டு. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1255.

ஸ்ரீவத்ஸ கோத்திரம், கேட்டை நட்சத்திரம், 26 வயது, 5' 3'' சிவப்பு நிறம், பி. யு. ஸி. (பி. காம்), படித்த, தனியார் கம்பெனியில் கிளார்க்காக வேலைபார்க்கும் அழகும், அடக்கமும், குடும்பப்பாங்கும் தெய்வ பக்தியும் உள்ள வடகலை ஐயங்கார் பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. பிராமணரில் உட்பிரிவுகள் சம்மதம், விரைவில் எளிய திருமணம். (சகோதரி கலப்புத் திருமணம்) 35 வயதுக்குள் நல்ல வருமானமுடையவர்கள் தொடர்புகொள்க. பெட்டி எண்: 1256.

கேரள அய்யர் பெண்ணுக்கு வயது 28, ஷடமர்ஷண கோத்திரம், கார்த்திகை நட்சத்திரம், பிரஹசரணம் எஸ். எஸ். எல். ஸி. கர்நாடக இசையில் டிப்ளமா வீட்டு வேலை நன்றாகத் தெரிந்த பெண்ணுக்கு, நல்ல குணமுடைய வேலையில் இருக்கும் மணமகன் தேவை. பெட்டி எண்: 1257.

அரசு வங்கியில் பணி புரியும் சொத்துள்ள திருநெல்வேலி சைவ வேளாளர் பிள்ளை வரனுக்கு (28 வயது) அழகான வசதி மிக்க சைவ வேளாளப் பிள்ளை / முதலியார் / செட்டியார் வகுப்பைச் சேர்ந்த மணமகள் தேவை. முழு விவரங்களுடனும் ஜாதகத்துடனும் தொடர்பு கொள்ளவேண்டுகிறோம். பெட்டி எண்: 1258.

உதித்ய கௌதம கோத்திரம், 26 வயது. கேட்டை நட்சத்திரம் எஸ். எஸ். எல். ஸி. டைப் (ஆங்கிலம், மலையாளம்) நாலரை அடி உயரம், மெலிந்த தேகம் உடைய, தந்தையை இழந்த, வீட்டு வேலைகள், தையல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற பெண்ணுக்குப் பரந்த மனமும் நல்ல குணமும் 35 வயதுக்கு உட்பட்ட பையன் தேவை. சுமாரான சீர் வரிசை செய்யப்படும். பெட்டி எண்: 1259.

தாரம் இழந்த நல்ல வேலையிலிருக்கும் 50 வயது அவிட்டம் நட்சத்திரம், ஷடமர்ஷண கோத்திரம், ஐயருக்கு கண்ணியமான குடும்பத்திலிருந்து 30 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை. வசதி குறைவினால் திருமணம் தடைப்படுகிறவர்கள் இரண்டாம் தாரம் என்பதை மிகைப்படுத்தாமல் ஏற்றுக் கொள்வாராயின் நல்வாழ்வை அமைத்துக் கொள்ளலாம். பெட்டி எண்: 1260.

அரசு வங்கியில் பணியாற்றும் பிருஹசரணம் 28 வயது ஸ்ரீவத்ஸ கோத்திரம், திருவாதிரை 5' 1'' ஆயிரம் ரூபாய் வருமானமுள்ள தமிழ் ஐயர் பட்டதாரிப் பெண்ணிற்கு 32 வயதுள்ள அதே வகுப்பு மணமகன் தேவை. வரதட்சிணை இல்லை. நல்ல முறையில் திருமணம், வங்கி

யில், மத்திய அரசில், தமிழ்நாட்டரசில், அல்லது ஆடிட்டர் இஞ்சினியராகப் பணிபுரிவோர், போட்டோ, குடும்ப விவரங்கள், ஜாதகத்துடன் எழுதுக. பெட்டி எண்:1261

மாதம் 600 ரூபாய் வருமானம் பெறும் 5 அடி உயரமுள்ள பி. எஸ்ஸி பட்டதாரிப் பெண்ணுக்கு, தகுந்த மணமகன் தேவை. பெண்ணின் தந்தை முதலியார், தாய் வன்னிய குல க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். மணமகன் மேற்கண்ட வகுப்பில் ஏதாவது ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் நலம். பெட்டி எண்: 1262.

Invite Horoscopes from Non-Kasyapa employed grooms below 30. for P.U.C. Secondary grade teacher in East Tanjore Dist., Non-transferable - Rs. 600 p.m. vadama 23 - 150 cms. very fair. Box No: 1263.

Alliance invited from well qualified and settled grooms (Iyer / Iyengar) for 21 years old Palghat Iyer girl B. Sc. Athreya-Visakham. smart, intelligent, good looking 155 cms. No horoscope. simple marriage. Box No: 1264.

கல்யாணம் ஆகி 11 வயதில் ஒரு பெண் உள்ள கணவனால் கைவிடப்பட்ட லிங்க வகுப்பைச் சேர்ந்த 32 வயது பெண்ணிற்கு அதே வகுப்பைச் சேர்ந்தவர்களோ அல்லது, பிராமண வகுப்பைச் சேர்ந்த மனைவி இழந்தோர் அல்லது கல்யாணம் செய்யும் விருப்பம் உள்ளவர்கள் வயது 45க்குள் விண்ணப்பிக்கவும். பெண்ணிற்கு சொத்தும், சொந்த வீடும், வட்டியில்இருக்கிறது. ஜாதகம் தேவையில்லை. பெண்ணிற்கு நட்சத்திரம் தெரியாது. பெட்டி எண்:1265

குடும்பப்பாங்கான ஆற்காடு முதலியார் மணமகள் 24, பி. எஸ்ஸி, 5 அடி சிவப்பு நிறம், சுவாதி, செவ்வாய் தோஷம் லக்னப் படி இல்லை. வசதியான குடும்பம், தகுதியும் வசதியுமுள்ள அதே இனத்தவர் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1266.

For Kerala native Vadama decent family B. Sc. M.B.B.S. 4' 10" fair 26 Rohini, Bharadhwaja girl, suitable qualified groom from respectable family required. send horoscope details to Box No: 1267.

பாரத்வாஜம், வடமாள், மகம், செவ்வாய் தோஷம், வயது 19, எஸ்.எஸ்.எல். ஸி., உயரம் 5' 2'' நல்ல சிகப்பும், அழகும் உள்ள குடும்பப் பாங்கான பெண்ணிற்கு நல்ல வேலையிலுள்ள 30 வயதுக்குள் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண்1268

மணமகன் தேவை – ஸ்டேட் வங்கியில் வேலை பார்க்கும் பி. எஸ்ஸி படித்த பெண். வயது 27. விவாகரத்து செய்திருக்கிறது. எந்த விலங்கும் இல்லை-திருநெல்வேலிசைவ வேளாளர் சம்பளம் ரூபாய் 1200. பெட்டி எண்: 1269.

பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த, வடமாள், செவ்வாய் தோஷம் 7–ல் உள்ளது பையனுக்கு மணமகள் தேவை. பையன் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ஆபீஸர். திருமணமாகி ஒரே வருடத்தில் மனைவியை இழந்தவர். குழந்தைகளில்லை. வயது 34. பெண் பட்டதாரியாகவும், வயது 30–க்குள் வேலையிலும் இருத்தல் நல்லது. பெட்டி எண்: 1270.

Wanted Bride for Karkatha Saiva Vellala Pillai groom aged 29 years employed in the Nationalised Bank monthly drawing Rs. 1,100/-. Box No: 1271.

வெள்ளாளப்பிள்ளை, 28 வயது, பி. யூ.சி. கணவனின் கொடுமையால் 10 நாட்களில் தாய் வீடு வந்த பெண். விவாகரத்துப் பெற்றவர். தாயார் மட்டும் உண்டு. மறு வாழ்வு கொடுக்க விருப்பமுள்ள 35 வயதிற்குட்பட்ட அரசு, அல்லது தனியார் துறையில் வேலை பார்ப்பவர்கள் விண்ணப்பிக்கவும் உட்பிரிவுகள் இருந்தாலும் பரவாயில்லை. தொழில் செய்பவராக இருந்தாலும் நல்லது. சொத்து உண்டு. பெட்டி எண்: 1272

Tamil Iyer Chartered Accountant Koundinya Gothram well settled 30 requires good looking slim well educated bride 22/25 horoscope optional Advertisement for better choice write with family details Box No: 1273.


Wanted for a well-to-do, Tamil speaking middle aged, highly educated journalist a life companion. Poor, orphan, young girls may Confidentially write to Box No:1274

தாய், தந்தை உள்ள, கன்னடம் மாத்வாள் காஸிப கோத்திரம், ஹஸ்தம் நட்சத்திரம் 27]5' 3'' மாநிறம், எம்.ஏ., பட்டப் படிப்பு, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, அக்கௌண்டன்சி (ஆங்கிலம்) படித்துள்ள குடும்பப் பாங்கான பெண்ணிற்கு அரசாங்க மத்திய/மாநில அரசில் வேலையில் உள்ள மேல் பட்டப்படிப்பு உள்ள மணமகன் தேவை. ஜாதகம் மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1275.

தமிழ் பிராம்மணர் பிருஹசரணம் வட-மர்ஷண கோத்திரம், பி. ஏ. பட்டப்படிப்பு மற்றும் தமிழ், ஆங்கில டைப்ரைட்டிங் ஹையர்கிரேடு பாஸ் செய்து வேலையற்ற

பருவ வயதினர் பலரைப் பாதிக்கும் பிரச்னை: பரு... அது பற்றிப் பேசுகிறாள் ஒரு புதுமணக் குமரி.

‘பருவ வளர்ச்சி’ என்றாலே பரு வரும். அதற்கு பரிகாரம் கிளியரெஸில்: பருக்களை கரைத்து கட்டுப்படுத்த உதவுகிறது.’



"அப்போது எனக்கு வயது 13. எனக்கு பரு வரத் தொடங்கியது. பரு வரும் போதெல்லாம் பல்லாண்டுகளாய் பாரா முகமாய் இருந்தேன். பின்பு ஒருநாள் என்னைப் பெண் பார்க்க ஒருவர் வந்தார். பருக்களை முகத்திலே பார்த்த உடனேயே என்னை அவர் வேண்டாம் என்றார். என் தோழி ஜெயாவின் ஆலோசனைப்படி நான் கிளியரெஸில் தடவத் துவங்கினேன். தவறாமல் அன்றாடம் இருமுறை தடவி வந்தேன். அப்புறம் ஒரு நாள் என் தோழி ஒருத்தியின் வீட்டில் மறுபடி ‘அவரை’ சந்தித்தேன். அவர் என்னை வைத்த கண் வாங்காமல் பார்த்தாரே பார்க்கணும். நீங்களும் நாள் தோறும் இருமுறை கிளியரெஸில் உபயோகியுங்கள். பருக்களைக் கட்டுப் படுத்துங்கள்! இப்போது ஜோடி சேர்ந்து வருகிறது கிளியரெஸில்!"

கிளியரெஸில் வேனிஷிங் மெடிகேஷன் மற்றும் கிளியரெஸில் ஸ்கின் கலர்டு மெடிகேஷன்— ஒப்பற்ற 3-வழிச்செயல் கொண்டவை.



1. உடைய வைக்கிறது பருக்களை
2. கரைக்கிறது பருக்களை
3. காய வைக்கிறது. பருக்களை



புதிய வேனிஷிங் மெடிகேஷன்

ஸ்கின் கலர்டு மெடிகேஷன்

கிளியரெஸில் உலக நம்பர் 1 முகப் பரு மருந்து க்ரீம்

OBM/6625R TAM

சிவப்பு நிறமுடைய அழகான 24 வயது 5 அடி, 2 அங்குலம் உயரம், பூராடம் நட்சத்திரம் 4—வது பாதம் உடைய குடும்பப்பாங்கான பெண்ணுக்கு மணமகன் தேவை. உட்பிரிவு எதுவாயினும் ஏற்றுக்கொள்ளப்படும். ஜாதகம் மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1276.

Kerala Vadama 26 Makam, wheatish complexion 5' 3'' S.S.L.C. AIR Singer, Decent family; seeks well settled groom from respectable family. early decent marriage. send Horoscope details to Box No: 1277.

திருநெல்வேலி சைவ வெள்ளாளப்பிள்ளை பி. யூ. சி. 29 வயது, மாநில அரசில் பணிபுரியும் JUNIOR ASST (IOAI) வருமானம் 575]- பிற வருமானம் ரூ. 250]- சொந்த CIRCULATION LIBRARY வைத்து இருக்கும் மணமகனுக்கு, திருநெல்வேலி சைவ — வெள்ளாளப் பிள்ளை இனத்தைச் சேர்ந்த, படித்த மதுரையில் வேலைக்குப் போகும், அல்லது மதுரைக்கு மாற்றிவரக் கூடிய வாய்ப்புள்ள பெண் தேவை. பெட்டி எண்: 1278.

கர்னடக இசையில் தேர்ச்சியும், கல்வியறிவும், அடக்கமும், அழகும் நிறைந்த ஆனால், துரதிர்ஷ்ட வசமாக சில ஆண்டுகளுக்கு முன் பார்வையிழந்த இளம் பிராமணப் பெண்ணிற்கு மனிதாபிமானமும், பரந்த உள்ளமும், மணப்பெண்ணின் இசை ஞானத்தை ஊக்கமளிப்பவருமான மணமகன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி தபால் பெட்டி எண் 1920 சென்னை-600 001.

''தாழ்த்தப்பட்ட வகுப்பு, வயது 50, இரயில்வேயில் ரூ. 2000]- சம்பளம், வீடும், நிலமுமுள்ள தாரம் இழந்தவருக்கு குடும்பத்தைப் பராமரிக்க 8 வகுப்பிற்குக் குறையாமல் படித்த 28–38 வயதிற்குள் மணமகள் தேவை.' சாதி தடையில்லை. (பிள்ளைகள் மேஜர். உத்தியோக நிமித்தம் தந்தையுடன் தங்குவதில்லை.) பெட்டி எண்: 1280.

Boad-Minded bridegroom for Vadama, Bharathwaja Iyer girl, B.Sc., B.Ed., 36 years. Uttiradam (2) - Right leg very slightly affected by Childhood Polio- But can walk well., sub sects acceptable. Reply Box No: 1281.

வசிஷ்ட கோத்திரம், அவிட்ட நட்சத்திரம் எஸ். எஸ். எல். சி. தையல் அறிந்த குடும்பப் பாங்கான 30 வயதுள்ள தெலுங்கு பிராம்மண பெண்ணிற்கு (உட்பிரிவு — பலகனாடு கர்ண கம்மஜு) தகுந்த மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1282.

கௌண்டின்ய கோத்திரம், சித்திரை நட்சத்திரம், 22 வயது, 5' 4''' உயரமுள்ள குடும்பப்பாங்கான பட்டதாரி ஐயர் பெண்ணிற்கு வடமாள் பிரிவைச் சேர்ந்த 26–29 வயதில் வங்கி] அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் வரன் தேவை. பெட்டி எண்: 1283

23 வயது திருவாதிரை நட்சத்திரம், பி. யு. சி. படித்த குடும்பப்பாங்கான ரெட்டியார் குலப் பெண்ணிற்கு அதே குலத்தில் 30 வயதுக்குள் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் பட்டதாரி மணமகன் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் 1284

Bharathwajam Vadama Karthikai 42 years Public Sector employee desires to have a life partner. The girl should be employed (transferable) and between 30-34 years Box No: 1285.

தனியார் பள்ளி நிரந்தர ஆசிரியை பணியில் எழுநூறுக்கு மேல் சம்பளம் பெறும் சுமாரான வசதியுடைய முப்பத்தியேழு வயது பிராமணப் பெண்ணிற்கு அதேகுலத்தில் நல்ல உத்தியோகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றுதல் வசதியுடன் கூடிய வரன் தேவை. உட்பிரிவுகள் பரவாயில்லை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 1286.

கேட்டை நட்சத்திரம், பையந்தி மகரிஷி கோத்திரம், வயது 22 சோழியஞ்செட்டியார், பி. ஏ. கடைசி வருஷம் படித்துக் கொண்டிருக்கும் நல்ல வசதியுள்ள அழகான பெண்ணுக்கு, 30 வயதுக்குள் GREEN CARD HOLDER, அமெரிக்காவில் செட்டில் ஆகி இருக்கும் மணமகன் தேவை. SUBSECT NO BAR. பெட்டி எண்: 1287.

Grooms wellsettled fair Athreya Vadama Iyer sisters (37 Sathayam 5' 4" height) and 31 (Moolam 4th Padham) 5' 5" height of decent family. Elder S.S.L.C Stenography Typing employed. Younger S.S.L.C Teacher (non-trained). Both healthy, good looking with pleasing manners. Tailoring and cookery are hobbies Domestically well exposed. Totally two sonsand four daughters. All are well settled. One son and two daughters are married. Decent Marriage assured Subsects acceptable. Box Nor 1288.

Wanted Boy Engineer/C.A./Medical/ M. B. Alike below 33 for Iyer Vadama Kausika Poosam girl B. Com, A. C. A. (ICWA Final) 5 feet, very fair. 25 years with very slight limp perceptible subsect no bar. send horoscope to Box No: 1289.

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.



Johnson's
baby
powder
PUREST PROTECTION
Johnson & Johnson
தாலாட்டும் பாசமெனத் தவழும் மென்மை:
ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்
குழந்தைப் பராமரிப்புக் கைப் புத்தகம் வேண்டுவோர் எழுதுக,
இதுவே முகவரி: Johnson & Johnson Ltd., (C.I.C-20)
30 Forjett Street, Bombay-400 036.
LINTAS J&J 24 2012 TM

REGISTERED No. TN MS (S) 231
Registered as a Newspaper in Sri Lanka



பட்டர்ஃபிளை

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிரஷர் குக்கர்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தயாரிப்புத் துறையில 40 ஆண்டுகளுக்கும் மேல் அனுபவம் பெற்ற வல்லுநர்களால் தயாரிக்கப்படுவது நவீன பட்டர்ஃபிளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிரஷர் குக்கர்.

- பட்டர்ஃபிளை நீடித்த உழைப்பும் உறுதியும் கொண்டது. ஏனெனில் அது AISI : 304, non-magnetic ஸ்டீல் தகட்டினால் ஆனது.
- ஒட்டு கிடையாது. வெல்டிங் கிடையாது. பட்டர்ஃபிளை பாதுகாப்பான பிரஷர் குக்கராக அமைய வேண்டுமென்றே, கனமுள்ள 18-கேஜ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கொண்டு ஒரே ஷீட்டில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.
- உங்கள் தேவைகேற்ப 3, 5, 6, 7·5, 10 மற்றும் 12 லிட்டர் கொள்ளவுகளில் கிடைக்கிறது. பிரஷர் பானும் கிடைக்கும்.
- $1\frac{1}{2}$ மடங்கு விரைவான சமையல்.

பட்டர்ஃபிளை
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிரஷர் குக்கர்

தயாரிப்பாளர்கள் :
கங்காதரம் என்டர்பிரைஸஸ்
147, காரப்பாக்கம் வில்லேஜ்
பழைய மகாபலிபுரம் ரோடு,
சென்னை-600 096.
போன் : 552587, 555127, 556091



பட்டர்ஃபிளை — குறைந்த உயர்ந்த தரம். உங்களுக்கும், உங்கள் உற்றார் உறவினருக்கும்

ASP GE 916